# கேள்விகளும் பதில்களும்

மாலை வணக்கம், நண்பர்களே. நான் நம்முடைய அருமையான போதகருடன், சகோதரனோடு பேசிக்கொண்டிருந்தேன். நான்...ஒருவேளை, நான் சந்திக்கத் தவறிய சில காத்திருப்புகள் இருந்தன என்று நினைக்கிறேன்; என்னால் அதற்கு மேல் செல்ல முடியவில்லை. என்னே, நான் தரிசனங்களினால் மிகவும் கலங்கடிக்கப்பட்டிருக்கிறேன். பார்த்தீர்களா? இந்தப் பிற்பகலில் அவர்கள் அநேகர், ஏறக்குறைய பதினைந்து அல்லது இருபது பேர் இருந்தனர், அது என்னைத் துண்டு துண்டாக்கிவிடுகிறது. இங்கும் அங்கும் சிறிது சிறிதாகவே காணப்படுகின்றது. நான் வெளியே வந்து; நான், “சகோதரன் நெவில், உங்களால் முன் செல்ல முடிந்தால், தொடர்ந்து செல்லுங்கள்; நான் நழுவி வீட்டிற்குச் செல்ல விரும்புகிறேன்” என்றேன். நான், “நான் ஏறக்குறைய விழப்போகிறேன், என் இருதயமும் கூடப் படபடக்கிறது, குதிக்கிறது” என்றேன். மேலும் நான், “என்னால்—என்னால்... இப்பொழுது என்னால் நிற்கவே முடியவில்லை” என்றேன்.

2 அவர், “சகோதரன் பிரான்ஹாம், அந்தக் கேள்விகளுக்கு நீர் பதில் கூறி முடிக்க முடியுமா என்று ஜனங்கள் என்னிடம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்” என்றார். நான்—நான்—நான் ஒருபோதும் கடமையிலிருந்து விலகிச் செல்ல விரும்பவில்லை. நான் சகோதரர் நெவில் அவர்களைப் பாராட்டுகிறேன். ஒரு சில நிமிடங்களுக்கு என்னால் முடிந்தளவு சிறந்ததைச் செய்வேன். நான்—நான் அறிவேன்...பில்லி அங்கே உள்ளே வந்தான்; நான், “அவைகள் யாவற்றையும் நீ பெற்றுக் கொண்டாயா?” என்று கேட்டேன்.

3 அதற்கு அவன், “அப்பா, இருபது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இன்னமும் அங்கே நின்றுக் கொண்டிருக்கிறார்கள்—காத்திருக்கிறார்கள்” என்றான். எனவே என்னால்...இன்றைக்கு முப்பதுக்கும் மேற்பட்ட ஜனங்கள் உள்ளனர், அவர்களில் சுமார் இருபத்தைந்து தரிசனங்கள்; நான் எங்கே நின்று கொண்டிருக்கிறேன் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும். எனவே நான்—நான் உண்மையாகவே களைப்புற்றிருக்கிறேன், உண்மையாகவே மனரீதியாகச் சோர்வுற்றிருக்கிறேன். ஆனால் நாம் ஜெபிப்போம், நாம் நிறுத்திவிட்ட இடத்திலிருந்து இந்தக் கேள்விகளோடு துவங்குவோம். அதன்பின்னர் நான்...நான் அரிசோனாவுக்குச் சென்றால், என்னுடைய சிந்தையில் உள்ள இவைகள், நான் எல்லா நேரத்திலும் தொல்லைப்படுத்தப்படப் போகிறேன். கர்த்தருக்குச் சித்தமானால், நான் விரைவில் திரும்பி வந்து, விவாகம் மற்றும்

விவாகரத்தின் சரியான தன்மையின் பேரில் கூடிய விரைவில் இந்தப் பொருளின் பேரில் பேசுவேன். நாம் ஜெபிப்போமாக.

4 அன்புள்ள தேவனே, நீர் என் இருதயத்தை அறிந்திருக்கிறீர், நீர் என் உணர்வை அறிந்திருக்கிறீர்; என்னைக் குறித்த எல்லாவற்றையும் நீர் அறிவீர். தேவனே, நான் ஜெபிக்கிறேன்; அநேக ஜனங்கள்... கர்த்தாவே, நான் அவர்களை ரொம்ப காலம் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டேன்; அவர்கள் எண்ணிக்கை மிக அதிகம். ஆனால் இன்று வந்தவர்களில் ஒருவராவது உதவி பெறாமல் போவதில்லை என்பதை நான் அறிந்தவனாய் உமக்கு மிகுந்த நன்றி செலுத்துகிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியோடும், திருப்தியோடும் சென்றனர் என்று நான் நம்புகிறேன். நானே பதிலளிக்க முடியாத காரியங்களுக்கு, நீர் தரிசனங்களில் இறங்கி வந்து, அவர்களுடைய ஜீவியங்களில் வெளிப்படுத்தினீர், (அவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களில் அநேகர், இப்பொழுது அதைக் கேட்கிறார்கள், அது உண்மை என்பதை அறிந்திருக்கிறார்கள்), அந்தக் காரியங்கள் சம்பவிக்கக் காரணமாயிருந்த ஜீவியத்தில் இருந்த காரியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தினீர். கர்த்தாவே, அவர்கள் அறிந்திருக்கிறார்கள். உம்முடைய உதவிக்குப் புறம்பாக அதை நான் அறிந்துகொள்ள உலகத்தில் எந்த வழியும் இல்லை.

5 நான் ஜெபிக்கிறேன், பரலோகப் பிதாவே, நான் களைப்புற்றிருந்தாலும், உம்முடைய ஊழியக்காரனாக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அங்கே உள்ளே நின்று கொண்டிருந்தவர்களையும், உள்ளே வர விரும்பிய அநேகரையும் நீர் ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். தேவனே, அவர்கள்—அவர்கள் கவனித்துக் கொள்ளப்படுவார்கள் என்று நான்—நான்—நான் நம்புகிறேன், உம்முடைய மகத்தான பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு என்ன தேவையாயிருக்கிறதோ, அவை அனைத்தையும் அளிப்பார்.

6 அன்புள்ள தேவனே, இந்தக் கேள்விகளை முடிக்க எனக்கு உதவி செய்யும், அல்லது என்னால் முடிந்தளவு அவைகளை முடித்துத் தர எனக்கு உதவும், அப்பொழுது உம்முடைய ஜனங்கள் தங்களுடைய கேள்விகளுக்குப் பதிலைப் பெற்றுக்கொள்வார்கள். நான் அவர்களை அவைகளை எழுதும்படி கேட்டேன். அவர்கள் அவற்றை எழுதினார்கள், அதனால் அவர்களுக்காகப் பதிலளிக்க முயற்சிப்பது என் கடமையென உணர்கிறேன். ஆகவே உமக்கும் மக்களுக்கும் நான் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்வதற்குத் தேவையான பெலனை நீர் எனக்குத் தருவீராக என்று நான் ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

7 இப்பொழுது, இந்தக் காலையில் நாம் நிறுத்திய இடத்திலிருந்து நாம் துவங்குவோம். இவைகளில் சிலவற்றை என்னால் வாசிக்க முடியாமலிருக்கலாம், ஏனென்றால் அது...எனக்குத் தொண்டை

சற்று கரகரப்பாயுள்ளது, ஏனென்றால் நான் அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கிறேன். இன்றைக்கு எத்தனை பேர் பகுத்தறிதலில் தேவன் உங்களுக்கு என்ன அளிக்கிறார் என்பதை உண்மையாகவே பாராட்டுகிறார்கள்…? பார்த்தீர்களா? அவைகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்த ஆராதனைகள் இவைகளே. நீங்கள் அறிந்துகொள்ள விரும்பும் காரியங்களும், ஜீவியத்தில் மறைக்கப்பட்டுள்ள காரியங்களும் வெளிப்படுத்தப்பட்டு, கூறப்படுகின்றன.

8 மேலும்—மேலும் நினைவில் கொள்ளுங்கள், இந்தக் காரியங்களில் அநேக…இப்பொழுது, நிச்சயமாகவே சங்கடமான காரியங்கள் கூறப்பட்டு, வெளியே கொண்டு வரப்பட்டன என்பதை உங்களில் அநேகர் அறிவீர்கள், ஆனால் என்னையும் தேவனையும் தவிர வேறு யாருமே அதை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. அது உங்களுக்கும் தேவனுக்கும் இடையே இருக்க வேண்டும்; அதை அப்படியே விட்டுவிடுங்கள். மேலும்…கர்த்தர் வெளிப்படுத்தின காரியங்கள்…உங்களுக்கு உதவி செய்தன என்பதை உங்களில் எத்தனை பேர் அறிவீர்கள்? அப்படி நடந்திருந்தால் உங்கள் கைகளை உயர்த்துங்கள். பார்த்தீர்களா? அந்த மக்களைத் தெரியாமலேயே, அவர்களைப் பற்றி ஒன்றுமே தெரியாமல், ஆனால் அவர்—அவர் அதைச் செய்தார்.

9 இப்பொழுது நாம் முடிந்தளவு விரைவாகக் கேள்விகளுக்குச் சென்று, நம்மால் பதிலைப் பெற முடியுமா என்று பார்ப்போம்… இன்னொன்றும் கூட இங்கே எங்கோ இருக்கிறது. அது, “எண் மூன்று” என்று கூறுகிறது. அது ஒரு கடிதம் என்று நான் நினைக்கிறேன்; அது உண்மை, அது ஒரு கடிதம் தான். நான் வருந்துகிறேன். நான் அவைகளண்டை வரும்போது, அவைகளை இங்கே வைப்பேன், நான் நினைக்கிறேன்…ஆம், ஐயா, இதுவும் கூட ஒரு கடிதம்தான். அது, “கேள்வி” என்று கூறுகிறது, ஆனால் அது ஒரு கடிதம், ஒரு கடிதத்தில் உள்ள ஒரு கேள்வி என்று நான் நினைக்கிறேன். இல்லை, அதுவல்ல, அது ஒரு சொப்பனத்தைக் குறித்த ஒரு கேள்வியாயுள்ளது. சரி, நான் சொப்பனத்தை வாசிப்பேன், அதன்பின்னர் கர்த்தர் அதைக் குறித்த வியாக்கியானத்தை எனக்குத் தருகிறாரா என்று நான் பார்ப்பேன், என்னால் முடியும்போது அதை உங்களுக்கு அனுப்புவேன். உங்களுடைய முகவரியை நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்று நான் யூகிக்கிறேன். அது இருக்கிறதா என்று நாம் பார்ப்போம்; அப்படியில்லையென்றால், நான் உங்களுடைய முகவரியைக் கூறும்படி கேட்டுக் கொள்வேன், இந்தக் கேள்வியும் மற்றும்—மற்றும் சொப்பனமும் கொண்ட நபர். இல்லை, நீங்கள் அதைப் குறிப்பிடவில்லை.

10 கடிதத்தை எழுதியவர் (அது ஒரு…அது எனக்கு எழுதப்பட்டது), பில்லியிடம் உங்களுடைய முகவரியைக் கூறுங்கள், எனவே நான் அரிசோனாவிற்கு செல்லும் பாதையில் செல்லும்போது, நான் பாலைவனத்திற்குள் சென்று ஜெபிப்பேன். அவர் எனக்கு

வியாக்கியானத்தை அளித்தால், அவர் அதை அளித்தால், அதை எங்கே எழுத வேண்டும் என்பதை நான் அறிவேன், (உங்களுக்குப் புரிகிறதா? விளக்கம் கொடுப்பதற்கு அதில் அது இல்லாததால்...). ஆனால் அது நடக்கும் வரை நான் அதைச் சொல்லமாட்டேன், ஏனென்றால் அதை என்னால் மட்டுமே செய்ய முடியும்; அப்போதுதான் நான் சொல்வது சரி என்று எனக்குத் தெரியும். இப்போது.

**376. மணவாட்டி, இந்தச் செய்தியை விசுவாசிக்கிறவர்கள், மேற்கே சென்று, முடிவில் அங்கே கூடுவார்களா, நான் அதையே பொருட்படுத்துகிறேன்?**

**377. மேலும்** (இப்போது, ஒரு நிமிடம், இது...கொண்டு வாருங்கள்...ஒரு நொடி மட்டும். ஓ! இல்லை, அது அப்படியில்லை, அதில் "ச-ங்-கை" என்று இருக்கிறது. நான் நினைத்தேன்...அது வெளிப்படுத்தல் அதிகாரம், மேலும் "சங்கை. கேப்ஸ்" போலத் தெரிகிறது, அதைக் குறித்து நான்—நான்—நான் ஒரு சிறு குழப்பமடைந்திருந்தேன். அது...உங்களால் காண முடிந்தால், அது நிச்சயமாக அதைப் போன்றே காணப்படுகிறது. பார்த்தீர்களா? முதலில் "சங்கை. கேப்ஸ்" என்று இருந்தது, பிறகு இங்கே தொடர்ந்தது...இல்லை, பரவாயில்லை.) **வெளிப்படுத்தின விசேஷம் 12-ம் அதிகாரம் மணவாட்டியைக் குறித்து பேசுகிறதா?**

11 இல்லை! "இப்பொழுது மணவாட்டி கடைசியில் மேற்கே செல்வாளா, கடைசியில்?" எனக்குத் தெரிந்தவரை அல்ல; மணவாட்டி உலகளாவிய, உலகம் முழுவதிலும் இருக்கிறாள். இப்பொழுது, புரிந்து கொள்கிற ஒவ்வொருவரும் "ஆமென்!" என்று கூறுங்கள். [சபையோர், "ஆமென்!" என்று பதிலளிக்கின்றனர்.—ஆசி.]

நீங்கள் எங்கிருந்தாலும், நீங்கள் எங்கே மரித்தாலும், அது என்னவாயிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் கிறிஸ்துவுக்குள் மரித்தால், தேவன் உங்களை அவரோடு கொண்டு வருவார். நீங்கள் எரிக்கப்பட்டாலும், புசிக்கப்பட்டாலும், அழிக்கப்பட்டாலும் அது ஒரு பொருட்டல்ல, அவர் வரும்போது தேவன் உங்களைக் கிறிஸ்துவோடு கொண்டு வருவார். நீங்கள் மேற்கிலோ அல்லது வேறெங்கோ கூட வேண்டியதில்லை. கர்த்தர் உங்களை எங்கே வழி நடத்துகிறாரோ...

12 இருப்பினும், நீங்கள் மேற்கு நோக்கிச் செல்ல விரும்புவது போல் உணர்ந்தால், நான் செல்வதற்கு முன்பு, அதை இப்பொழுது தெளிவாகக் கூறட்டும். இப்பொழுது, எனவே...(அவர்கள் இந்தச் செய்தியைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்களா? அவர்கள் பதிவு செய்கிறார்களா? சரி.) எங்குச் செல்ல வேண்டும் என்பதை நான் உங்களுக்குக் கூற அனுமதிக்க வேண்டாம். நீங்கள் மேற்கே

வர விரும்புவது போல் உணர்ந்தால், மேற்கே வாருங்கள். நீங்கள் கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கே செல்ல விரும்புவது போன்று உணர்ந்தால், கர்த்தர் உங்களை வழி நடத்தும் இடத்திற்கு நீங்கள் செல்லுங்கள். புரிந்துகொள்கின்ற ஒவ்வொருவரும், “ஆமென்!” என்று கூறுங்கள். [சபையோர், “ஆமென்!” என்று பதிலளிக்கின்றனர்.—ஆசி.]

13 எங்குச் செல்லக் கூடாது என்று நான் எவரிடமும் கூற முயற்சித்துக் கொண்டிருக்கவில்லை. இந்த நேரத்தில் நான் தற்காலிகமாக வசிக்கும் அரிசோனாவில் உள்ள டூசானுக்கு நீங்கள் வருவீர்களானால்...நான் இன்று காலை உங்களிடம் கூறினது போல, போவதற்கு ஒரு வீடு இல்லாததால் எனக்கு வீட்டு ஏக்கம் ஏற்படுகிறது. எனக்கென ஒருவரோ, ஒரு இடமோ, அதை வீடு என்று அழைத்துச் செல்ல இருந்திருக்கக் கூடாதா என்று ஏங்குகிறேன். இன்றிரவு என்னிடம் பத்தாயிரம் டாலர்கள் இருந்தால், அதற்கான இடத்தை அளிக்க முடிந்தால்...அதைத் தாராளமாக எங்காவது கொடுத்துவிட்டு, “இதுதான் நான் அழைக்க விரும்பும் இடம்” என்று கூற இருந்தால், நான் அதைத் தாராளமாகத் தருவேன். எனக்கு இடமில்லை.

சகோதரன் பிளீமேன், நான்...நான் ஒரு பையனாய் இருந்த முதற்கொண்டே நீங்கள் என்னை அறிந்திருக்கிறீர்கள்; நான்—நான்—நான் ஒரு அலைந்து திரிபவன். ஒருபோதும் அலைந்து திரிபவராக ஆகாதீர்கள்; உங்களுக்குப் பிடித்தமான ஓர் இடத்தைக் கண்டுபிடித்து அங்கே குடியேறுங்கள்; கர்த்தராகிய இயேசுவுக்காகக் காத்திருங்கள்.

14 ஆனால் நான் வசிக்கும் அரிசோனாவில் உள்ள டூசானுக்கு மேற்கே நீங்கள் வர விரும்பினால், வரவேற்கிறோம்; நான் உங்களை ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைவேன். நீங்கள் என்னுடைய சகோதரன், சகோதரி. உலகத்தில் உள்ள எந்த ஒரு உதவியையும் நான் செய்வேன். மேலும்—மேலும் அங்கு வந்துள்ள உங்கள் யாவரையும், நான் உங்களை வரவேற்கும்படி செய்ய என்னால் இயன்றவரை முயற்சித்துள்ளேன், நான் அறிந்துள்ள ஒவ்வொரு காரியத்தையும் உங்களுக்குக் காண்பித்து, உங்களைச் சுற்றி அழைத்துச் சென்று, என்னால் முடிந்த ஒவ்வொரு காரியத்தையும் செய்வேன். நீங்கள் எப்பொழுதும் வரவேற்கப்படுகிறீர்கள்.

15 ஆனால் நீங்கள் இந்த நிலைமைகளின் கீழ் வெளியே வருவீர்களானால், மணவாட்டி அல்லது ஏதோ ஒன்று அரிசோனாவில் உள்ள டூசானிலிருந்து சென்று கொண்டிருக்கிறது என்று எண்ணினால், அங்கு மாத்திரமே, நீங்கள் தவறாக இருக்கிறீர்கள். அதற்காக வெளியே வராதீர்கள், அதற்காக வராதீர்கள், ஏனென்றால் அது ஒரு பிழை. அது சரியல்ல.

16 இப்பொழுது, வெளிப்படுத்தின விசேஷம் 12-ம் அதிகாரம்...ஆனால் ஒரு காரியத்தை மாத்திரம் கர்த்தர் எனக்கு

வெளிப்படுத்துகிறார் அல்லது என்னிடத்தில் பேசுகிறார்…நான் அந்தத் தரிசனங்களிலிருந்து வந்திருக்கிறேன் (உங்களுக்குப் புரிகிறதா?), அதை விலக்கி வைப்பது ஒருவிதமான கடினமாயுள்ளது. பார்த்தீர்களா? ஆனால் அவர் மீண்டும் மேற்குக்குச் செல்வது பற்றி மேலும் கூற, மீண்டும் என்னுடன் பேசுவது போல் தெரிகிறது.

17 இப்பொழுது, நான் முன்பே கூறியுள்ளதுபோல, நான் வெறுமனே அங்கே வெளியே இருப்பதற்காக அங்குச் செல்லவில்லை, நான் அங்கே வெளியே இருப்பதற்காக வழி நடத்தப்படுகின்றபடியால், நான் அங்கே வெளியே இருக்கிறேன். ஆனால் அங்கேயே தங்கியிருப்பது, அதை என்னுடைய வீடாக மாற்றுவது, அது தவறு என்று நான் நினைக்கிறேன். இல்லை, தேவன் என்னை அங்கே அனுப்பியிருக்கிற நோக்கம் நிறைவேறும் வரை, அது இன்னும் கொஞ்சக் காலமே நீடிக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் ஏன் போகப் போகிறேன் என்பதை இங்கு என்னால் கூற முடியாது, ஆனால் நான் வெறுமனே செல்வதற்காக மட்டும் செல்லவில்லை.

18 அன்றொரு நாள் ஒரு கேள்வி கேட்கப்பட்டிருந்தது: “நீர் ஏன் முதலில் அரிசோனாவுக்குச் சென்றீர் என்றும், அங்கே தூதர்கள் தோன்றினதை நாங்கள் அறிவோம். நீர் ஏன் இரண்டாம் முறை திரும்பி வந்தீர்?” என்று கேட்டனர். படித்த அந்தக் கேள்வி உங்களுக்கு நினைவிருக்கிறதா?

19 அதற்குப் பிறகு நான் திரும்பி வந்து, அங்கே வேத பண்டிதர் லீ வெயிலுக்கு முன்பாக உட்கார்ந்து கொண்டிருந்தது எத்தனை பேருக்கு நினைவிருக்கிறது, (அவர் எங்கோ கட்டிடத்தில் இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்) மற்றும் என்னுடைய மனைவியா? நான் அரிசோனாவைக் குறித்தும், நாங்கள் இங்கே தங்கியிருப்பதைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தேன், அப்பொழுது சுவற்றின் மேல் ஒரு கரம் தோன்றி, ஒளியில் எழுத்துக்களால், “அரிசோனாவுக்குத் திரும்பிச் செல்” என்று எழுதியது. எத்தனை பேருக்கு அது நினைவிருக்கிறது? அதனால்தான் நான் அங்கே திரும்பிச் சென்றேன். நான் ஏன் திரும்பிச் சென்றேன் என்பதை அறியாமல், நான் அங்குச் சென்றடைந்தபோது, அப்பொழுது நான் எதற்காகத் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதை அவர் வெளிப்படுத்தினார். நான் அதைக் கூறினால், அப்பொழுது சாத்தான் அதைத் தடுத்துவிடுவான். ஆனால் அவன் என்னுடைய இருதயத்தை அறியான். அவன் வார்த்தையல்ல, எனவே அவன் என் இருதயத்தை அறியான். ஆனால் நான் அதைப் பேசினால், அப்பொழுது அவன் அதைக் கேட்கிறான். எனவே இப்பொழுது, அதை நினைவில் கொள்ளுங்கள்.

20 இப்பொழுது, நான் அன்றொரு நாள் கூறினபோது, நான் அதை ஒருவிதமாகக் கூறியிருந்தேன்…ஒருவேளை உங்களுக்கு ஒரு தவறான எண்ணம் ஏற்படலாம்; நான், “அரிசோனாவிற்கு வர வேண்டாம்” என்றேன். பார்த்தீர்களா? நான், “வர வேண்டாம்!”

என்ற அர்த்தத்தில் கூறவில்லை. நான் என்ன பொருட்படுத்திக் கூறினேன் என்றால்: நீங்கள் வரும்படி வழி நடத்தப்பட்டால், நீங்கள் தொடர்ந்து அதைச் செய்யுங்கள், நீங்கள் கலிபோர்னியா, அரிசோனாவிற்கு வழிநடத்தப்பட்டால், நீங்கள் எங்கிருந்தாலும் சரி. ஆனால் நீங்கள் அங்குச் என்றால், "சகோதரன் பிரான்ஹாம், நான் அங்குச் செல்கிறேன், ஏனென்றால் நீங்கள் அங்கேயே தரித்திருந்து வார்த்தையைப் பிரசங்கிக்கப் போகிறீர்கள் என்று நான் நம்புகிறேன்," என்று கூறினால், நீங்கள் அங்குத் தவறாயிருக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். பார்த்தீர்களா? என்னுடைய பிரசங்கம் இங்கே இந்தக் கூடாரத்தில் உள்ளது; இங்கே தான் அந்த இடம் உள்ளது.

21 எனக்கு அரிசோனாவில் ஒரு ஆராதனை கூடக் கிடையாது. நான் அரிசோனாவில் இல்லை, ஆனால் ஒரு சில மணி நேரங்கள் மாத்திரமே இருக்கிறேன். நான்...கிறிஸ்துமஸுக்குப் பிறகு, வருடத்தின் முதல் நாளில் பீனிக்ஸ் என்ற இடத்தில் வர்த்தக புருஷருடைய கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கிறேன். நான் பெற்றுள்ளதெல்லாம் அவ்வளவுதான்; நான் அதை வாக்களித்தேன், வேறொன்றுமில்லை.

22 என்னுடைய அடுத்த கூட்டம், எனக்குத் தெரிந்த வரையில், பிரான்ஹாம் கூடாரத்தில் பென் தெரு எண் 8-ல் உள்ளது. இந்தியானாவின் ஜெஃபர்சன்வில்லில் உள்ள பிரன்ஹாம் கூடாரத்தில் பிரசங்கிக்க வேண்டும் என்று என் இதயத்தில் நான் வைத்திருக்கும் முப்பது அல்லது நாற்பது தலைப்புகளைப் பற்றி, ஒவ்வொன்றாக முழுமையாகப் பேசி முடிக்க ஒன்றிரண்டு வாரங்கள் ஆகும் என்பது எனக்குத் தெரியும்.

23 இப்பொழுது, நீங்கள் உண்மையாகவே வார்த்தையோடு தரித்திருக்க எங்காவது செல்ல விரும்பினால், அங்கே நம்முடைய செய்தி...எங்களுடைய செய்தியும் வித்தியாசமானதல்ல, உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் கேட்ட அதே செய்திதான், ஏதோ ஒன்று மாத்திரமே அதற்கு அதிகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செய்தி லூத்தர் பிரசங்கித்த அதே செய்தியாகும், வெஸ்லி பிரசங்கித்த அதே செய்தி, பெந்தேகோஸ்தே பிரசங்கித்த அதே செய்தி, அதனோடு ஏதோ ஒன்று சேர்க்கப்பட்டது. அது என்னவெனில், சீர்திருத்தக்காரர் விட்டுச் சென்ற முத்திரைகளின் வெளிப்பாடாய் உள்ளது (புரிகிறதா?), இந்த நாளில் வெளிப்படுத்தப்பட்டதை அப்பொழுது அறிய முடியாது. பெந்தேகோஸ்தே செய்தியை லூத்தரின் நாட்களிலோ அல்லது வெஸ்லியின் நாட்களிலோ அறிந்து கொள்ள முடியவில்லை; அது பெந்தேகோஸ்தே காலம்வரை காத்திருக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் பெந்தேகோஸ்தே காலமோ, அதைவிட மேம்பட்ட லூத்தரன் காலமேயன்றி வேறல்ல. தானியம் முதிர்ச்சியடைவதைப் போல அல்லது மற்ற காரியங்களைப் போலவே, சபையும் அவ்வாறே முதிர்ச்சியடைந்துள்ளது.

24 நான் இன்றிரவு பிரசங்கம் செய்திருந்தால், இங்கே வேதாகமத்தில் குறித்து வைத்துள்ள, *“எகிப்திலிருந்து பாலஸ்தீனாவுக்கு மாற்றப்பட்டிருந்த திராட்சை செடி”* என்ற பொருளின் பேரில் பிரசங்கித்திருப்பேன். இஸ்ரவேல் தம்முடைய திராட்சச்செடி என்று தேவன் கூறியிருந்தார் என்பதை உங்களில் எத்தனை பேர் அறிந்திருக்கிறீர்கள்? பிறகு அதிலிருந்து இயேசு திராட்சைச் செடியாக இருந்தார் என்பதை நான் மீண்டும் குறிப்பிடுவேன். சபையானது இப்பொழுது உலகத்திற்கு மாற்றப்பட்டு, அசுத்தத்திற்குள் வைக்கப்படவில்லை, ஆனால் கிறிஸ்துவுக்குள்ளாக அமைந்து, அது கனி கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. பார்த்தீர்களா? நான் பிரசங்கித்தால், அதுவே இன்றிரவிற்கான என்னுடைய செய்தியாக இருக்க வேண்டும். ஆனால் நான் இந்தக் கேள்விகளைக் கேட்பது நல்லது என்று எண்ணினேன், எனவே நான் அதைத் தவிர்த்துவிட்டேன். நான் திரும்பி வரும்போது ஒருக்கால் அதைப் பெற்றுக் கொள்வேன்.

25 வெளிப்படுத்தின விசேஷம் 12-ம் அதிகாரம் மணவாட்டியோடு சம்பந்தப்பட்டதல்ல. வெளிப்படுத்தின விசேஷம் 12-ம் அதிகாரம் (நான் அதை இதுவரை ஆராய்ந்து பார்க்கவில்லை, ஆனால் நான் அதை அறிவேன்), அது சூரியனில் நிற்கும் ஸ்திரீயானவள், அவளுடைய காலடியில் சந்திரன் உள்ளது. சந்திரன் நியாயப்பிரமாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது; ஸ்திரீயானவள் இஸ்ரவேலரை பிரதிநிதித்துவப்படுத்தினாள்; அவளுடைய நெற்றியில் உள்ள பன்னிரண்டு நட்சத்திரங்களும் அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், சமீபத்தில் கடந்தபோன அந்தப் பன்னிரண்டு சபைக் காலங்கள் போன்றவை. பார்த்தீர்களா? சூரியன் அவளுடைய தலையில் இருந்தது. சந்திரன் சூரியனின் நிழலாய் உள்ளது என்பதை நீங்கள் காண்கிறீர்கள், நியாயப்பிரமாணம் வரப்போகும் நன்மையான காரியங்களின் நிழலாயிருந்தது. அந்த ஸ்திரீ இஸ்ரவேலாய் இருக்கிறாள், மணவாட்டி அல்ல.

இப்பொழுது நான் அதிக நேரம் செலவிடமாட்டேன், ஏனென்றால் நான் அவைகளை கூறி முடிக்க வேண்டும்.

**378. ரோமர் 7:14-18, “நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது என்று நாம் அறிந்திருக்கிறோம்: நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு மாம்சத்துக்குரியவனாய் இருக்கிறேன். நான் செய்ய விரும்பாததை—நான் செய்கிறேன்: நான் செய்ய விரும்புவதை நான் செய்வதில்லை; ஆனால் நான் வெறுப்பதை நான் செய்கிறேன். ஆகையால் நான் விரும்பாததைச் செய்தால், (மு-டி-யு-...) நியாயப்பிரமாணத்தின்படி நான் ஒப்புக்கொள்கிறேன், அது நன்மையாயிருக்கிறது. இப்பொழுது, அதைச் செய்கிறவன் நானல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அதைச் செய்கிறது.” இதை என்னால்**

**புரிந்து கொள்ள முடியவில்லை.**

26 பாருங்கள், அவர்கள் வேத வாக்கியங்களை எழுதி வைத்தனர்; அதுதான் பவுல் ரோமர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறான். இப்பொழுது அவன் கூறினான்…நீங்கள் காணும்படியாக நான் அதை மெருகேற்றட்டும். அவர், “எனக்குள்ளாக இரண்டு நபர்கள் இருக்கிறார்கள்: சரியானதை, நான் செய்ய வேண்டுமென்று ஒருவன் விரும்புகிறான்; தவறானதை, நான் செய்ய வேண்டுமென்று மற்றவன் விரும்புகிறான். ஒவ்வொரு முறையும் நான் சரியானதைச் செய்யத் துவங்கும்போது, அப்பொழுது தவறானது என்னைத் தடுக்கிறது” என்றான்.

27 இந்தப் பிற்பகல் நேர்காணல்களில் கலந்துகொண்ட உங்களில் எத்தனை பேர், அதே காரியத்தை, இன்று காலையும் (பார்த்தீர்களா?), பேசியிருக்கிறீர்கள்? நான் இன்று காலைத் தற்காலிகமாக அதைப் பற்றிப் பேசினேன்.

28 நீங்கள் ஆறு புலன்களினால் கட்டுப்படுத்தப்படுகின்ற ஒரு புறம்பான மனிதனாயிருக்கிறீர்கள்; நீங்கள் விசுவாசமாகிய ஒரே உணர்வினால் கட்டுப்படுத்தப்படுகின்ற ஒரு உள்ளான மனிதனாயிருக்கிறீர்கள். ஆறு புலன்கள் விசுவாசத்தோடு இணங்கவில்லையென்றால், இந்த விசுவாசம் ஆறு புலன்களுடனும் இணங்கவில்லை. ஆனால் ஒன்று மற்றொன்றுக்கு முரணாக உள்ளது. இப்பொழுது, ஆறு புலன்களும் விசுவாசத்தோடு ஒத்துப் போகும் வரையில், அற்புதமானது; ஆனால் ஆறு புலன்களும் விசுவாசத்தோடு இணங்காதபோது, அப்பொழுது ஆறு புலன்களையும் அப்படியே விட்டுவிடுங்கள்.

29 இப்பொழுது, உதாரணமாக இங்கே, இயேசு ஒரு அறிக்கையை, ஒரு வாக்குத்தத்தத்தை அளித்தார். உள்ளான மனிதன் அது உண்மையென்று கூறுகிறான்; அது உங்களுக்கு உண்மையாயிருக்க முடியாது என்று புறம்பான மனிதன் பகுத்தறிகிறான், அப்பொழுது வெளிப்புற மனிதனை புறக்கணித்து, உட்புற மனிதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்பொழுது, அதே காரியத்தைக் குறித்து தான் பவுல் பேசிக்கொண்டிருக்கிறான். அவன் நியாயப்பிரமாணத்தின் கீழ் மாம்சபிரகாரமான பாவத்திற்கு விற்கப்பட்டான். நாம் ஒவ்வொருவரும் அப்படியே இருக்கிறோம். அந்தக் காரணத்தினால்தான் நாம்…நமக்கு உண்டாகும் தொல்லைகள் ஆகிய நான்கு அல்லது ஐந்து முறை விவாகம் செய்து கொள்ளுதல், *இது, அது,* மற்றும்…எல்லாவிதமான பாவங்களையும், விபச்சாரங்களையும், நம்முடைய ஜீவியத்தில் உள்ள ஒவ்வொரு காரியமும் அந்தக் காரியங்களின் காரணமாகவே உள்ளது. நாம் மாம்சபிரகாரமானவர்கள், அந்தப் பகுதி அழிந்து போக வேண்டும்; ஆனால் அப்பொழுது, உள்ளே, நாம் ஒரு ஆவி மனிதனாயிருக்கிறோம், உட்புறத்தில் உள்ள ஆத்துமா, அதுதான் தேவனுடைய வார்த்தையில் உள்ள விசுவாசம்; பின்பு நாம்,

தேவன் சொன்னதை ஏற்றுக்கொள்வதன் மூலம், விசுவாசத்தினால் நமது வெளிப்புறமான மனிதனை வார்த்தைக்குக் கீழ்ப்படுத்திக் கொள்கிறோம்.

30 நான் எப்படியொரு களையை எடுத்து, அதைக் கொண்டு ஒரு கோதுமை மணியை உருவாக்க முடியும்? அதைச் செய்வது எனக்குக் கூடாத காரியம். அது இருக்கக்கூடிய ஒரே வழி, அந்தக் களைக்குள் இருக்கும் கோதுமை களையிலிருந்து… “கோதுமையின் ஜீவன்” என்று அழைக்கப்படும் ஒரு உயிரணுவுக்கு அந்த மரபணு கடத்தப்பட்டிருப்பதுதான். அதன்பின்னர் நீங்கள் அந்தக் களையைப் புதைத்தால், அது ஒரு கோதுமை மணியை உற்பத்தி செய்யும் (அது உண்மை. புரிகிறதா?), ஏனெனில் களையில் கோதுமையின் ஒரு ஜீவியம் புகுத்தப்பட்டுள்ளது. களையின் ஜீவன் பிடுங்கப்பட்டுவிட்டது; ஆனால் அந்தக் களையின் சுபாவமோ இன்னமும் ஒட்டிக்கொண்டிருக்கும் (புரிகிறதா?), அது இந்தப் புதிய ஜீவியமானது பூமியிலிருந்து முழுவதுமாக வளர்ச்சியடைந்து, மீண்டும் எழுப்பப்படும் வரையில் இருக்கும். அது முளைக்கும்போது, அது இனிமேல் களையை அல்ல, ஆனால் கோதுமை—ஆனால் கோதுமையாகும். ஆனால் அது பூமியில் இருக்கும்போதும்…பூமியின் உள்ளேயும்…பூமியின் வெளியேயும்… ஒரு களை, அது இன்னமும் ஒட்டும் தன்மையோடு உள்ளது, ஆனால் அது உட்புறத்தில் கோதுமையின் தன்மையைப் பெற்றுள்ளது.

31 நீங்கள் இந்த ஜீவியத்தில் இருக்கும் வரைக்கும், நீங்கள் பிசுபிசுப்பான ஒரு மாம்ச சுபாவத்தை உடையவர்களாயிருக்கப் போகிறீர்கள், நீங்கள் உயிரோடிருக்கும் வரை அது உங்களைத் தொல்லைப்படுத்தப் போகிறது; ஆனால் உங்களுடைய உட்புறத்தில், நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்கள். நீங்கள் உயிரோடெழுப்பப்படும்போது, நீங்கள் கிறிஸ்துவின் சாயலில் இருக்கிறீர்கள், எல்லா பாவமும் உங்களை விட்டுப் போய்விடும். பார்த்தீர்களா? அது—அதுதான் காரியம்.

32 நான் இதைக் கூறலாமா? அது ஒரு நகைச்சுவையாகத் தென்படுகிறது. ஒரு இந்தியன்…அவர்கள் மிகவும் வேடிக்கையான ஜனங்கள். நான்…அவர்கள் வேடிக்கையாக இல்லை; அவர்கள் நமக்கு வினோதமானவர்கள்; ஆனால் அவர்கள் தங்களுக்கு சரியாகத் தென்படுகின்றனர். மேலும் நீங்கள் அவர்களைப் பற்றி அறிந்துகொண்டால், அவர்கள் பரவாயில்லை. ஒரு இந்தியன் ஒருமுறை அவன் இரட்சிக்கப்பட்டபோது அவனிடம் கேட்கப்பட்டது…

33 அரிசோனாவில் உள்ள பீனிக்ஸில் உள்ள ஒன்று எனக்கு நினைவிருக்கிறது. பில்லி ஜெப அட்டைகளைக் கொடுக்க அங்குச் சென்றுகொண்டிருந்தான். அவன் அங்கே நின்று ஜெப அட்டைகளைக் கொடுப்பான். அங்கே ஓடிச் சென்று ஜெப அட்டைகளை எடுத்துக் கொள்ள முடிந்த அந்த ஜனங்கள்…

நலமுடைய ஜனங்களுக்கு உண்மையாகவே தலைவலியோ, பல்வலியோ, அல்லது அவர்களுடைய பெருவிரலில் ஏதோ கோளாறு இருந்தபோதிலும், அவர்களுக்கு—அவர்களுக்கு அந்த ஜெப அட்டைகள் கிடைத்துவிட்டன, சகோதரர் ரடல். அவர்கள் அதைச் செய்தபோது, அப்பொழுது ஒரு ஜெப வரிசையில், எனக்கு ஒரே ஒரு காரியம் கிடைத்தது, யாரோ ஒருவர் தலைவலியோடு, யாரோ ஒருவருக்கு கால் விரலில் ஏதோ கோளாறு இருந்தது, அதைப் போன்ற ஏதோ ஒன்று இருந்தது. அங்கே ஜெப வரிசையில் சேர்க்கப்படாத புற்றுநோய் போன்ற நோய்களால் இறந்து கொண்டிருந்த மக்கள் அமர்ந்திருந்தனர். நான், "பில்லி, அங்கே போய் அந்த ஜனங்களிடம் அவர்களுக்கு என்ன கோளாறு என்று கேள். அவர்களுக்குப் புற்று நோய் இல்லையென்றால், அல்லது ஏதோ ஒரு பயங்கரமான வியாதி இல்லையென்றால், அல்லது அவர்களைக் கொல்லப் போகிற ஏதோ காரியம் இல்லையென்றால், அவர்களுக்கு ஜெப அட்டைகளைக் கொடுக்க வேண்டாம். கர்த்தரிடத்திலிருந்து உதவி கிடைக்காவிடில் மரிக்க ஆயத்தமாயிருக்கிற...அந்த ஜனங்களை ஜெப வரிசையில் மேலே கொண்டு வா. மற்றவர்கள் காத்திருக்கட்டும். அவர்கள் வேகமாக வரிசையாக வரட்டும் அல்லது அதுபோல ஏதேனும். ஆனால் மரிக்க ஆயத்தமாயிருக்கிற ஜனங்கள்..." என்றேன். நான், "அவர்களைக் கேள்" என்றேன்.

அதற்கு அவன், "சரி, நீர், 'அந்த அட்டைகளைக் கலந்து, அவர்களிடத்தில் கொடு' என்று கூறினீர். அதைத்தான் நான் செய்து கொண்டிருந்தேன்" என்றான்.

அப்பொழுது நான், "ஆனால் நீ அந்த மக்களை முந்திக்கொண்டு அங்கே செல்ல வைக்கிறாய், அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்... அந்த ஏழை முடவர்களாலும் மற்ற வர்களாலும் அவைகளைப் பெற முடியாது" என்றேன்.

"சரி, நான் அதைச் செய்வேன்."

அவன் கீழே இறங்கினான்; அங்கே ஒரு வயதான இந்தியன் இருந்தான் (அவர்கள் மிகவும் விசித்திரமானவர்கள்), அவர் நாற்காலியில் உட்கார மறுத்துவிட்டார். அவர்கள் அவருக்கு ஒரு நாற்காலியைக் கொடுத்தனர், ஆனால் அவர் கூடாரத்தில் தரையில் அமர்ந்தார். அவர் ஒரு தொப்பியை அணிந்திருந்தார்; அதைக் கழற்றவே இல்லை; அதன் பின்புறத்தில் ஒரு இறகு செருகப்பட்டிருந்தது, அப்படியே இருந்தது.

பில்லி அவரிடம் நடந்து சென்றான், அவன் அவரைக் கடந்து சென்றபோது, அவன், "உங்களுக்கு ஒரு ஜெப அட்டை வேண்டுமா?" என்று கேட்டான்.

"ம்ம்ம்."

அவன், “தலைவரே, உங்களுக்கு என்ன கோளாறு?” என்று கேட்டான்.

அவர், “நான் சுகவீனமாயிருக்கிறேன்!” என்றார்.

அவன், “ஆனால் உங்களுக்கு என்ன கோளாறு?” என்று கேட்டான்.

அவர், “நான் சுகவீனமாயிருக்கிறேன்!” என்றார்.

அவன், “ஆனால் உங்களுக்கு என்ன கோளாறு என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்!” என்றான்.

அவர், “நான் சுகவீனமாயிருக்கிறேன்!” என்றார்.

34 அவரிடமிருந்து இவ்வளவுதான் அவனால் பெற முடிந்தது, அவன், “சரி, நான் சிறிது நேரத்தில் திரும்பி வருகிறேன்,” என்றான். எனவே பில்லி ஜனங்களிடம் கேட்டுக்கொண்டே சென்றான். அந்த ஜெப அட்டைகள் குறைந்து கொண்டே போவதை பண்டைய இந்தியன் தொடர்ந்து கவனித்துக் கொண்டே இருந்தார். ஒவ்வொரு முறையும் அவன் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து அவைகளை வெளியே எடுத்தபோது, அவைகள் சற்று குறைந்து போயிருந்தன. சிறிது நேரத்திற்குப் பிறகு, அந்தப் பழைய இந்தியன் எழுந்து, நடந்து வந்து, தன்னையும் இதில் சேர்த்துக்கொள்ளுமாறு பில்லியின் முதுகில் தட்டினார். அவன் கூறினான்—அவன், “தலைவரே, உங்களுக்கு என்ன கோளாறு?” என்று கேட்டான்.

அவர், “நான் சுகவீனமாயிருக்கிறேன்!” என்றார்.

அதற்கு அவன், “சரி, தலைவரே, நீங்கள் அதை என்னிடம் கூற வேண்டும். வயிற்றுவலி, தலைவலி, இதுபோலச் சாதாரணமாக இருக்கும் ஆட்களுக்கு…இந்த அட்டைகளைக் கொடுக்க வேண்டாம் என்று தந்தை கூறினார். ‘உண்மையாகவே சுகவீனமாயிருந்த ஜனங்களுக்கு அவைகளைக் கொடு’” என்றார். மேலும், “தலைவரே, நீங்கள் எந்தளவு வியாதியாயிருக்கிறீர்கள்?” என்று கேட்டான்.

அவர், “நான் சுகவீனமாயிருக்கிறேன்” என்றார். அவன் மறுபடியும் அவரை அமரச் செய்தான்…அவனுடைய அட்டைகள் உண்மையாகவே கிட்டத்தட்ட தீர்ந்து போயிருந்தன. ஒரு இரண்டு நிமிடங்கள்…அவர் தொடர்ந்து அந்த அட்டைகளைக் கவனித்துக் கொண்டேயிருந்தார். அவர் திரும்பி வந்து அவனை மீண்டும் தட்டினார். அவர் தன்னுடைய கரத்தை நீட்டினார். பில்லி அந்த அட்டையைத் தன்னுடைய கரத்தில் வைத்து, “தலைவரே, ‘நான் வியாதிப்பட்டிருக்கிறேன்’ என்று அங்கே எழுதுங்கள்” என்றான்.

35 அவர் ஜெப வரிசையில் நின்றார், நான் அவருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன், நான், “தலைவரே, நீர் விசுவாசிக்கிறீரா?” என்று கேட்டேன்.

அதற்கு அவர், “அது உண்மையே” என்றார்.

நான், "சரி, தேவன் உங்களைச் சுகப்படுத்துவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "அது உண்மையே" என்றார்.

நான், "நீர் ஒரு நல்ல பையனாயிருப்பீரா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "அது உண்மையே" என்றார்.

சுமார் ஒரு வாரம் கழித்து நான் அவரைச் சந்தித்தேன். சகோதரன் பிரெட் சாத்மன் அங்கிருந்தார் என்று நான் நினைக்கிறேன். அது அவர்கள்...கூடாரத்தில் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோதுதான். அது பீனிக்ஸில் இருந்தது. இந்த வாரத்தில் சற்று கழித்து நான் அவரைச் சந்தித்தேன்; நான், "தலைவரே, நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "அது உண்மையே" என்றார். பின்புதான் தெரிந்தது, நான் பேசினேன்...அங்குள்ள அந்த மிஷனரியின் பெயர் என்னவென்பதை நான் கண்டறிந்தேன், ஒரு வெள்ளை மீசையையுடைய அந்த வயோதிக மனிதன், அந்தப் பழங்குடியினர் இருக்கிறாரா? அவரது பெயர் எனக்கு நினைவுக்கு வரவில்லை. ஓ, அவர் ஒரு அருமையான வயதான நபர். அவருடைய மனைவி புற்று நோயிலிருந்து குணமடைந்தாள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்கு அவர், "சகோதரன் பிரான்ஹாம் அவரால் கூற முடிந்ததெல்லாம் அவ்வளவுதான்" என்றார். மேலும், "'நான் சுகவீனமாயிருக்கிறேன்' என்று சொல்ல அவருக்குக் கற்றுக் கொடுத்தேன். அந்த ஒரு காரியத்தை மாத்திரமே அவரால், 'அது உண்மையே' என்று கூற முடிந்தது" என்றார். எனவே அதைக் குறித்தது—அதுதான், நீங்கள் பாருங்கள். "அது சரி. நான் சுகவீனமாயிருக்கிறேன்!"

36 ஒருமுறை அவர் மனமாற்றமடைந்து, பரிசுத்த ஆவியைப் பெற்றபோது, அவரிடம், "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டதாக ஒருவர் என்னிடம் கூறினார்.

மேலும் அவர், "மிகவும் நல்லதாகவும், மிகவும் மோசமானதாகவும் இருக்கிறேன்" என்றார்.

அவர், "சரி, மிக மோசம் என்றும் மிக நல்லது என்றும் நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர், "நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டது முதற்கொண்டே" என்றார். அவர், "இரண்டு நாய்கள் எனக்குள் இருந்து வருகின்றன, அவைகளில் ஒன்று கறுப்பு நிற நாயும், அவைகளில் ஒன்று வெள்ளை நிற நாயும்" என்றார். மேலும், "அவைகள் எல்லா நேரத்திலும் வாக்குவாதம் செய்கின்றன" என்றார். மேலும், "அவை உறுமிக்கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிடுகின்றன" என்றார். மேலும், "வெள்ளை நாய் நான் நன்மை செய்ய விரும்புகிறது; கறுப்பு நாய் நான் கெட்ட காரியம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறது" என்றார்.

"தலைவரே, அவர்களில் யார் சண்டையில் வெல்லுகிறது?" என்று கேட்டார்.

37 மேலும், "அது தலைவர் எந்த ஒன்றை அதிகமாகப் போஷிக்கிறார் என்பதைப் பொறுத்தது" என்றார். எனவே அது இங்கே ஒரு நல்ல பதில் என்று நான் நினைக்கிறேன். பார்த்தீர்களா? அது உங்களுக்குள்ளாக இருக்கிற சரீரத்தின் யுத்தத்தின் பேரிலேயே சார்ந்துள்ளது; நீங்கள் எதைத் திருப்திப்படுத்துகிறீர்கள், எந்தச் சுபாவத்தை திருப்திப்படுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்தது, உலகின் காரியங்களைத் தொடரும் மாம்ச சுபாவத்தை அல்லது தேவனுடைய காரியங்களைத் தொடரும் ஆவிக்குரிய சுபாவத்தை திருப்திப்படுத்துவது. அதுவே அதைச் செய்கிறது.

**379. தேவனுடைய ஒவ்வொரு குமாரனும் அற்புதங்களையும், அடையாளங்களையும், அதிசயங்களையும் செய்யும் அளவுக்கு அபிஷேகம் செய்யப்பட முடியுமா, அல்லது இது... பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலின்படி நடக்கிறதா?**

38 ஆம், அது பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலின்படியே உள்ளது. நீங்கள் ஒரு தேவனுடைய குமாரனாயிருந்தாலும் அல்லது ஒரு தேவனுடைய குமாரத்தியாயிருந்தாலும், நீங்கள் யாராயிருந்தாலும், நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்போது, அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் காரியங்களைச் செய்யும்படி உங்களை வழிநடத்துகிறார்.

39 எனக்கு நேரமில்லை. நான் உங்களுக்குச் சிறு கதைகளைக் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு முறையும் நான் அதைக் குறித்து நினைக்கும்போது, அதைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் இது ஒரு நிமிடம் மாத்திரமே இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

40 அது மிசிசிப்பியில் உள்ள மெரிடியன் என்ற இடத்தில் இருந்தது. ஒருத்துவ அமைப்பைச் சேர்ந்த உங்களில் பலருக்கு, சகோதரன் பிக்பி...என்னுடைய கூட்டங்களுக்கு நிதியுதவி செய்துகொண்டிருந்தார், அவர் ஒருத்துவ சகோதரன். ஒரு இரவு கூட்டத்தில், பில்லி பால் அரங்கத்திற்கு சென்று ஜெப அட்டைகளைக் கொடுத்திருந்தான். ஓ, மழை பெய்து கொண்டிருந்தது. ஜனங்கள் வெளியே குடைகளோடும் மற்ற காரியங்களோடும் நின்று கொண்டிருந்தனர். பில்லி ஜெப அட்டைகளைக் கொடுத்தான், மேலும் ஒரு...அப்பொழுது அவன் என்னை அழைத்துச் செல்ல வந்தான். அங்கே...அவன் என்னை அழைத்துச் செல்ல வந்தபோது, அங்கே ஒரு பெண்மணி முன்னால் அமர்ந்திருந்தாள், அங்கே மற்றொரு பெண்மணி ஒரு சிறு குழந்தையுடன் நடந்து, அதை அமைதிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தாள். இந்தச் சிறிய பெண்மணி ஒரு எளிய பருத்தி ஆடையுடன் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தாள், அது என்னவாயிருந்தாலும், அவள் ஒரு

தாயாகவும் கூட இருந்தாள். அவள் அந்தப் பெண்மணியைக் கண்டபோது, பரிசுத்த ஆவியானவர் அந்த ஸ்திரீயினிடத்தில், “போய் அந்தக் குழந்தைக்காக ஜெபி” என்று அவளுடைய இருதயத்தில் ஏதோ ஒன்றைப் பேசினார்.

41 “சரி,” அவள், “அடுத்த முறை அவள் கடந்து செல்லும்போது, நான் அவளுக்காக ஜெபிப்பேன்” என்றாள். அவள் மீண்டும் கடந்து சென்றபோது, அந்தப் பெண்மணி ஒரு ஜெப அட்டையை வைத்திருந்தாள். “ஓ,” அவள், “அந்தக் குழந்தைக்காக என்னால்—என்னால் ஜெபிக்க முடியாது” என்றாள். “சகோதரன் பிரான்ஹாம் அந்தக் குழந்தைக்காக இன்றிரவு ஜெபிப்பார். சகோதரன் பிரான்ஹாம் குழந்தைக்காக ஜெபிக்கப் போகிறாரேயானால், அதற்காக ஜெபிக்க நான் யார்?” என்றாள். இப்பொழுது, அது பயபக்தியாயிருந்தது, அது அருமையாயிருந்தது, ஆனால் அது எப்பொழுதுமே தேவனுடைய சித்தமாக இருக்க முடியாது. சில நேரங்களில் அது வித்தியாசமாக இருக்கும்.

பரிசுத்த ஆவியானவர் அவளிடத்தில் தொடர்ந்து, “போய் அந்தக் குழந்தைக்காக ஜெபி” என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

முடிவாக அவள், “அந்த ஸ்திரீ என்னை முற்றிலுமாக நிராகரித்துவிடுவாள். அவள் அந்த ஜெப அட்டையை வைத்திருக்கிறாள் என்பதை அறிந்து, அந்தக் குழந்தைக்காக நான் ஜெபிப்பதை அவள் விரும்பமாட்டாள். அவள் அந்தக் குழந்தையை இங்கே கொண்டு வந்தாள், நான் அதற்காக ஜெபிப்பதற்காக அல்ல, ஆனால் சகோதரன் பிரான்ஹாம் அதற்காக ஜெபிக்கும்படிக்கே” என்று நினைத்தாள்.

எனவே பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து, “அந்தக் குழந்தைக்காகப் போய் ஜெபி” என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

முடிவாக அவள், “பாருங்கள், “சரி, என் நிம்மதிக்காக நான் கூறுவேன்…நான் என்னுடைய இருக்கையை அவளுக்குத் தருவேன்” என்றாள். எனவே அவள், “தேனே (ஒரு சிறிய தாயார் மற்றொரு தாயிடம் பேசுகிறாள்), நீங்கள்—நீங்கள் விரும்புவீர்களா…? நீ அந்தக் குழந்தையைப் வைத்திருக்கிறாய்,” “நீர் வந்து இங்கே அமர்ந்து, என்னுடைய இருக்கையில் அமருவீர்களா?” என்று கேட்டாள்.

அவள், “ஓ, தேனே, நான் உன்னுடைய இருக்கையில் அமர விரும்பவில்லை” என்றாள். மேலும், “நான் குழந்தையை அமைதிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்” என்றாள்.

மேலும், “ஆனால் நீர் மிகவும் களைப்புற்று களைப்படைந்து காணப்படுகிறீர்” என்றாள்.

அவள், “ஆம்” என்றாள்.

அவள், “சரி, இங்கே உட்கார்ந்து, என்னுடைய இருக்கையில் உட்காருங்கள்” என்றாள். மேலும் அவள், “நீங்கள் ஒரு ஜெப

அட்டை வைத்திருப்பதை நான் காண்கிறேன். ஒரு வேளை நீங்கள்… சகோதரன் பிரான்ஹாம் உங்களுடைய குழந்தைக்காக ஜெபிக்கப் போகிறாரா?" என்று கேட்டாள்.

அவள், "இந்த எண் அழைக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்றாள்.

அதற்கு அவளோ, "பாருங்கள் நானும் கூட அப்படித்தான் நம்புகிறேன்," என்றாள். அவள், "சகோதரியே, நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?" என்று கேட்டாள்.

அதற்கு, "ஓ, ஆம்!" என்றாள்.

அவள், "நானும் கூட ஒரு கிறிஸ்தவர் தான்" என்றாள். மேலும், "நான் இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தது முதற்கொண்டே, கர்த்தருடைய ஆவியானவர் என்னிடம், 'அந்தக் குழந்தைக்காக ஜெபி' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் எனக்கு அனுமதி அளிப்பீர்களா? அந்தக் குழந்தை அழைக்கப்பட்டால், சகோதரன் பிரான்ஹாம் அதற்காக ஜெபிப்பார் என்பதை நான் அறிவேன். நீங்கள் உங்களுடைய அட்டையை வைத்துக்கொள்ளுங்கள், அவர் அதை அழைப்பார்" என்றாள். மேலும், "ஆனால் நான் என்னுடைய கரங்களைக் குழந்தையின் மீது வைத்து, எனக்கு நானே ஆறுதல் தேடிக் கொள்ள ஒரு சிறு ஜெபத்தை ஏறெடுத்தால், என்னை அழைப்பதிலிருந்து வெளியே வர, அது—அது உங்களைப் புண்படுத்திவிடுமா?" என்று கேட்டாள்.

42 அவள், "ஏன், நிச்சயமாக இல்லை, அன்பே. குழந்தைக்காக ஜெபியுங்கள்" என்றாள். அது ஒரு சிறிய நீலநிறக் குழந்தையாயிருந்தது, எனவே அந்தச்—அந்தச் சிறிய பெண்மணி அதற்காக ஜெபித்தாள். அவள் அந்தப் பெண்ணுக்கு இருக்கையை விட்டுக்கொடுத்தாள், அவள் மூன்றாவது மேல்மாடிக்கு ஏறி நின்றுகொண்டிருந்தாள். அங்குள்ள ஒரு கிறிஸ்தவ சகோதரன், போதுமான பெருந்தன்மையுள்ளவர், எழுந்து நின்று இந்தப் பெண்மணிக்கு ஒரு இருக்கையைக் கொடுத்தார், எனவே அவள் அமர்ந்தாள்.

43 ஏறக்குறைய அரை மணி நேரம் கழித்து, நான் கூட்டத்திற்கு வந்து, ஒரு சில நிமிடங்கள் பேசி, ஜெப அட்டைகளை அழைத்தேன்; இந்த ஸ்திரீ அந்தக் குழந்தையுடன் வரிசையில் மூன்றாவது அல்லது நான்காவதாக இருந்தாள். அவள் அங்கே அமர்ந்து, அவள், "ஓ, கர்த்தாவே, உமக்கு நன்றி. இப்பொழுது, நான் அந்தச் சிறிய தாயாருக்காக மிகவும் வருந்தினேன், குழந்தை இப்பொழுது சுகமடைந்துவிடும் என்று நான் விசுவாசிக்கிறேன், ஏனென்றால் சகோதரன் பிரான்ஹாம்…மூன்றாவது அல்லது நான்காவது, அவர் அந்த ஒன்றைப் அழைப்பார்" என்று கூறினாள். "கர்த்தாவே, உமக்கு நன்றி" என்றாள், அந்தத் தாய் அங்கே அமர்ந்து அந்தக் குழந்தைக்கான இரக்கத்தை உணர்ந்தாள். சரி.

44 அதன்பின்னர் நான் மேலே வந்தபோது, குழந்தைக்காக ஜெபிக்கத் துவங்கினேன், அந்தப் பெண்மணி வந்தபோது, நான் அவளை நோக்கிப் பார்த்து, "இப்பொழுது, உங்களுடைய குழந்தை ஒரு நீல நிறக் குழந்தை. ஜெபிக்கப்படுவதற்காக நீர் அதை இங்குக் கொண்டு வந்தீர். இப்பொழுது, உங்களுடைய பெயர் திருமதி *இன்னார்-மற்றும்-இன்னார்,* நீங்கள் *இப்படிப்பட்ட-மற்றும்-இப்படிப்பட்ட* ஒரு இடத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்; ஆனால் குழந்தை ஏற்கனவே சுகமடைந்துவிட்டது. திருமதி *இன்னார்-இன்னார்* என்ற பெயர் கொண்ட ஒரு ஸ்திரீ தன்னுடைய இருதயத்தில் பாரத்தை உடையவளாயிருந்தாள், இங்கே மேல்மாடியில் (மூன்றாவது மேல்மாடியில், நான்காவது வரிசையின் இறுதியில் முதல் ஆளாக) அமர்ந்துகொண்டு, குழந்தைக்காக விசுவாச ஜெபத்தைச் செய்தாள்; குழந்தையும் ஏற்கெனவே குணமடைந்துவிட்டது." அவள் கிட்டத்தட்ட தன்னுடைய இருக்கையை விட்டுக் கீழே விழுந்துவிட்டாள். பார்த்தீர்களா?

45 இப்பொழுது, அவள் அதைச் செய்திருக்கவில்லையென்றால் எப்படியிருக்கும்? நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? இப்போது, நான் அந்தக் குழந்தையிடம் காட்டும் அனுதாபத்தை விட, அந்தப் பெண் அந்தக் குழந்தையிடம், ஒரு தாயாக, அதிக அனுதாபம் காட்டியிருப்பாள். புரிகிறதா? மேலும் அந்தத் தாய்... புரிகிறதா?

46 "நாம் எல்லாருமே அற்புதங்களைச் செய்ய முடியுமா?" ஆம். நீங்கள் அற்புதங்களைச் செய்யும்படி பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படும்போது, போய் அதைச் செய்யுங்கள், ஏனென்றால் அது பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறது.

47 இப்பொழுது, அந்த ஸ்திரீ தேவன் அவளிடம் கூறினதை நிறைவேற்றாமல் இருந்திருந்தால், ஒரு வேளை அவளுக்கு ஆவியில் கடிந்துகொள்ளுதல் உண்டாயிருந்திருக்கலாம் (உங்களுக்குப் புரிகிறதா?), அவள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்திருப்பாள். எப்பொழுதுமே, நீங்கள் கிறிஸ்தவராயிருந்து, ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படி ஏதோ ஒன்று உங்களைத் தூண்டிக்கொண்டிருந்தால், போய் அதைச் செய்யுங்கள். போய் அதைச் செய்யுங்கள்; அதைச் சந்தேகிக்க வேண்டாம்; போய் அதைச் செய்யுங்கள்.

"நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இது....?" இங்கே அவைகளில் மற்றொன்று உள்ளது, அல்லது நான் தவறாகப் புரிந்து கொண்டேன்...ஆம், நான்...அது இந்தக் காலைக்கான ஒன்றாகும். "ஒரு பெண் இரவு நேர ஆடை அணிந்திருப்பது, அது மனிதனுடைய ஆடைகளா?" அது இங்கே இந்த மற்றவைகளுக்குள்ளாகக் கலந்திருக்க வேண்டும்.

"சகோதரன் பிரான்ஹாம், தேவன் அந்தக் காரியத்தைச் செய்துகொண்டிருந்தார்...தேவன்...நான் செய்து கொண்டிருந்த

காரியம் சம்பவித்தபோது, ஒலிநாடா…?” ஓ, ஆம், நாம் அதை இந்தக் காலையில் பெற்றிருந்தோம். அவற்றில் சிலவற்றைக் நான் குழப்பியிருக்க வேண்டும். நான் அவைகளை கிழித்தெறிய வேண்டும், ஆனால் நான் அதைச் செய்ய வெறுக்கிறேன்.

**380. சகோதரன் பிரான்ஹாம், பரலோக நகரத்திற்கு வெளியே பூமியை நிரப்புவது யார்?**

**381. பிறப்பு முதல் மரணம் வரைக்கும் அவர்களோடு தரித்திருக்கிற ஒவ்வொரு நபருடைய தூதனைக் குறித்தும் விளக்கிக் கூறுங்கள்.** மிக நல்ல கேள்வி.

48 இவைகளைக் கடந்து செல்ல நான் வெறுக்கிறேன்; அவை நல்ல கேள்விகள். இந்தக் காரியங்களை என்னுடைய—என்னுடைய பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பார்த்தீர்களா? “இப்போது, நகரத்திற்கு வெளியே பூமியில் யார் குடியேறுவார்கள்?” நகரத்திற்கு வெளியே, மீட்கப்பட்டவர்களே பூமியை நிரப்புவார்கள். ஆனால் அவர்கள் மணவாட்டி என்று அழைக்கப்பட்ட தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள். மணவாட்டி இராஜ்ஜியத்திற்குள் இராஜாவுடன் வாழ்வாள். வெளியிலே பூமியின் ராஜாக்கள் பாடுபட்டு, தங்கள் பிரயாசங்களைக் கொண்டு வருவார்கள், அவர்களுடைய… பாடுபட்டதினால் அல்ல, ஆனால் தங்களுடைய கனிகளை நகரத்திற்குள்ளே கொண்டு வருவார்கள். இரவில் வாசல்கள் மூடப்படாது.

49 இப்பொழுது…இப்பொழுது, மலையின் உச்சியில் உள்ள இந்த ஒளி முழு உலகத்தையும் பிரகாசிக்கச் செய்யாது, அது நகரத்தை வெளிச்சமாக்கும். ஆனால் அது பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் காணப்படக்கூடும்; ஆனால் அது பூமியை பிரகாசமாக்காது, ஏனென்றால் வேதம், புதிய உலகத்தில், அதாவது ஒரு ஓய்வு நாளிலிருந்து மற்றொன்றுக்கு, ஒன்றிலிருந்து ஒரு அமாவாசையிலிருந்து மற்றொன்றுக்கு (உங்களுக்குப் புரிகிறதா?) ஜனங்கள் கர்த்தருடைய சந்நிதியில் சீயோனில் உள்ள நகரத்திற்கு வந்து தொழுதுகொள்ள வருவார்கள்.

50 இப்பொழுது, அவர்கள் நகரத்திற்கு வெளியே இருப்பார்கள், மணவாட்டி அல்ல, ஆனால் இரண்டாம் உயிர்த்தெழுதலில் வரும் ஜனங்கள் ஆதாமைப் போல, நிலத்தை உழுபவர்களாயிருப்பார்கள், மேலும் இது போன்று, தோட்டத்தைக் கவனித்துக் கொள்பவர்களாயிருப்பர். ஆனால் இராஜாவும் இராணியும் நகரத்தில் தரித்திருப்பார்கள்.

51 “பிறப்பு முதல் அவர்களோடு தரித்திருக்கிற ஒவ்வொரு நபரின் தூதனைக் குறித்தும் விளக்கிக் கூறுங்கள்.” இப்பொழுது, நீங்கள் கவனிப்பீர்களேயானால்…இப்பொழுது, இது மிகவும் ஆழமானது. இப்பொழுது, நான் ஒருபோதும்…நான் இதைச் சும்மா

எடுத்துக்கொண்டேன். இப்பொழுது…அதன் ஒரு பாகம் ஒரு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது, மற்றொன்று பென்சிலால்—இல்லை பேனாவினால் எழுதப்பட்டுள்ளது.

52 இப்பொழுது, ஒரு தூதன் இருக்கிறான், ஆனால் இந்தக் கர்த்தருடைய தூதன் அவர்களுக்குப் பயந்தவர்களைச் சூழப்…பாளயமிறங்குகிறான். பார்த்தீர்களா? இப்பொழுது, பாவிகளுக்குத் தூதர்கள் உண்டு என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கவில்லை. ஆனால் மீட்கப்பட்டவர்கள் மாத்திரமே தூதர்களை உடையவர்களாயிருக்கிறார்கள். அது உங்களுக்குத் தெரியுமா? கர்த்தருடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள்.

53 இப்பொழுது, தூதர்கள் செய்தியாளர்களாயிருக்கிறார்கள். அது மிகவும் பரிபூரணமாயிருக்கிறதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன், அது உங்களுக்கு முன்குறிக்கப்படுதலை நிரூபிக்கும். புரிகிறதா?

54 இப்பொழுது, தாயினுடைய இருதயத்தின் கீழ் ஒரு சிறு குழந்தை உருவாகிக் கொண்டிருக்கும்போது…இந்த விஷயங்களைப் புரிந்துகொள்ளும் சிறிய பிள்ளைகளே, பாருங்கள், கர்த்தர் உங்களைத் தாய்க்கு அளித்திருக்கிறார். அவள் உங்களை அவளுடைய இருதயத்தின் கீழ் கொண்டு சென்றாள், ஏனென்றால் நீங்கள் அவளுடைய இருதயத்திற்கு நெருக்கமாக இருக்கிறீர்கள். அதன்பின்னர், ஒரு நாள் கர்த்தர் இறங்கி வந்து, தாயின் இருதயத்திலிருந்து உங்களை விடுவித்தார், அவளுடைய இருதயத்திலிருந்து விலகிச் சென்றாலும், நீங்கள் எப்பொழுதுமே அவளுடைய இருதயத்தில் இருப்பீர்கள்.

55 இப்பொழுது, இந்தச் சிறிய சரீரம் உருவாகிக் கொண்டிருக்கையில், தாயினுள் சிறு இயற்கையான சரீரம் உருவாகிக் கொண்டிருக்கையில், இந்த இயற்கையான சரீரம் பிறந்தவுடனே அதைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிற ஒரு ஆவிக்குரிய சரீரம் பூமியில் உள்ளது. இப்பொழுது, குழந்தை உயிருள்ள தசைகளோடு, ஒரு துடிக்கும் இருதயத்தோடு பிறக்கிறது, ஆனால் அதில் ஜீவ சுவாசம் இல்லை. அதன் தசைகள் துடிக்கின்றன… புரிகிறதா? அப்படியானால், பாருங்கள், அதிலிருந்து வித்தியாசமான ஏதாவதொன்று இருந்திருந்தால், பின்னர் அதற்குள் வர வேண்டிய ஒரு ஆவி இருந்திருக்கவில்லையென்றால், அப்பொழுது நம்முடைய சுவாசம் நம்மை விட்டுச் செல்லக்கூடும், நாம் அதற்கு மேல் சுவாசிக்காமல், இன்னும் உயிரோடிருப்போம். ஆனால் இந்தச் சரீரம்…அல்லது சுவாசத்திலிருந்து பிராணவாயுவைப் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் (நம்முடைய நுரையீரல்களை உட்கொள்ளுதல் மற்றும் வெளியேறுதல்), அப்பொழுது நாம் மரித்தவர்களாயிருக்கிறோம்.

56 இப்பொழுது, ஆனால் தாய்...அந்தச் சிறு குழந்தை தாயினுடைய இருதயத்திலிருந்து பூமிக்கு விடப்படுகிறது. “விழுந்துவிட்டது,” நான் என்ன கூறிக் கொண்டிருக்கிறேன், நான் எந்த நிலையில் இருக்கிறேன்...நான் இந்த வழியில் கூறிக் கொண்டிருப்பதற்கான காரணம் உங்களுக்குப் புரிகிறது. சிறு குழந்தை கீழே போடப்படும்போது, என்ன சம்பவிக்கிறது? அது வெளியே வந்தவுடனே, அது அழத் துவங்கவில்லையென்றால், வைத்தியர், மருத்துவச்சி அல்லது வேறு யாராகிலும் ஒருவர் அதை அடிப்பார். [சகோதரன் பிரான்ஹாம் தன்னுடைய கரங்களைத் தட்டுகிறார்—ஆசி.], அதை நீட்டுகிறார். அதற்கு ஒரு அதிர்ச்சி உண்டாயிருக்க வேண்டும், என்ன சம்பவிக்கிறது?

57 கவனியுங்கள், ஒரு தாய், அவள் எப்பொழுதுமே இரக்கமற்றவளாகவும், கொடூரமாகவும் இருக்க முடியும், ஆனால் அந்தக் குழந்தை பிறப்பதற்கு சற்று முன்பு, ஒரு குறிப்பிட்ட தயவு உள்ளே வருகிறது. அவள் ஒரு தாயாக இருக்கும்போது நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? அவளைக் குறித்து இனிமையான ஏதோ ஒன்று உண்டு; அவள் எப்பொழுதுமே அந்த இனிமையை எடுத்துக்கொள்கிறாள். ஏனென்றால் அந்தக் குட்டி தூதன், குட்டி ஆவி, இந்தச் சிறிய கூடாரத்திற்கு ஒரு சிறு செய்தியாளன் உலகத்திற்கு வர ஆயத்தமாயிருக்கிறான். அதன்பின்னர், இந்தக் குட்டி தூதன் சரீரத்திற்குள்ளாக வரும்போது, (அது பூமியின் ஒரு சிறு தூதன், இந்தச் சரீரத்தை எடுத்துக்கொள்ளத் தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு ஆவி), அப்பொழுது அந்தக் குழந்தைக்கு ஒரு தெரிந்து கொள்ளுதல் இருக்க வேண்டும். அது தன்னுடைய தீர்மானத்தை எடுக்கிறது. இது நிகழும்போது, நீங்கள் பாருங்கள், கர்த்தருடைய தூதன் இப்பொழுது இங்கு வருகிறார், அது நித்தியமான, ஒரு ஆவிக்குரிய சரீரமாய் இருக்கிறது.

58 இது ஒரு மரித்துக்கொண்டிருக்கும் சரீரத்தில் உள்ள ஒரு மரித்துக்கொண்டிருக்கிற ஆவியாய் உள்ளது; ஆனால் இப்பொழுது, நீங்கள் ஒரே நேரத்தில் இரண்டு சரீரங்களில் இருக்க முடியாது, ஆனால் ஒரே நேரத்தில் இரண்டு சுபாவங்கள் உங்களுக்குள் இருக்கக்கூடும். இப்பொழுது, கர்த்தருடைய ஆவியின் சுபாவம்... நீங்கள் மறுபடியும் பிறக்கும்போது, நீங்கள் சரீரப்பிரகாரமாகப் பிறக்காமல், குழந்தை இருந்தது போன்றே; ஆனால் என்ன சம்பவித்துள்ளது, ஆவிக்குரிய பிறப்பு உங்களுக்கு வந்துள்ளது. இந்த ஆவிக்குரிய பிறப்பு உங்களுடைய இருதயத்திற்குள்ளாக வளர்ந்துகொண்டிருக்கையில், தேவனுடைய அந்த ஆவியைப் பெற்றுக்கொள்ள ஒரு சரீரப்பிரகாரமான அல்லது ஒரு வானத்துக்குரிய சரீரம் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஜீவன் இந்தச் சரீரத்தை விட்டுச் செல்லும்போது, அது அந்தச் சரீரத்திற்கு செல்கிறது. சரீரம் பூமிக்கு அளிக்கப்படும்போது, ஆவி உள்ளே வருவது போல, ஆவியானது சரீரத்தை விட்டுச் செல்லும்போது, அங்கே ஒரு சரீரம்

காத்திருக்கிறது. "பூமிக்குரிய கூடாரம் அழிந்துபோனபிறகு, நமக்கு ஏற்கனவே ஒன்று காத்திருக்கிறது என்று நாம் அறிந்திருக்கிறோம்." புரிகிறதா? அதுதான் இது, ஜனங்களின் ஆவிக்குரிய சரீரம்.

**சகோதரன் பிரான்ஹாம்...**

இப்போது, இவை ஒரு...இங்கே அவற்றில் ஒரு குழு இருக்கிறது, குறைந்தது பத்து அல்லது பதினைந்து இருக்கும் போல் தெரிகிறது. அவை யாவும் காகிதத்தில் எழுதப்பட்டு, ஒரே விதமான தட்டச்சு, போன்றவை. நான் முடிந்தளவு துரிதமாக அவைகளைக் கூற முயற்சிப்பேன். நம்மால் முடிந்தளவு...துரிதமாக வெளியே செல்ல முடியும்.

**382. அன்புள்ள சகோதரனே, யோவான் எழுதிய வெளிப்படுத்தின விசேஷத்தில் அவன் விழுந்து வணங்குதலை இயேசு ஏற்றுக் கொள்ளவில்லை...இயேசு தமக்கு முன்பாக வணங்குதலை அனுமதித்தபோது, அவர்—அவர் ஏன் யோவான் எழுதிய வெளிப்படுத்தின விசேஷத்தில் வணங்குதலை ஏற்றுக்கொள்ளவில்லை? யோவான் அவரை வணங்க விரும்பியபோது, ஏன் இயேசுவானவர் வணங்குதலைப் பெற்றுக்கொள்ளவில்லை?**

59 என்னுடைய அருமையான சகோதரனோ அல்லது சகோதரியோ, அது யாராயிருந்தாலும், வணங்குதலை ஏற்றுக் கொள்ளாதது இயேசு அல்ல. வெளிப்படுத்தின விசேஷம் 22:8-ல், தீர்க்கதரிசி, தூதனானவன் வணங்குதலை ஏற்றுக்கொள்ளமாட்டான் என்பதை நீங்கள் வாசிப்பீர்கள். யோவான் தனக்கு இவைகளைக் காண்பித்த தூதனை விழுந்து வணங்கியபோது, அவன், "அப்படிச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிரு, ஏனென்றால் நான் உன் உடன் சகோதரரில் ஒருவன். நான் தீர்க்கதரிசிகளில் ஒருவன்" என்றான். பாருங்கள், புரிகிறதா? "நான் உன் உடன் சகோதரன், உன் உடன் ஊழியக்காரன், தீர்க்கதரிசிகளில் ஒருவன்; தேவனைத் தொழுதுகொள்" என்றான். இயேசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதல்ல, தீர்க்கதரிசிதான் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தான்.

**383. அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், இயேசு சீஷர்கள் மீது, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறி ஊதினதற்கும், அவர்கள்—அவர்கள் மேல் அறைக்குச் சென்று தங்க வேண்டியிருந்ததற்கும் என்ன வித்தியாசம்?**

60 அது அவர் அவர்களுக்கு அளித்த ஒரு வாக்குத்தத்தமாயிருந்தது, அவருடைய வாக்குத்தத்தத்தை அவர்கள் மேல் ஊதினார், "பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அது ஒரு வாக்குத்தத்தமாயிருந்தது. வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும் வரை காத்திருக்க அவர்கள் மேலறைக்குச் சென்றனர்.

61 நாங்கள் உங்களைக் குணப்படுத்த உங்கள்மேல் கைகளை வைக்கும்போதும் அதுவேதான் நடக்கிறது, அதன்பின்னர்

வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிற உங்களுடைய வேலைகளை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

### 384. சகோதரன் பிரான்ஹாம், இயேசுவானவர் உயிர்த்தெழுந்தபிறகு சீஷர்களுக்குத் தோன்றியபோது, தன்னுடைய சரீரப்பிரகாரமான முகமூடியைப் பலமுறை மாற்றிக்கொண்டாரா?

62 "அவர் தம்முடைய சரீரப்பிரகாரமான முகமூடியை மாற்றிக்கொண்டாரா?" எனக்கு—எனக்குத் தெரியாது, ஏனென்றால் அது என்னவாயிருந்தது என்று நான் நினைக்கிறேன், அவர் தம்முடைய முகமூடியை அங்கே மாற்றவில்லை. அவர் செய்தது என்னவென்றால், தம்மை அவர்கள் காணாமலும் அறிந்தறியாமலும் தடுத்துவிட்டார்.

63 எம்மாவூரிலிருந்து வந்தவர்களைப் போல, அவர்கள் நாள் முழுவதும் அவரோடு சஞ்சரித்தனர், ஆனாலும் அது அவர்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது. ஒரு சமயம் அவர்கள் மீன்பிடித்த கரையில் ஒரு மனிதன் மீன்பிடிப்பதைக் கண்டனர்; அவர், "பிள்ளைகளே, உங்களிடம் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார்.

மேலும் அவர்கள், "நாங்கள் இரவு முழுவதும் பாடுபட்டு ஒன்றுமே பெறவில்லை" என்றனர்.

அவர், "மறுபக்கத்தில் போடுங்கள்" என்றார். அவன் ஒரு பெரிய கூட்டமான மீன்களைப் பிடித்தான், அப்பொழுது அவர்கள் அது ஆண்டவர் என்று அறிந்துகொண்டார்கள். அது மாற்றப்பட்டது அவருடைய முகமூடி அல்ல என்று நான் நினைக்கிறேன், அது ஜனங்களின் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன என்று நான் நினைக்கிறேன்.

### 385. சகோதரன் பிரான்ஹாம், கர்த்தருடைய தூதனுக்கும், கர்த்தராகிய அவருக்கும் இடையில், ஏதேனும் வித்தியாசம் இருந்தால், அது என்ன?

64 கர்த்தருடைய தூதன் கர்த்தரிடத்திலிருந்து வந்த ஒரு செய்தியாளன், கர்த்தர்தாமே அந்த நபர், கர்த்தரிடத்திலிருந்து வந்த தூதனான, தூதனுடைய நபர் அல்ல. நான் உங்களுக்குக் காண்பிக்கட்டும். கர்த்தரிடத்திலிருந்து வந்த தூதன் இங்கே பூமியில் பேசுகிறார். கர்த்தரிடத்திலிருந்து வந்த தூதன் இங்கே பூமியில் பேசுகிறார். கர்த்தரிடத்திலிருந்து வந்த தூதன் இங்கே பூமியில் பேசுகிறார். அப்படியானால் அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து வந்த தூதர்கள் என்று நாம் எப்படி அறிவோம்? அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு வரும்போது. ஆனால் அவர்கள் அதைத் தாறுமாறாக்க முயற்சிக்கும்போது, அது கர்த்தரிடத்திலிருந்து அல்ல, பாருங்கள், பாருங்கள், அது கூறாத ஏதோ ஒரு காரியமாக அதை ஆக்க முயற்சிக்கிறான். என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்...

65 அதன்பின்னர் காபிரியேலைப் போன்ற ஒரு இயற்கைக்கு மேம்பட்ட தூதன் கர்த்தரிடத்திலிருந்து இறங்கி வருகிறான், மற்றும்—மற்றும் மிகாவேல், எட்டி போன்ற அவர்களுடைய பெயர்கள்.

**386. சகோதரர் பிரன்ஹாம், நாம் வாழும் இந்தக் காலத்தில், ஒரு விசுவாசியாக இருந்து, இன்றைய செய்தியையும் தூதனையும் பின்பற்றுவதில் என்ன தவறு இருப்பதாகத் தோன்றுகிறது, உங்களால் விரும்பியபடி ஜெபிக்க முடியாதபோது?** அது ஒரு நல்ல கேள்வி.

66 சகோதரனே, சகோதரியே, யார் இதைக் கேட்டாலும், அது காலத்தின் நிலைமைகளுக்கு ஒரு காரணம் என்று நான் நினைக்கிறேன். எழுப்புதல் முடிந்துவிட்டது. இந்த எழுப்புதல் ஏறக்குறைய பதினைந்து வருடங்களாக நீடித்து வந்துள்ளது, ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒருபோதும் நீடித்திருக்கவில்லை. அது அதனுடைய கடைசி எழுப்புதலைப் பெற்றுள்ளது என்று நான் நினைக்கிறேன். அதன் காரணமாகத்தான் நீங்கள் முன்பு போல ஜெபித்து, ஆவியில் உணரமுடியவில்லை என்று நான் நினைக்கிறேன். எழுப்புதலின் அக்கினிகள் அழிந்து போய்விட்டதே காரணம்.

**387. சகோதரன் பிரான்ஹாம், ஒரு நபர் தான் சிந்திப்பது தன் சொந்த எண்ணங்களா, அல்லது தன்னைத் தவறாகச் சிந்திக்க வைப்பதற்காகப் பிசாசு தன் மனதில் அல்லது தன்னைத் தவறாகச் சிந்திக்க வைப்பதற்காகப் பிசாசு தன் மனதில் எண்ணங்களைத் திணிக்கிறானா என்பதை எப்படி அறிந்துகொள்வது என்று தயவுசெய்து விளக்குங்கள், குறிப்பாக, அந்த எண்ணங்களைச் சிந்திக்க நீங்கள் விரும்பவில்லை என்பதை நீங்கள் அறிந்திருந்தால்.**

67 அப்படியானால், அது வார்த்தைக்கு முரணாக இருக்குமானால், அது பிசாசின் சிந்தனையாயுள்ளது. அது வார்த்தையோடு இருக்குமானால், அது தேவனுடைய சிந்தனையாயுள்ளது. அது தவறான எண்ணங்களாயிருந்தால், அது பிசாசாகும். அது தேவனுடைய வார்த்தையைக் குறித்த நல்ல எண்ணங்களாயிருந்தால், அது தேவனுடைய சிந்தனையாயுள்ளது.

**388. ஒருவேளை பிசாசு உங்கள் மனதில் ஒரு குறிப்பிட்ட காரியத்தைப் பற்றிய எண்ணங்களைத் திணித்தால், அதை எப்படி ஜெயங்கொள்ளலாம் அல்லது அகற்றப்படலாம்?**

68 அதற்கு நேர்மாறாக உள்ளதை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்று உங்களுக்குத் தெரிந்தும்…நீங்கள் கிறிஸ்தவர் அல்ல என்று பிசாசு உங்களை—அப்படி—அப்படி…நினைக்க வைத்தால், அதற்கு நேர்மாறாக, “நான் ஒரு கிறிஸ்தவன்” என்று கூறுங்கள். உங்களுடைய அனுபவம் தேவனுடைய வார்த்தையோடு

பொருந்துகிற வரையில், "நான் ஒரு கிறிஸ்தவன்" என்று கூறுங்கள். வேறெந்த காரியமும், அதே முறையில்.

**நீங்கள் இதற்குப் பதிலளிக்கும்போது, நான் தனியாக இல்லாதபடியால், இதை ஜெயங்கொள்ளும்படி தயவு செய்து எனக்காக ஜெபியுங்கள்.**

69 நீங்கள் யாராயிருந்தாலும், தேவன் உங்களுடைய ஜெயங்கொள்ளுதலை அருளுவாராக. உங்களுடைய சிந்தனைகள் நேராக மறுபக்கம் திரும்பிச் சென்று, "நான் ஒரு கிறிஸ்தவன்; நான் ஒரு விசுவாசியாயிருக்கிறேன். சாத்தானே, என்மீது உனக்கு எந்தப் பிடியும் இல்லை" என்று கூறுவதாக.

70 வெளிப்படையாகக் கூறினால், நான் இப்பொழுது இங்கே நின்று அதையே கூறிக்கொண்டிருக்கிறேன், பிரசங்க பீடத்தண்டையில் மயங்கி விழாமல் பார்த்துக் கொள்ளுகிறேன். அது உண்மை. நான்கு அல்லது ஐந்து முறைகள் நான் கிட்டத்தட்ட பிரசங்க பீடத்திலிருந்து கீழே சாயும் நிலைக்கு வந்துவிட்டேன். அதுதான் உண்மை. அது உண்மையென்று தேவன் அறிவார்.

**389. ஒரு நபர் தனக்கு ஒரு தாழ்வான மனப்பான்மை, அல்லது ஒருவிதமான சிக்கலான தன்மை உள்ளதை உணரும்போது, அவன் எப்படி இதை ஜெயங்கொள்ள முடியும்? எனவே, அவனுடைய இளமை பருவத்தில் அவன் மாத்திரமே இதற்குக் காரணமாயிருந்திருந்தால், அது அவ்வாறு இருக்க வேண்டுமா?**

71 சரியாக எதிர்மாறானதை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எப்பொழுதுமே உங்களுடைய வழியையே விரும்புவீர்களானால், மேலும் எல்லாவற்றையும் எப்போதும் உங்கள் வழியில் வைத்திருக்க விரும்பும் அந்த ஒரு குட்டி அடங்காக்குழந்தையாக இருந்தால், நீங்கள் பெற்றுள்ள எல்லாவற்றையும் வேறு வழியில் கொடுத்துவிடுங்கள். நீங்கள் சுயநலமுள்ளவராயிருந்து, நீங்கள் எல்லாவற்றையும் பற்றிக்கொள்ள விரும்பினால், அப்படியானால் நீங்கள் பெற்றுள்ளதை கொடுக்கத் தொடங்குங்கள். புரிகிறதா? என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்...இதற்கு நேர்மாறாகச் செல்லுங்கள். அவ்விதமாகத்தான் எந்த ஒரு காரியத்தையும் ஜெயங்கொள்ள முடியும், அது ஒரு மாற்று மருந்தாகும்.

72 நீங்கள்...என் வயதான, தெற்கத்திய தாயார் வழக்கமாக இவ்வாறு கூறுவதுண்டு, "நாயின் முதுகிலிருந்து எடுக்கப்பட்ட முடி அதன் கடிக்கு நல்லது." இதுவும் இதேபோலப் பொருந்தும்.

**390. சகோதரன் பிரான்ஹாம், இளம் பருவ வயதுக்குட்பட்ட நம்முடைய பிள்ளைகளை நாம் என்ன சாதனையில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும்?** (நான் உங்களுடைய மன்னிப்பை வேண்டிக்கொள்கிறேன், அது...) **நம்முடைய இளம் பருவ வயதுக்குட்பட்ட பிள்ளைகள் என்னென்ன**

**நிகழ்ச்சிகளை எதிர்பார்க்க வேண்டும், அதில் பங்கு கொள்ள வேண்டும். மேலும், தங்களுடைய கூட்டாளிகளைத் தெரிந்துகொள்ள அவர்களுக்கு நாம் எப்படி உதவி செய்ய வேண்டும்?**

73 உங்களால் முடிந்தவரை அவர்களைக் கிறிஸ்தவ நட்புறவில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்களை இவர்களுடன் வைத்திருங்கள்...அது ஒரு பெண்ணாயிருந்தால், அவளைக் கிறிஸ்தவப் பெண்களோடு வைத்துக் கொள்ளுங்கள்; கிறிஸ்தவப் பையன்களாக இருந்தால், இதற்கு நேர்மாறாகச் செய்யுங்கள். அவள் ஒரு பையனுடன் செல்லப் போதுமான வயதுள்ளவளாயிருந்தால், அவள் சரியான விதமான ஒரு பையனையே தொடர்ந்து கொண்டிருக்கிறாளா என்று பாருங்கள். இல்லையெனில், அவளை எந்தப் பையனிடமும் செல்லவிடாமல் தடுக்கவும், அல்லது ஒரு பையனை ஒரு பெண்ணிடம் செல்லவிடாமல் தடுக்கவும். அவள் ஒரு அவிசுவாசியோடு செல்லப் போகிறாள் என்றால், ஒரு விசுவாசியுடன் செல்லும்படி அவளை ஊக்குவிக்க முயற்சியுங்கள், நேர்மாறாக. உங்கள் வீட்டை அழகாக்குங்கள். உங்கள் மகளோ மகனோ, தங்கள் தந்தை மற்றும் தாயின் முன்னிலையில் தங்கள் விருந்தினர்களை வீட்டிற்கு அழைத்து வர வெட்கப்படாத ஓர் இடமாக உங்கள் வீட்டை ஆக்குங்கள்; மேலும் அவர்கள் தங்கள் வீட்டில் தங்குவதில் மகிழ்ச்சியடையும் அளவுக்கு அந்த வீட்டை மிகவும் மகிழ்ச்சியானதாக ஆக்குங்கள்.

ஓஒஒஒ, என்னே, இங்கே வரிசையாக ஏழு எண்கள் உள்ளன. நான் இன்னும் சில நிமிடங்கள் மட்டுமே பேசுவேன்.

**391. சகோதரன் பிரான்ஹாம், சபைக்காலம் முடிவடைந்துவிட்டது என்றும், லவோதிக்கேயா என்பதைக் குறித்தும் நீங்கள் அண்மையில் அறிக்கைகளை வெளியிட்டீர்களா?**

74 இல்லை, அது முடிந்துவிட்டது என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. நான் அப்படிச் சொல்லியிருந்தால், நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டீர்கள், அல்லது நான் தவறாகச் கூறிவிட்டேன். அது...இது கடைசி சபைக்காலம்; அது சபைக் காலங்களின் முடிவாயிருக்கிறது, லவோதிக்கேயா. அது முடிவடையவில்லை; அது முடிவடையும்போது, சபையானது போய்விடும். எனவே சபையானது இங்கிருக்கும் வரைக்கும், அது முடிவடையவில்லை. புரிகிறதா?

**392. சபைக்காலம் முடிவடைந்து, இருளடைந்துவிட்டது, மணவாட்டி அழைக்கப்படுகிறாள், நாம் ஏற்கனவே உபத்திரவ காலத்திற்குள் பிரவேசித்துவிட்டோமா?**

75 இல்லை, இல்லை, இல்லை, நீங்கள்...அதன் பேரில் எனக்கு இன்னும் கூடுதலான நேரம் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். பாருங்கள், புரிகிறதா? மணவாட்டி, அவள்

சபையிலிருந்து எடுக்கப்படும்போது, அப்பொழுது சபைக்காலம் முடிவடையும். லவோதிக்கேயா குழப்பத்திற்குள் செல்கிறது; மணவாட்டி மகிமைக்குச் செல்கிறாள்; உபத்திரவ காலம் நித்திரை செய்யும் கன்னிகைகளின் மேல் மூன்றரை வருடங்களாக அமைகிறது, இஸ்ரவேல் தன்னுடைய தீர்க்கதரிசனத்தை பெற்றுக் கொண்டிருக்கையில்; அப்பொழுது இஸ்ரவேலர் மேல் உபத்திரவம் வரப்போகிறது; அதன்பின்னர் அர்மகெதோன் யுத்தம் வருகிறது. அது எல்லாக் காரியங்களையும் அழிக்கிறது. அதன்பின்னர், மணவாட்டி மணவாளனோடு ஆயிரவருட, ஆயிரவருட அரசாட்சிக்கு திரும்பி வருகிறாள். அதற்குப் பிறகு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வருகிறது; அதற்குப் பிறகு புதிய வானங்களும் புதிய பூமியும் வானத்திலிருந்து தேவனிடத்திலிருந்து புதிய நகரமும் இறங்கி வருகிறது. நித்தியமும் நேரமும் ஒன்றாக இணைகின்றன.

**393. எக்காளங்களுக்கும் மணவாட்டிக்கும் எந்தச் சம்மந்தமும் கிடையாது என்று பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குக் கூறியுள்ளார். ஏழு கலசங்களுக்கு நம்மோடு ஏதாவது சம்மந்தம் உண்டா?**

76 பரிசுத்த ஆவியானவர் அதை அந்தவிதமாக வெளிப்படுத்துகிறாரா என்று நான் காத்திருந்து பார்ப்பேன். எனக்கு இன்னமும் தெரியவில்லை.

**394. மல்கியா 4-ஆம் அதிகாரத்தில் உள்ள தீர்க்கதரிசி, உபத்திரவக் காலத்தைக் கடந்து சென்றாலும், வெளிப்படுத்தல் 7:9-ல் உள்ள புறஜாதியாரின் மீதியானவர்களைக் கூப்பிடுவாரா?**

77 இல்லை, இல்லை! வெளிப்படுத்தின விசேஷம் 7-ம் அதிகாரத்திற்குப் பிறகு, முத்திரையிடப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களையும், அதன்பின்பு மணவாட்டியாகிய எந்த மனிதனும் எண்ண முடியாத அந்தத் திரளான எண்ணிக்கை திரும்பி வருவதை அவன் கண்டான். அது...மல்கியா 4 முடிவடைந்து, மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுவாள், மற்றும்...அதன்பின்னர்... இந்த எலியா மற்றும் எலிசா குழுவினர் பூமிக்கு திரும்பி வந்து... சபையானது உபத்திரவ காலத்தினூடாகச் செல்லும், ஆனால் எலியாவும், எலிசாவும் நித்திரை செய்யும் கன்னிகைகளோடு (அவர்கள் புறஜாதிகள்) எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார்கள்; அவர்கள் யூதர்களிடம் மாத்திரமே அனுப்பப்படுவார்கள்.

**395. ஏழு இரகசியங்களுக்கு சமமான ஏழு இடி முழக்கங்கள் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுவிட்டனவா? அவைகள் ஏழு முத்திரைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், ஆனால் அவைகள் இன்னும்—ஆனால் இன்னும் இடி முழக்கங்கள் என்று நமக்கு இன்னும் அறியப்படவில்லையா?**

78 இல்லை, அவைகள் ஏழு முத்திரைகளில்

வெளிப்படுத்தப்பட்டன; அந்தவிதமாகத்தான் இடிமுழக்கங்கள் அதைப் பற்றியது. அவைகள் வெளிப்படுத்த வேண்டியதாயிருந்தது...அந்த ஏழு இடி முழக்கங்கள் என்னவென்று ஒருவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை...அது என்னவென்று யோவான் அறிந்திருந்தான், ஆனால் அதை எழுத அவன் தடை செய்யப்பட்டான். அவர், “ஆனால் ஏழாம் தூதன் எக்காளம் ஊதும்போது, ஏழு இடி முழக்கங்களின் ஏழு இரகசியங்களும் வெளிப்படும்” என்றார். ஏழாம் தூதன் ஏழாம் சபைக் காலத்தின் ஒரு செய்தியாளன். பார்த்தீர்களா?

**396. சில சமயங்களில், கர்த்தராகிய இயேசு மேகங்களில் வருவதற்குச் சற்று முன்பு, முதல் மணவாட்டியைப் போல, அந்தச் சிறிய ஜீவனுள்ள மணவாட்டியும் எங்காவது ஒன்றாகக் கூடிவந்து, எல்லாவற்றையும் பொதுவில் வைத்திருப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

79 இப்பொழுது, நான் அதை விசுவாசிக்கிறேனா என்று அவர்கள் என்னிடம் கேட்டார்கள். என்னால் அதை வேத வாக்கியங்களைக் கொண்டு நிரூபிக்க முடியாது, ஆனால் ஒரு வேளை, ஒரு நேரம் வரலாம், எனக்குத் தெரியாது. ஒருவேளை இருக்கலாம்... புரிகிறதா? அது அப்படி நடந்தால், அது அவருடைய நெருக்கத்தை உடனடியாக அடையாளம் காட்டும், அவ்வளவு...அவர், “ஆனால் அவர் இரவிலே திருடன் வருகிறவிதமாக வருகிறார்” என்றார். பார்த்தீர்களா? அவர் வந்து...ஜூலியட்டைக் குறித்து நான் வாசித்த அந்தப் புத்தகத்தைப் போன்றே...*ரோமியோ ஜூலியட்,* அவர் வந்து—அவருடைய மணவாட்டியை இரவிலே அழைத்துச் செல்கிறார். அவள் ஒரு நொடிப்பொழுதில், ஒரு இமைப்பொழுதில் எடுத்துக்கொள்ளப்பட்டாள். பார்த்தீர்களா?

80 அது அந்தவிதமாக இருக்குமா என்பது மிகவும் சந்தேகமாயுள்ளது, ஏனென்றால் வேதம், “ஒரு படுக்கையில் இருவர் இருப்பார்கள்; நான் ஒருவரை எடுத்துக் கொள்வேன், மற்றொருவரை விட்டுவிடுவேன்; ஒரு வயலில் இரண்டு பேர் இருப்பார்கள், நான் ஒருவரைத் எடுத்துக் கொள்வேன், மற்றொருவரை விட்டுவிடுவேன்” என்று கூறப்பட்டுள்ளது. பார்த்தீர்களா? எனவே அவர்கள் அநேகமாக...உலகம் முழுவதிலும், பொதுவான காரியங்களை உடையவர்களாயிருக்கும்படி அவர்கள் ஒரு இடத்தில் கூடி வரமாட்டார்கள். ஆனால் அவர்களில் சிறு குழுக்கள் பூமியெங்கும் சிதறடிக்கப்பட்டிருக்கும்.

81 கர்த்தர் அனுமதிப்பாரானால், இது அதனுடைய ஒரு சிறு குழுவாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். ஒருகால் ஆசியாவில் உள்ள மற்றொரு சிறு குழுவாக இருக்கலாம், ஒன்று ஜெர்மனியில் இருக்கலாம், மற்றொன்று வேறு எங்காவது இருக்கலாம். அன்றொரு இரவு மணவாட்டியைக் குறித்த ஒரு தரிசனத்தை நான் கண்டபோது, அவர்கள் சர்வதேசத்திலிருந்து

உருவாக்கப்பட்டிருந்தனர். பார்த்தீர்களா? எனவே மணவாட்டி ஓரிடத்திலிருந்து கூட்டிச் சேர்க்கப்படமாட்டாள், அவள் உலகம் முழுவதிலுமிருந்து கூட்டிச் சேர்க்கப்படுவாள். அது வார்த்தையோடு சரியாக ரூபகாரப்படுத்துகிறது, அந்த வார்த்தை ஒருபோதும் தவறாக இருந்ததில்லை. இந்த நேரம் வரையிலும், தரிசனம் ஒருபோதும் தவறாக இருந்ததில்லை, ஏனென்றால் அது வார்த்தையின்படியே இருந்து வருகிறது.

**397. இந்த வேளையில் உண்மையான, அசலான பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுள்ள எவரேனும் மணவாட்டியின் எடுத்துக்கொள்ளப்படுதலில் இருக்கமாட்டார்களா? நீங்கள் விளக்கிக் கூறுவீர்களா? சுமையைக் குறைக்க உதவியாக நாங்கள் உங்களுக்காக எந்த வழியில் செய்ய முடியும் என்பதை எங்களிடம் கூறுங்கள்.** இப்பொழுது, அது இனிமையாயிருக்கவில்லையா? பார்த்தீர்களா?

82 இல்லை, இப்பொழுது உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது.

83 ஆம், பரிசுத்த ஆவியில் அபிஷேகம் பண்ணப்பட்ட உண்மையான விசுவாசிகள் மணவாட்டியில் இருப்பார்கள். உண்மையாகவே, அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டு வெளியே அழைக்கப்படுகின்றனர். உறங்கிக் கொண்டிருந்த கன்னிகைகளிடம் எண்ணெய் இருக்கவில்லை. எண்ணெய் வைத்திருந்தவர்கள் உள்ளே சென்றனர், ஆனால்…

84 “பாரத்தை குறைக்க நாம் என்ன செய்ய வேண்டும்?” ஆம், சகோதரனே, சகோதரியே, இதை எழுதிக்கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் எனக்காக ஜெபியுங்கள்; அதுவே செய்ய வேண்டிய மிகச் சிறந்த காரியமாகும். உங்களுக்கு நன்றி. எனக்குப் பணம் தேவையில்லை. நான்…என்னைக் கவனித்துக் கொள்ள போதுமானது வருகிறது. அதற்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். எனக்கு ஆடைகள் தேவையில்லை. பெரும்பாலும் நான் உடுத்துகிற என்னுடைய ஆடைகளையே ஜனங்கள் எனக்குத் தருகிறார்கள். என்னுடைய நண்பர்களும் மற்றவர்களும் எனக்கு ஆடைகளைத் தருகிறார்கள். அவர்கள்…என்னுடைய குடும்பத்தைப் போஷிக்க எனக்குப் போதுமான பணம் உள்ளது; அதுவே எங்களுக்குத் தேவையானது. அதுபோல்…நீங்கள் எனக்காக ஜெபிக்கலாம், ஏனென்றால் எனக்கு நிச்சயமாகவே ஆவிக்குரிய உதவி தேவை.

**398. வார்த்தையின் ஊழியர்களாகிய நமக்கு, ஜெபிக்கவோ, பிரசங்கிக்கவோ, உபவாசிக்கவோ, அல்லது உலகில் எங்கோ இன்னும் இருக்கக்கூடிய வழிதவறிய ஆத்துமாக்களுக்காகவோ சிறிதளவோ அல்லது எந்தப் பாரமோ இல்லை என்றே தோன்றுகிறது. இந்த நிலைமையைக் குறித்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் தயவு கூர்ந்து கூறுவீர்களா?**

**சகோதரன் பிரான்ஹாம், இதற்காக உங்களுக்கு மிக்க நன்றி.** அது ஒரு ஊழியக்காரனாக இருக்க வேண்டும். அவன் இந்தச் சொற்களுக்கு எந்தப் பெயரையும் கையெழுத்திடவில்லை.

85 சகோதரனே…நான் மிகவும் சோர்வாகவும், களைப்பாகவும், உடல்நிலை சரியில்லாதது போலவும் இருந்த சமயங்களில் அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டியிருந்தது, அதனால், அது கேள்விகளுக்குப் பதிலளிக்கும் என்று நான்—நான் நம்புகிறேன். நான்—நான் உங்களுக்கு மிக்க நன்றி செலுத்துகிறேன். நான் அவருக்கு என்ன பதிலளிக்கப் போகிறேன் என்பதை நான்—நான் மறந்துவிட்டேன்.

86 பிரசங்கிமார்களே, ஒரு ஊழியக்காரர், நமக்கு ஏன் இந்தப் பாரங்கள்…இருக்க வேண்டிய ஆத்துமாக்களுக்கான பாரங்கள் கிடையாது. அது—அது ஒரு எழுப்புதலின் குறைவு என்று நான் நம்புகிறேன். இயேசுவானவர் வரும் வரையிலும் நாம் இழக்கப்பட்ட ஆத்துமாக்களுக்கான பேரார்வத்தைத் தரும்படி நாம் தொடர்ந்து தேவனிடத்தில் ஜெபிக்க முயற்சிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

**399. சகோதரன் பிரான்ஹாம், பரிசுத்த ஆவியைப் பெற்ற ஒவ்வொருவரும் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்கள் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?** (இல்லை) **அந்நிய பாஷைகளில் பேசுதல்—அந்நிய பாஷைகளில் பேசுதல் பரிசுத்த ஆவியின் அத்தாட்சிக்காக அல்ல என்று நீங்கள் கூறுவதை நான் அறிவேன். நான்…முதலாம் கொரிந்தியர் 12:30-ஐ தயவு கூர்ந்து விளக்கிக் கூற விரும்புகிறேன்.** முதலாம் கொரிந்தியர் 12:30-ஐ நீங்கள் எடுத்துக் கொள்வீர்களா? “எல்லோரும் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்களா?” என்று நான் நினைக்கிறேன். அல்லது மற்றவை; எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அவர்கள் அதற்குப் பதில் கூறிக்கொண்டிருக்கையில், நான் மற்றொன்றை எடுத்து வைக்க முயற்சிப்பேன்.

**400. சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் யோபு 14:21-ஐ விளக்குவீர்களா?**

87 ஆம். யோபு 14-ம் அதிகாரம், “ஒரு மனிதன் மரித்தாலும், அவன் மீண்டும் பிழைப்பானா?” என்பதாகும். ஒ, ஒரு மனிதன் மரித்துப் போனால்…யோபு உயிர்த்தெழுதலைக் குறித்து பேசுகிறான். அன்றொரு காலையில் நான் அதை உடையவனாயிருந்தேன் என்று நான் நினைக்கிறேன், இல்லையா? அல்லது அது சார்லியின் வீட்டில் இருந்ததா? திருமதி காக்ஸ் அங்கே எங்கோ இருந்தாள். யோபு, அவன் மலர்கள் எப்படி மரித்து மீண்டும் ஜீவிப்பதைக் கண்டான், ஆனால் அவனால் பூமிக்குள் சென்று திரும்பி வரமுடியவில்லை. அப்பொழுது ஏதோ ஒன்று பாவம் செய்திருந்தது என்று அவனுக்கு விளக்கிக் கூறப்பட்டது. அவனுக்கும் தேவனுக்கும் இடையே ஒரு

மத்தியஸ்தர் தேவைப்படுகிறார், அதன்பின்னர் அவன் கர்த்தருடைய வருகையைக் கண்டான்.

88 சகோதரனே, அது என்ன? [சகோதரன் பிரான்ஹாம் ஒரு சகோதரனுடன் உரையாடுகிறார்—ஆசி.] அது முதலாம் கொரிந்தியர் 12:30 என்பதாக இருந்தது என்று நான் நினைக்கிறேன். ஆம்!

"எல்லோரும் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்களா?" அந்தவிதமாகத்தான் நான் நினைத்தேன், ஆனால் எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை, இந்தவிதமாகக் களைப்புற்றிருந்ததால், ஆனால்...இல்லை! யாவரும் அந்நிய பாஷைகளில் பேசுவதில்லை; யாவரும் அர்த்தம் உரைப்பதில்லை; எல்லோரும் அதைக் கூறுவதில்லை. அதற்கு அடுத்த அதிகாரத்தில், "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், நான் ஒன்றுமில்லை." புரிகிறதா? பவுல், வேறு வார்த்தைகளில் கூறினால், "எல்லோரும் அந்நிய பாஷைகளில் பேசுகிறார்களா? நிச்சயமாக, அவர்கள் அவ்வாறு செய்வதில்லை. எல்லாரும் தீர்க்கதரிசனம் உரைக்கிறார்களா? இல்லை. ஆனால் மிகச் சிறந்த வரங்களை ஊக்கமாய் நாடுங்கள்; இன்னும் ஒரு மேன்மையான வழியை நான் உங்களுக்குக் காண்பிப்பேன்" என்று அவர்களிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தான். பார்த்தீர்களா? எல்லோரும் அந்நிய பாஷைகளில் பேசுவதில்லை.

**நீங்கள் இங்கிருந்து செல்வதற்கு முன்னர் மற்றொரு பகுத்தறிதல் ஆராதனையை நீங்கள் நடத்தப் போகிறீர்களா? இல்லையென்றால், ஒரு தனிப்பட்ட நேர்காணலைப் பெற முடியுமா?**

நீங்கள் செய்தீர்கள் என்று நான் நம்புகிறேன். இப்பொழுது, என்னிடம் அதிகமானவைகள் இல்லை. என்னால் முடிந்தால், நான் அவைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கட்டும்.

**401. ஒரு தூதனின் பரிதாபகரமான காட்சியைக் கண்டதைப் பற்றி நீர் கூறினது நினைவிருக்கிறது...ஒரு கூண்டில் அடைக்கப்பட்ட கழுகு, விடுதலைக்காகப் போராடித் தன் சிறகுகளை அடித்துக்கொண்டிருந்தது. எனக்கும் அந்த நிலையில் ஒரு அருமையான தாய் இருக்கிறார். மூன்று வருடங்களாக அவளுடைய மூன்று பிள்ளைகளும் வீட்டிற்கு வர அனுமதிக்கப்படவில்லை, ஏனென்றால் அவர்கள் தங்களுடைய தகப்பனாருடைய உபதேசத்திற்கு உட்பட்டிருக்கமாட்டார்கள். அவர் ஒரு ஸ்தாபன பிரசங்கியார். தாயார் இந்தக் கடைசி கால செய்தியைக் கேட்க விரும்புகிறார், என்னால் அவளுக்கு ஒரு கடிதம் கூட அனுப்ப முடியவில்லை. அவள் எந்த அளவிற்கு அதற்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்? ஜெபிப்பதைத் தவிர வேறு ஏதாவது என்னால் செய்ய முடியுமா?**

89 அந்த ஒரு காரியத்தை மாத்திரமே நான் அறிந்து கொள்வேன். அவளுடைய கணவன் ஒரு ஊழியக்காரனாயிருக்கிறபடியால், அவள் வார்த்தையைக் கேட்க அனுமதிக்கவில்லை. அவள் அதைக் கேட்க விரும்புகிறாள், ஆனால் அவர் அதைக் கேட்க அவளை அனுமதிக்கமாட்டார், அவளுக்காக ஜெபிக்க மாத்திரம் செய்யுங்கள். உண்மையாகவே, அந்தப் பெண் இரட்சிக்கப்பட்டிருக்கிறாள் என்று நான் நினைக்கிறேன்.

**402. சகோதரன் பிரான்ஹாம், ஒருவர் நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல் ஆகியவற்றின் உண்மையான அனுபவத்தைப் பெற்றிருந்தபோதிலும், அவர் வார்த்தையின் ஒளியை நிராகரித்தால், அவர் வழிதவறி நரகத்தில் முடிவது சாத்தியமா?**

90 ஆம், ஐயா! அது முற்றிலும் உண்மை.

**403. நாம் வார்த்தையை விசுவாசிக்கவில்லையென்றால், நாம் கிறிஸ்துவிலிருந்து நித்தியமாகப் பிரிக்கப்படுவோம் என்ற சொற்றொடரை நீங்கள் பயன்படுத்தும்போது, புத்தியில்லாத கன்னிகைகள் நித்தியமாக ஜீவிப்பார்கள் என்று நீர் பொருட்படுத்திக் கூறுகிறீரா, ஆனால் கிறிஸ்து மணவாட்டியோடு வாசம் செய்யும் புதிய எருசலேமிலிருந்து அவர்கள் பிரிக்கப்படுவார்களா? இங்கே பரிசுத்த ஆவியைப் பெற்றிராதவர்கள், மீண்டும் பிறப்பதைக் குறித்து வேதம் உரைத்துள்ளபடி மீண்டும் பிறக்கவில்லை. இயற்கையான பிறப்பிற்கு தண்ணீர், இரத்தம், ஆவி தேவையாயின், அந்த நபர் உண்மையாகவே மறுபடியும் பிறப்பதற்கு முன்பு, ஆவிக்குரிய பிறப்பிற்கு கிருபையின் மூன்று நிலைகளும் தேவையாயிருக்கிறதல்லவா?**

91 முற்றிலுமாக, நான் இந்தக் காலையில், அதையே, அதே காரியத்தின் பேரில் தான் அதை விளக்கினேன். நீங்கள் எல்லா நிலைகளையும் உடையவர்களாயிருக்க வேண்டும். ஒரு தாயின் கருப்பையில் ஒரு குழந்தை பிறப்பது போல, நீங்கள் ஆவியினாலே பிறப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள், ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறும் வரை பிறப்பதில்லை. அது உண்மை. அப்பொழுதுதான் நீங்கள் பிறக்கின்றீர்கள். நீங்கள் மனமாற்றமடைந்திருக்கவில்லை, அந்த நேரம் வரும் வரையில் நீங்கள் மனமாற்றமடைகின்ற செயல்முறையில்தான் இருக்கிறீர்கள்.

92 அந்தக் காரணத்தினால்தான் இந்த மகத்தான இரகசியங்கள் யாவும் லூத்தருக்கு அளிக்கப்படவில்லை, வெஸ்லிக்கு அளிக்கப்பட முடியவில்லை, நம்மைக் கடந்து வந்துள்ள பெந்தேகோஸ்தே காலத்துக்குக் கொடுக்கப்பட முடியாது. ஏன்? அது நேரமாயிருக்கவில்லை. அவர்கள் பிறப்பிக்கப்பட்டனர். இப்பொழுது, கிறிஸ்துவின் நபர், அவர்தாமே, மனுஷகுமாரன்

(உங்களுக்குப் புரிகிறதா?) மானிட சரீரத்தில் தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார், அது இதுவரை வந்திருக்க முடியாது.

**404. ஆயிர வருட அரசாட்சி துவங்கும்போது, அவிசுவாசிகள் எப்படி பூமியிலிருந்து எடுக்கப்படுவார்கள்?**

93 அவிசுவாசிகள் உபத்திரவ காலத்தில் நித்திரை செய்யும் கன்னிகைகளோடு சென்று, மற்ற எல்லோரையும் (அவிசுவாசிகள், நித்திரை செய்யும் கன்னிகைகள்), இஸ்ரவேலின் மீதியானவர்கள் வெளியே எடுக்கப்பட வேண்டும்.

**405. சகோதரன் பிரான்ஹாம், சில...யாரோ ஒருவர் என்மீது ஏறினால் அல்லது "என்னுடைய கால் விரல்களை மிதித்துப் பார்க்கிறார்** (இது ஒரு நல்ல ஒன்றாக இருக்கலாம்.)—**என்னுடைய கால் விரல்களை மிதித்துப் பார்க்கிறார்," என்ற பழைய பழமொழிபோல, என் கோபம் எழுகிறது; நான் எப்படி இந்தக் காரியத்தை ஜெயங்கொள்ள முடியும்? கர்த்தர் அதைச் செய்ய வேண்டும் என்பதை நான் அறிவேன், ஆனால் நான் என்னுடைய இருதயத்தில் என்ன செய்ய முடியும்? எனக்கு இந்தக் காரியம் வேண்டாம்.**

94 ஜெபத்தினால் உங்களுடைய கோபத்தை இனிமையாக்குங்கள், அதன்பின்னர் உங்களுடைய சிந்தையில் தீர்மானம் செய்யுங்கள். அங்கே...இந்தக் கட்டிடத்தில் உள்ள அநேக ஜனங்கள் துவக்கத்தில் எனக்கு இருந்த கோபத்தைக் காட்டிலும் அதிக கோபத்தை உடையவர்களாயிருக்கவில்லை என்று நான் யூகிக்கவில்லை. ஓ, நான்—நான் எப்போதுமே ஒரு நசுக்கப்பட்ட வாயை உடையவனாய் இருந்தேன். மேலும் நான்—நான்—நான் என் பெரும்பாலான உணவுகளை ஒரு வைக்கோலில் உள்ள உறிஞ்சு குழல் மூலமாகவே குடித்து வந்தேன்.

95 என்னுடைய தாயார் ஒரு அரை இந்தியர் என்பதை நீங்கள் அறிவீர்கள். என்னுடைய தந்தை ஒரு அயர்லாந்துக்காரர், அவர் கென்டக்கி ஐயர்லாந்துக்காரர். மேலும் ஒவ்வொருவரும்... அவர்கள் இருவருமே ஒரு சலசலப்புடன் சண்டையிட போதுமான கோபத்தை உடையவர்களாயிருந்தனர். எப்பொழுதும் என் வாய் நசுக்கப்பட்டிருந்தது; நான் துவக்கத்தில் சிறியவனாயிருந்தேன். அவர்கள் என்னைத் தூக்கி கீழே தள்ளிவிடுவார்கள். நான் மீண்டும் எழுந்திருப்பேன்; என்னால் மீண்டும் எழும்பி நிற்க முடியாத அளவிற்கு...அவர்கள் என்னை மீண்டும் கீழே தள்ளிவிடுவார்கள். அது எப்பொழுதுமே. அதன்பின்னர் என்னால் எழுந்திருக்க முடிந்தபோது, நான் மீண்டும் எழுந்தேன்; அவர்கள் என்னை மீண்டும் கீழே தள்ளினார்கள். எனவே அந்தவிதமாகவே நான் அதைக் கொண்டிருந்தேன்.

96 நான், "என்னால் ஒருபோதும் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியாது" என்று எண்ணினேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்னுடைய ஜீவியத்திற்குள் வந்தபோது, அது அதைச் செய்துவிட்டது. இனி இல்லை...

97 ஒரு சமயம் எனக்கு ஒரு பெண் இருந்தாள்; நான் விளக்குகளை நிறுத்த வேண்டியதாயிருந்தது. அந்த நாளில் எனக்கு என் தலையின் மேலே முடி இருந்தது. அவள், "நீ ஒரு சின்ன, சுருட்டை முடி கொண்ட முட்டாளே!" என்றாள்.

நான் அவளிடம் கூறினேன், நான், "ஸ்திரீயே, நீ அந்த விதமாகச் சபிக்கக் கூடாது. ஓ, நீ தேவனுக்கு பயப்படவில்லையா?" என்றேன்.

அவள், "நீ அற்ப, சுருட்டை முடி கொண்ட முட்டாளே, இது போன்ற விஷயங்களைப் பற்றி யாராவது என்னிடம் பேச வேண்டும் என்று எனக்கு இருந்திருந்தால், உன்னைப் போன்ற ஒரு முட்டாளிடம் நான் பெற்றிருக்கமாட்டேன்" என்று கூறினாள்.

"ஹூ!" அப்பொழுது அவள் என்னை ஒரு *மோசமான, மோசமான பெயர்* சூட்டி அழைத்தாள். அதற்கு இன்னும் ஒரு வருடம் முன்பு இருந்திருந்தால், ஓ, என்னே! நான் எப்பொழுதும், "ஒரு ஸ்திரீயை அடிக்கும் ஒரு மனிதன் ஒரு மனிதனை அடிக்கப் போதுமான புருஷனாயிருக்கவில்லை" என்று கூறுவதுண்டு, ஆனால் நான்—நான் அந்த நேரத்தில் என் அம்மாவை அப்படியொரு கெட்ட வார்த்தையால் திட்டியதால் அதை உடைத்திருக்கலாம். ஆனால் உங்களுக்குத் தெரியுமா? அது என்னை ஒருபோதும் கலக்கமுறச் செய்யவில்லை. நான், "நான் உங்களுக்காக ஜெபிப்பேன்" என்றேன். தொல்லைப்படுத்தவில்லை...அப்பொழுது எனக்கு ஏதோ ஒன்று சம்பவித்திருந்தது என்பதை நான் அறிந்து கொண்டேன். ஆம், ஐயா! ஓ, என்னே!

98 நான் சிறு பிள்ளையாயிருந்தபோது, சண்டையிட்டுக் கொண்டிருந்தபோது, நான் செய்த தீமைகளை நீங்கள் அறிவீர்கள்! ஏறக்குறைய ஒரே நேரத்தில் ஐந்து பேரைக் கொன்றிருப்பேன். பதினாறு தோட்டாக்கள் நிரப்பப்பட்ட ஒரு துப்பாக்கியை எடுத்தேன், நான் ஒரு கென்டக்கிக்காரன் என்பதால் மட்டுமே அந்தப் பையன்கள் என்னை அடித்தார்கள், வேறு எந்தக் காரணமும் இல்லை...என்னால் என் தலையைக்கூட தூக்க முடியவில்லை. ஒருவன் என்னை இப்படிக் கைகளால் பிடித்துக் கொள்வான், இன்னொருவன் கையில் ஒரு கல்லுடன் அங்கே நின்று கொண்டு, எனக்கு உயிரற்றுப் போகும் வரை என் முகத்தில் ஓங்கி அடிப்பான். இந்த உலகில் எதுவுமே இல்லை...

99 அவர்கள் என்னை "கென்டக்கி குஞ்சு" என்று அழைத்தனர், ஏனென்றால் என்னுடைய தாயார், அவள் வாலிபமாயிருந்தபோது, அவள் நிச்சயமாக ஒரு இந்தியனைப் போன்றே காணப்பட்டாள், (சற்று முன்பு அவளுடைய புகைப்படத்தைப் பார்த்துக்

கொண்டிருந்தேன்), அவள் ஒரு பாதி இந்தியர் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். நான் கென்டக்கியைச் சேர்ந்தவன் என்பதாலும், அவள் ஒரு பழங்குடிப் பெண் என்பதாலும், அவர்கள் என்னை “குஞ்சு, ஒரு கென்டக்கி குஞ்சு” என்று அழைத்தார்கள். அது எனக்கு நேரிட்டதற்கு வேறெந்த காரணமும் இல்லை; நான் கென்டக்கியில் பிறந்ததால் என்னால் தவிர்க்க முடியவில்லை.

100 நான் அங்கே பள்ளிக்குச் சென்றேன், நான் உடுத்துவதற்கு ஆடை இல்லாதிருந்தேன், என்னுடைய தலைமுடி என் கழுத்து வரை தொங்கிக் கொண்டிருந்தது. மேலும் அப்பா…அம்மா, அப்பா திருமணத்தின்போது அணிந்திருந்த பழைய கோட்டை எடுத்து, அதை வெட்டி, நான் முதல் முறையாகப் பள்ளிக்குச் செல்ல அணிந்துகொள்வதற்காக எனக்கு ஒரு கால்சட்டை தைத்துத் தந்தாள். மேலும் நான்…அவள் எனக்கு ஒரு ஜோடி வெள்ளை காலுறைகளையும், ஒரு ஜோடி டென்னிஸ் காலணிகளையும் அணிவித்தாள். அதற்கு அவர்கள், “நீ ஒரு ‘பேச்சுப் பேர்வழி’ கென்டக்கியன் போலத் தெரியவில்லை என்றால்” என்றார்கள். மேலும்—மேலும்…அது…அதன்பின்னர், என்னுடைய—என்னுடைய எல்லா பள்ளி நாட்களிலும் அது தொடர்ந்து கொண்டேயிருந்தது.

101 இரண்டு பையன்கள், ஏனென்றால் நான் ஒரு சிறுமியுடன் சாலையோரம் நடந்து சென்று அவளுடைய புத்தகங்களைத் தூக்கிச் சென்றேன்…நான் அதைச் செய்வதை அவர்கள் விரும்பவில்லை, அவர்கள் என்னை அங்கே சந்தித்து, நான் வெறுமனே சுயநினைவிழக்கும் அளவிற்கு என்னை அடித்தனர். நான் அவர்களிடம் கூறினேன், அவர்கள் என்னைப் போக அனுமதித்தால், நான் நேராக வீட்டிற்கு சென்று விடுவேன் என்று நான் வாக்களித்தேன். எனவே அவர்கள்…என்னைப் போகவிட்டு, நான்கு அல்லது ஐந்து முறை உதைத்து, கீழே தள்ளி, என் முகத்தை முழுவதும் தேய்த்துவிட்டார்கள். நான் இப்படியே, அந்த நாணல் புதர் வயல் வழியாக மேலேறி, வீட்டுக்குச் சென்றேன்.

102 நான் ஒரு சிறிய .22 வின்செஸ்டர் துப்பாக்கியைக் கதவுக்கு மேல் வைத்திருந்தேன். தோட்டாக்கள் நிறைந்த அந்தத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, வெட்டுக்கிளி புதரினூடாகச் சென்று, இந்த ஐந்து அல்லது ஆறு பையன்கள் அங்கு வரும்வரை சாலையின் ஓரத்தில் ஒளிந்து கொண்டேன். அவர்கள் வரும் வரை காத்திருந்து, அவர்கள் அங்கு வந்து கொண்டிருந்தபோது, “அந்தக் கென்டக்கியன் இனியாவது தான் எங்கே இருக்கிறான் என்பதை உணர்ந்துகொள்வான்,” என்று அந்த மாதிரி பேசிக்கொண்டே சென்றனர்.

103 துப்பாக்கியின் மேல் கம்பியைப் பின்னுக்கு இழுத்தபடி நான் முன்னேறிச் சென்றேன். நான், “இப்பொழுது, மற்றவர்களைக் பார்க்காதிருக்க, உங்களில் யார் முதலில் மரிக்க விரும்புகிறீர்கள்?”

என்று கேட்டேன். அவர்கள் சத்தமிடத் தொடங்கினர்; நான், “அலறாதீர்கள், ஏனென்றால் நீங்கள் எல்லோரும் ஒவ்வொருவராக மரிக்கப் போகிறீர்கள்” என்றேன். நான் அதைப் பொருட்படுத்திக் கூறினேன்! அப்பொழுது அவர்கள் சத்தமிடத் தொடங்கினர். நான் இழுத்து சுட்டேன்! துப்பாக்கி சுடவில்லை. நான் மற்றொரு தோட்டாவை உள்ளே போட்டேன். சுடவில்லை, அது சுடவில்லை; இன்னொரு குண்டு, சுடவில்லை, அது சுடவில்லை. நான் பதினாறு குண்டுகளையும் தரையில் போட்டேன். அவை ஒவ்வொன்றும் சுடவில்லை. அந்தப் பையன்கள் ஓடி, கூச்சலிட்டு, மலையின் மேல் குதித்து, மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் செய்தனர்.

104 அவர்கள் சென்றபிறகு, நான் அங்கேயே நின்றேன். நான் அவ்வளவு கோபமாக இருக்கும்போது, நான்—நான்—நான் அழாமல், ஒரு முட்டாள்போலச் சிரிப்பேன், என் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும். இப்பொழுது, அது ஒரு கோபம். அது தேவனாய் இருந்திருக்காவிடில், நான் ஒரு கொலைகாரனாக இருந்திருப்பேன்.

105 நான் அந்தக் குண்டுகளை எடுத்து, அவைகளை மீண்டும் துப்பாக்கியில் போட்டேன், “பாவ், பாவ்”; என்றும், அவைகள் எப்போதும் போல் நன்றாகச் சுட்டன. கிருபையைக் குறித்து பேசுங்கள்!

**406. புத்தியில்லாத கன்னிகைகள் ஆயிர வருட அரசாட்சியின்போது எங்கே இருக்கிறார்கள்?**

106 ஆயிரம் வருட அரசாட்சியில் அவர்கள் கல்லறையில் இருப்பார்கள். “மரணமடைந்த மற்றவர்கள் ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை.”

**407. மோசே இஸ்ரவேல் மக்களை வழிநடத்தியதைப் போல, மணவாட்டி கூடிவந்து வாழ்வதற்கு, ஓர் இடம் இருக்குமா, அல்லது இப்போது இருக்கிறதா?**

107 அந்தக் கேள்விக்கு நான் உங்களுக்காகப் பதிலளிக்கப் போகிறேன்; அது இப்போதுதான் எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. நான் உங்களுக்கு உண்மையைக் கூறப் போகிறேன். ஆம், ஐயா! மணவாட்டி யாவரும் கூடிவருவதற்கு ஒரு இடம் உண்டு. அது எங்கே உள்ளது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா? கிறிஸ்துவில். சரி. அங்கே ஒன்று கூடுங்கள்; நாம் யாவரும் ஒன்றாக இருக்கிறோம்.

**408. நாம் ஏன் பெண்களின் உடையைக் குறித்த ஒரு பெரிய பிரச்சினையை உண்டாக்குகிறோம்** (ஓ, ஓ, நான் இதைப் பற்றிப் பேசப் போகிறேன், இல்லையா?)**—பெண்கள் ஆடை உடுத்திக் கொள்ளுதல், முடியை வெட்டுதல் பற்றிய பெரிய பிரச்சினை, மேலும்...மனிதனின் தலைமுடியைக் குறித்தும்**

**அல்லது அவன் உடை உடுத்தும் விதத்தைக் குறித்தும் ஒன்றுமே கூறப்படவில்லையா?**

108 சரி, சகோதரியே, நான் ஒரு காரியத்துடன் ஒத்துப் போகிறேன். முதலாவதாக, ஒரு மனிதன் நீண்ட தலைமுடியை வைத்திருக்கக் கூடாது என்று வேதம் கூறியுள்ளது. அவனுக்கு நீண்ட முடி இருந்திருந்தால், நான் உன்னிடம் சொல்வது போலவே அவனிடமும் சொல்லியிருப்பேன். அவன் தவறாக இருக்கிறான். ஆனால் பெரும்பாலான ஆண்களுக்கு, என்னைப் போன்ற பலருக்கு, அது முற்றிலும் இல்லை. ஆனால் அநேக புருஷர்கள் தங்களுடைய தலைமுடியைக் கத்தரித்துக்கொண்டு, ஆண்களைப் போன்று காணப்படுகின்றனர். இப்பொழுது, அவர்கள் அதைச் செய்யவில்லையென்றால், அவர்கள் அவ்வாறு செய்யக் கூடாது என்றும், ஒரு பெண்ணின் தலைமுடியைப் போல வளரவிடாமல் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருப்பார்கள். நாங்கள் இதைப் பற்றிப் பிரசங்கிக்கும்போது, விவாகம் மற்றும் விவாகரத்து உறுதிமொழிகள் மற்றுமுள்ள காரியங்களில் இவை அனைத்தையும் நீங்கள் பெறுவீர்கள். ஆணின்…அல்லது பெண்ணின் உடை போன்ற ஒரு பெரிய பிரச்சினை…

109 இப்பொழுது, ஒரு மனிதன், முதலாவதாக, ஒரு மனிதனுடைய சரீரம் ஒரு ஸ்திரீயைப் போல ஒரு சோதனைக்குரியதல்ல. இப்பொழுது, மனிதன், அவன் பெரியவனாய், வயோதிகமான, முடி நிறைந்த கால்களோடு, முட்டித் தள்ளி, பானை-வயிற்றோடும், மற்ற எல்லாவற்றோடும், அவன் ஒரு பயங்கரமான தோற்றமுடைய அலங்கோலமாக இருக்கிறான்; அவனைக் குறித்து சோதனைக்குட்படுவது ஒன்றுமில்லை. இளைஞரோ அல்லது வயோதிபரோ, வீதியில் வரும் இந்த மனிதர்களைக் காணும்போது, இந்த மனிதர்கள் சாலையில் நடந்து வரும்போது, ஒரு ஜோடி இரு துண்டு ஆடைகளை அணிந்து, அது என்னவாயிருந்தாலும், உங்களுக்குத் தெரியும், அவர்கள் சாலையில் நடந்து செல்லும்போது பார்ப்பதற்கு மிகவும் “அசிங்கமான” தோற்றத்தில் அவர்தான் இருக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது. நான் எப்போதும் கண்டதிலேயே மிகவும் அசுத்தமான காட்சி அதுவே என்று நான் நினைக்கிறேன். அது உண்மை. அவன்—அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவன் என்று அவனுக்குத் தெரியாது என்று நான் நினைக்கிறேன். (புரிகிறதா? அது உண்மை!), அதைப் போன்ற ஒரு காரியத்தைச் செய்யும் ஒரு மனிதன்.

110 என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க இராணுவம் அந்த விதமாக உடை உடுத்தப் போகிறது என்று நான் கேள்விப்பட்டேன். ஆம்! இராணுவம் அடுத்த ஆண்டு அல்லது அதற்கு அடுத்த ஆண்டு, குட்டைக்கால் சட்டை அணிந்து வெளிவரப் போகிறார்கள். நாம் எவ்வளவு பெரிய பெண்மைத்தன்மை கொண்ட ஒரு கூட்டத்தைப் பெற முடியும்?

111 தேவன் ஒரு மனிதனை ஒரு மனிதனைப் போலத் தோற்றமளிக்கவும், ஒரு மனிதனைப் போலச் செயல்படவும், ஒரு மனிதனைப் போல உடை உடுத்தவும் சிருஷ்டித்தார். அவர் ஒரு ஸ்திரீயை அதேவிதமாகச் செய்யும்படிக்கு ஒரு ஸ்திரீயை உண்டுபண்ணினார், ஒரு ஸ்திரீயைப் போல உடை உடுத்தி, ஒரு ஸ்திரீயைப் போல நடந்துகொண்டு, ஒரு ஸ்திரீயைப் போல இருக்க வேண்டும். இன்று காலை ஏறக்குறைய…மனிதனைக் குறித்த கேள்வி எழும்புகிறது…[ஒலிநாடாவின் ஒரு பக்கம் முழுமையடையாமல் முடிவடைகிறது, இரண்டாவது பக்கம் முழுமையடையாமல் தொடங்குகிறது—ஆசி.]…அவன் விரும்பினால்…

112 ஒரு பெண்ணுக்கு உண்மையிலேயே மெல்லிய முடி இருந்தால், மேலும் அவள் அந்த “எலிகள்” அல்லது அதை நீங்கள் எப்படி அழைத்தாலும், அதில் ஒன்றை அணிய விரும்பினால், நான் நினைக்கிறேன்…என் மனைவி அதை அணிகிறாள். அது ஒரு… அவள் தன்னுடைய தலைமுடி மெல்லியதாக இருப்பதாகக் கூறுகிறாள், மேலும், அந்தப் பெரிய உருண்டைக்கு அவளுக்கு ஏனோ ஒரு தனிப் பிரியம், அது ஒரு பெரிய, அளவுக்கு மீறிய ரொட்டித் துண்டுபோல இருக்கிறது. அவள் தன்னுடைய தலைமுடியை அதைச் சுற்றிக் கொண்டு, அதில் ஊசிகளைப் பொருத்துகிறாள். இப்பொழுது…என்னைப் பொறுத்தமட்டில் உங்களுடைய தலைமுடி நீளமாக இருக்கும் வரைக்கும் அது—அது எந்த ஒரு காரியத்தையும் பாதிக்காது.

113 ஒரு ஊழியக்காரன் தன்னுடைய மனைவி கடிந்து கொள்ளப்பட்டாள் என்று கூறினான்—அவளுடைய தலைமுடியில் ஒரு—ஒரு சாயம் இருந்ததாம். ஒரு கேள்வியிலிருந்து நான் கண்டறிந்தேன், அது அவளுடைய தலைமுடியில் ஒரு சாயம் பூசுதல் அல்லது வர்ணம் பூசுதல் என்று பொருள்படுகிறது. அது தவறு என்று என்னால் கூற முடியாது; அதைக் குறித்து எனக்கு ஒன்றுமில்லை. அவள் நீண்ட முடியை உடையவளாயிருந்தால், அதைக் குறித்து என்னால் கூற முடிந்தது அவ்வளவுதான்.

114 இப்பொழுது, ஒரு மனிதன்…இந்த நபர் இன்று காலைத் தங்களுடைய தலைமுடியைக் கழற்றிவிட்டு, அதைத் திரும்ப வைத்துக்கொள்வதாகக் கூறினார். இப்பொழுது, இந்தவிதமான சிகை அலங்காரம் இங்கேயும் கூட வந்துள்ளது. பார்த்தீர்களா?

115 இப்பொழுது, ஒருவனுக்கு முடி இல்லையென்றால், அவனது மனைவி…பெண்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன், “சரி, என்னால் ஜானை அழைத்து வர முடிந்தால்…அவன் ஒரு செயற்கை முடியை அணிந்திருந்தால், அவன்—அவன் அழகாக இருப்பான் என்று நான் நினைக்கிறேன். சகோதரன் பிரான்ஹாம், அதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவன் அதைச் செய்வது தவறா?” இல்லை, ஐயா! இல்லை, உண்மையாகவே, அது தவறல்ல, இல்லவே இல்லை. அவர் அதை அணிய விரும்பினால், அதில் எந்தத் தவறும்

இல்லை, அது செயற்கைப் பற்களையோ அல்லது அது போன்ற வேறு எதையோ அணிவதைவிட வேறுபட்டதல்ல.

116 சொல்லப்போனால், எனக்கு மூன்று செயற்கைப் பற்கள் உள்ளன. அவற்றை நான் கொண்டிருக்காமல் இருந்திருக்கலாம் என்று விரும்புகிறேன். அவைகள் ஒரு கம்பியில் இருக்கின்றன; அது எப்பொழுதுமே என்னுடைய சத்தத்தைச் சுருக்கிக் கொண்டும், என்னுடைய நாவை அறுத்துக்கொண்டும், மற்றவைகளைச் செய்து கொண்டும் இருக்கின்றன, ஆனால் நான் அவைகளைப் புசிப்பதற்கு கொண்டிருக்க வேண்டும். நான்…நான் அயல்நாடுகளில் கூட்டங்களுக்குச் செல்லும்போது, நான் செயற்கை முடி அணிகிறேன்; அது பார்ப்பதற்கு அழகாக இருப்பதால் அல்ல, ஏனென்றால் என்னுடைய தலைக்கு மேலே முடி இல்லாமல் அல்லது அது என்னவாயிருந்தாலும் நான் இங்கேயே நிற்பேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அது எனக்கு எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது; நான் இயேசு கிறிஸ்துவை பிரதிநிதித்துவப்படுத்த இங்கிருக்கிறேன். ஆனால் அந்த வெப்பமண்டலப் புயல்களில் ஒன்றின் முதல் இரவில் நான் அங்கே நின்றுகொண்டிருக்கும்போது, அடுத்த இரவே என் தொண்டை மிகவும் புண்ணாகிவிடுவதால் என்னால் வெளியே செல்ல முடிவதில்லை.

117 ஆகையால் அதன்பின்னர், நான் அதைச் செய்ய விரும்புகிற ஒரு காரியமாயிருந்தால், அதைச் செய்ய உணர்ந்தால், நான் அதைச் செய்வேன். ஆம், ஐயா! அதைச் செய்யக் கூடாது என்று எந்தக் காரியமும் கூறவில்லை. சகோதரியே, நீங்கள் ஒரு எலியை அணியக் கூடாது என்று ஒரு காரியமும் கூறவில்லை, அல்லது முடியை மாற்றுவது, அல்லது உங்கள் தலைமுடியில் ஏதேனும் மாற்றம்…அது முற்றிலும் சரிதான், ஆனால் உங்கள் தலைமுடியை நீளமாகவே இருக்க விடுங்கள். மனிதனே, நீ உன்னுடையதை வெட்டிக்கொள்கிறாய். நீங்கள் எதைப் பெற்றுள்ளீர்களோ, அதை வெட்டி வைத்துக் கொள்ளுங்கள். பார்த்தீர்களா? அதன்பின்னர், அது அதைத் தீர்த்து வைக்கிறது.

118 ஸ்திரீயே, நீ ஒரு ஸ்திரீயைப் போன்றே உடையணிவாய். மனிதனே, நீ ஒரு மனிதனைப் போலவே உடையணிவாய், பெண்களின் ஆடைகளை உடுத்திக் கொண்டு ஒரு பெண்மைத்தன்மை கொண்டவளாக இருக்க முயற்சிக்காதீர்கள். ஸ்திரீகளே, நீங்கள் ஆண்மைத்தன்மை கொண்டவர்களாய், ஒரு மனிதனுடைய ஆடைகளை அணிய முயற்சிக்காதீர்கள், ஏனென்றால் நீங்கள் அதைச் செய்யத் தேவன் விரும்புகிறதில்லை, வேதம் அதைக் கண்டிக்கிறது.

119 ஆனால் இப்பொழுது ஒரு செயற்கை முடியை அல்லது தலைமுடியை வைத்துக்கொள்வதைக் குறித்து…பாருங்கள், அந்த “எலிகளில்” ஒன்று என்ன? சற்று முன்னர் நான் ஒரு தவறு செய்துவிட்டேனா அல்லது அது ஒரு “எலி”யா? அது—அது ஏதோ

ஒன்று—அது ஒரு—ஒரு ஸ்திரீ தன்னுடைய தலைமுடியை இன்னும் அதிகமாகக் காண்பிக்கும்படியாக வைக்கிற ஏதோ ஒன்று...அது என்னவாயிருந்தாலும் (புரிகிறதா?), அதில் தவறொன்றுமில்லை. தொடருங்கள், அது சரிதான்.

**409. சகோதரன் பிரான்ஹாம், ஒரு சகோதரி சுமார் எண்ணூறு மைல்கள் பயணம் செய்து சபைக் கூடாரத்திற்கு வந்தாள், நீங்கள் மாம்சமாகிய இயேசு கிறிஸ்து என்று தான் நம்புவதாக அவள் கூறினாள். தயவு செய்து இதன் பேரில் பேசுங்கள். அவள் என்ன நினைக்கிறாள் என்று மற்றவர்களிடம் கூற முயற்சிப்பதில் அவள் மிகவும்** (பொ-று-மை-ய-ற்-ற-...) **பொறுமையற்றவளாயிருந்தாள்.** (பொ-று-மை-ய-ற்-ற-...) **பொறுமையின்மை.** சரி.

120 இப்பொழுது, உண்மையாகவே அந்தச் சகோதரி தவறாக இருந்தாள். நான் இயேசு கிறிஸ்து அல்ல; நான் அவருடைய ஊழியக்காரன். நாம் அதை அநேக முறைகள் பார்த்து வந்திருக்கிறோம். ஆனால்...

ஓ, நான் இப்பொழுது மிக அருகாமையில் வந்து கொண்டிருக்கிறேன்; எனக்காக ஜெபியுங்கள், இன்னும் சிறிது நேரம் மட்டும்.

**410. சகோதரன் பிரான்ஹாம்...**(நம்மால் முடிந்தளவு துரிதமாக மற்றவர்களைப் பற்றி நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா?) **சகோதரன் பிரான்ஹாமே, ஒரு சமயம் நான் தோல்வியுற்றேன், தேவன் எனக்கு...சாராளுக்குக் கொடுத்ததுபோன்ற ஒரு வாக்குத்தத்தத்தை எனக்கும் கொடுத்ததாக உணர்ந்தேன். ஒரு கேள்வி இருந்தது, ஆனால் வாக்குத்தத்தம் அதற்குப் பிறகு வந்தது. அது தேவனுடைய வாக்குத்தத்தமா? சாராளுடையது என்று நான் அறிந்திருந்தேன், ஆனால் நான் நேரம் மிகக் குறைவு என்பதை உணருகிறேன். நாங்கள் உங்களுடைய ஊழியத்தையும், உங்களை அழைத்தவரை நேசிக்கிறோம்,** (அது இனிமையாயுள்ளது, இல்லையா?)**—உங்களுடைய ஊழியத்திலும், அதற்கு உங்களை அழைத்தவரிடத்திலும் அன்பு கூருங்கள், ஆகையால் நாங்கள் உங்களை நேசிக்கிறோம்.** ஓ, அவர்கள் தங்களுடைய பெயரைக் கையெழுத்திட்டனர். சகோதரியே, சகோதரனே, உங்களுக்கு நன்றி. ஒரு கேள்வி, ஆம், ஆம். சரி.

121 இப்பொழுது, தேவன்...அவர் உங்களுக்கு வாக்குத்தத்தத்தை அளிக்கிறார் என்று எண்ணிப் பாருங்கள், அது சாராள் செய்ததுபோலவே சம்பவித்தது. நிச்சயமாக, அதே தேவன்; அவர் அதே விதமாகப் பதிலளிக்கிறார். அது தேவனால் உண்டாயிருந்தது என்பதைத் தவிர வேறெதையும் நீங்கள் விசுவாசிக்க வேண்டாம்.

**சகோதரன் பிரான்ஹாம், நான் உங்களிடத்தில் வேதாகமத்தைக் குறித்து சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். பரிசுத்த மாற்கு தயவு கூர்ந்து விளக்கவும்...**

நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன்; நான் அதை வைத்துள்ளேன், பரிசுத்த மாற்கு 16-ம் அதிகாரம். அன்றொரு நாள் நாம் அதைப் பெற்றுக்கொண்டோம் என்பது எனக்கு நினைவிருக்கிறது. நாம் பார்ப்போம்.

**411. அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், பரிசுத்த மத்தேயு 22-ம் அதிகாரம் வசனத்தைத் தயவு செய்து விளக்கிக் கூறுங்கள்...** (அந்த ஒன்றை நாம் பெற்றுள்ளோம். பார்த்தீர்களா? அன்றொரு நாள் நினைவிருக்கிறதா? நான்—நான் அதை உங்களுக்குக் காண்பிப்பேன். நான்...அதை இங்கே பாருங்கள், 22.) **ஒரு வஸ்திரம் அணிந்திருந்தும், ஆனால் கலியாண வஸ்திரங்களில் ஒன்றை தரிக்காத விருந்தாளி எப்படி கலியாண விருந்திற்கு வந்தார்?**

122 நினைவிருக்கட்டும், நான் கூறினேன்...நான் ஒருவிதமாக ஒரு சிறு வேடிக்கைக்காகக் கூறினேன்; நான், "வாசலின் வழியாக அல்ல, ஜன்னல் வழியாக வந்த...ஸ்தாபன சகோதரன்" என்றேன். வாசல் வார்த்தையாயுள்ளது.

**காயீன் சர்ப்பத்தின் வித்திலிருந்து வந்தவன் என்று நீர் கூறினீர். "நான் கர்த்தரிடத்திலிருந்து ஒரு மனிதனைப் பெற்றுள்ளேன்" என்று ஏவாள் ஏன் கூறினாள்?**

அதைத்தான் நான் இந்தக் காலையில் கண்டறிய முயற்சித்துக் கொண்டிருந்தேன். அதற்கான வேதவாக்கியங்களை நான் இங்கே எழுதி வைத்துள்ளேன். நான் சற்று பின்வாங்கி இருக்கலாம்; நான் அப்படித்தான் நம்புகிறேன். சிலவற்றை இங்கே காணலாம்...

**சகோதரன் பிரான்ஹாம், என்னுடைய கணவர், ஒரு கத்தோலிக்கராக வளர்க்கப்பட்டவர், அவர் எங்களுடைய வழிபாட்டில் அவருடைய வழியில் ஜெபிக்க விரும்புகிறார்.**

நான் அதைப் பெற்றுக் கொண்டேன். நினைவிருக்கிறதா?

ஓ, நான் இவைகளை இப்பொழுது இங்கே கொண்டு வருகிறேன். நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன்.

**சகோதரன் பிரான்ஹாம், நான் இறுதியாக...என் சகோதரிக்கு ஒரு ஸ்தாப- இருந்து ஆர்வம் காட்ட...**நான் அதைப் பெற்றுக்கொண்டேன். ஒரு பெண்மணிக்கு ஒரு கத்தோலிக்க சகோதரி இருந்தாள்.

**சகோதரன் பிரான்ஹாம், இரண்டாம் தீமோத்தேயு 4, அதன் மூலம் அளிக்கப்பட்ட வரம் என்ன...?**

நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன். எத்தனைபேர் அவைகளை நினைவில் வைத்திருக்கிறீர்கள்? அவைகளில் சிலவற்றை நான் இங்கே கலந்திருக்கிறேன். பார்த்தீர்களா?

**எந்த வகையையும் நாங்கள் பயன்படுத்துவது சட்டப்பூர்வமானதா...?**

123 அது கருத்தடை. நான்—நான்...இன்று காலையில் நான் கூறினது போல, (புரிகிறதா?) அதன் பேரில் நான் உங்களிடம் தனிப்பட்ட முறையில் பேசட்டும்.

**முதலாவதாக, ஐந்து புத்தியில்லாத கன்னிகைகள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா...?**

நான் அதைப் பெற்றுக் கொண்டேன். நான் இங்கே பின்னால் இருக்கிறேன். ஒரு நிமிடம், என்னோடு பொறுமையாயிருங்கள்.

**அந்த வழியை அறிந்த பிறகு, மனந்திரும்புதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதலுக்கான வழியை அறிந்த பிறகு,** (நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன், உங்களுக்கு நினைவிருக்கிறதா?), **அதன்பின்னர் அதிலிருந்து விழுந்துபோக...**

எனக்கும் அந்த ஒன்று உண்டு. நான் ஓரளவு பின்வாங்கியுள்ளேன். நான் அவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்...

**சகோதரன் பிரான்ஹாம், பரிசுத்த மத்தேயு 24:28-ன் பொருள் என்ன: "பிணம் எங்கிருக்கிறதோ, அங்கே கழுகுகள் கூடும்"?**

நான் அதை விளக்கியது நினைவிருக்கிறதா? பார்த்தீர்களா? நான் அதைப் பெற்றுக் கொண்டேன். ஒருக்கால் நான் அவர்களோடு பேசி முடித்திருக்கலாம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**எடுத்துக் கொள்ளப்படுதலுக்காக** (இப்பொழுது, நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன்.) **மணவாட்டி உங்களோடு இருக்க வேண்டிய நேரம்—நேரம் இதுதானா?**

ஒருக்கால் நான்...நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன் என்பதை நான் அறிவேன், ஏனெனில் அது அடிப்பாகத்தில் குறிக்கப்பட்டிருந்தது; எனக்கு அது நினைவிருக்கிறது. பாருங்கள், கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நாம் இப்பொழுது இங்கே கீழே இறங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் பார்ப்போம்.

**412. அப்போஸ்தலர் 2:38 தான் ஞானஸ்நானம் பெறுவதற்கான ஒரே வழியாயிருக்கிறபடியால், ஜனக்கூட்டத்தைக் குறித்து என்ன...?**
நான் அதைப் பெற்றுக் கொண்டேன்.

124 அவர்களுடைய நாட்களில் அவர்கள் அதை ஒருபோதும் அறியாதிருந்தனர்; அது இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. செய்ய வேண்டியது என்னவென்று உங்களுக்குத் தெரிந்த பிறகு,

“நன்மையைச் செய்யத் தெரிந்தும் அதைச் செய்யாதவனுக்கு, அது பாவமாகிறது.”

**413. சகோதரன் பிரான்ஹாம், புகையிலை வளர்ப்பதும்—வளர்ப்பதும் அதில் உழைப்பதும் தவறா?** நான் அதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

125 இப்பொழுது, நான் புகையிலைக்கு எதிரானவன். நான் புகையிலை உபயோகத்திற்கு எதிரானவன்; மறுபடியும் பிறந்த எந்த ஒரு கிறிஸ்தவனும் அப்படித்தான் இருப்பான்; அவ்வளவுதான், ஏனென்றால் அது தவறு. தொண்டை மற்றும் நுரையீரல் புற்று நோயின் பெரும்பகுதி புகையிலையிலிருந்துதான் துவங்குகிறது என்று மருத்துவ விஞ்ஞானமும் கூடக் கூறுகிறது என்பதை நாம் அறிவோம். அவர்கள், “வடிகட்டப்பட்ட சிகரெட்டுகளைப் புகைத்தல்” என்கின்றனர்.

126 இப்பொழுது, புகைப்பிடிக்கும் புருஷர்களும், ஸ்திரீகளுமாகிய உங்களுக்கு, அது உங்களை வஞ்சிப்பதாகும், ஏனென்றால் உங்களால் முடியாது…பாருங்கள், அவர்கள் செய்யும் ஒரே காரியம்…நீங்கள் வடிகட்டிய சிகரெட்டுகளை வாங்கும்போது, நீங்கள் அவைகளை அதிகமாக வாங்க வேண்டும், ஏனென்றால் அது புகையின் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை மாத்திரமே உள்ளே விடுகின்றது. ஏனென்றால் யாரும் உங்களிடம் கூறுவார்கள்…

127 நான் கடந்த ஆண்டு வாஷிங்டனில் நடந்த உலகக் கண்காட்சியில் அந்த விரிவுரையைக் கேட்டேன் (நான் அங்கே உலகக் கண்காட்சியில் இருந்தபோது), உலகம் முழுவதிலுமிருந்து வந்த மருத்துவர்கள் அதை விளக்கினர்; நீங்கள் தார் இல்லாமல் புகையை உண்டாக்க முடியாது என்றும், உங்களால் முடியாது… உங்களிடம் புகை இருந்தால் உங்களுக்குத் தார் இருக்கிறது. மேலும், “வடிகட்டப்பட்ட சிகரெட்டுகளில் எந்த மனிதனும் உங்களை வஞ்சிக்க வேண்டாம், ஏனென்றால், சிகரெட்டுகளின் மீதான உங்கள் ஏக்கத்தைத் தணிக்க நீங்கள் ஒன்றை அல்லது மற்றொன்றைப் புகைக்கும்போது, மற்றொன்றை இரண்டோ மூன்றோ புகைப்பீர்கள்.” இது ஒரு—ஒரு பொதுவான ஏமாற்றம், வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்யப்படும் ஒரு பொதுவான ஏமாற்றம் மட்டுமே.

128 ஆனால் புகையிலைத் தொழிலில் வேலை செய்ய அல்லது புகையிலை பயிரிடுதல் இப்பொழுது, இந்தப் புகையிலையை பயிரிடுகிற கென்டக்கி சகோதரர்களே, சரி, நான் ஒரு காரியத்தைக் கூறட்டும்: இதைச் செய்ய அது உங்களைக் கண்டனம் செய்தால், நீங்கள் அதைச் செய்யாதீர்கள், ஏனென்றால் அவர்களுடைய மரணத்திற் காக யாரோ ஒருவருக்கு ஆதரவாக இருப்பதை நான்…நான் எதையும் செய்ய விரும்பமாட்டேன். பக்கத்து வீட்டுக்காரருக்குக் போதையான மதுபானம் கொடுப்பது தவறு

என்றால், ஒரு போதையான மதுபானத்தைத் தயாரிப்பதும் தவறாகும். ஆனால் இப்பொழுது நான் இன்னொன்றையும் கூறட்டும். இப்பொழுது, அதை வளர்ப்பதைப் பொறுத்தமட்டில்...

129 புகையிலை, உங்களுக்குத் தெரியும், நிக்கோடின் மருத்துவ ரீதியிலும் கூடப் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் விஸ்கியை உற்பத்தி செய்யும் சோளத்தையும், விஸ்கியை உருவாக்கும் கோதுமையையும், பார்லியையும் பயிரிடுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? அது சரியா? சரி. பார்த்தீர்களா? அவர்கள் அதை எதற்காக உபயோகிக்கப் போகிறார்கள் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள்.

130 ஆனால் இப்போது, நாம் மக்காச்சோளம் பயிரிடுகிறோம், அதை வளர்க்கும்போது, அதிலிருந்து சோளப் பொரியலும், மக்களுக்கான உணவும், சோள ரொட்டியும், இன்னும் பலவும் கிடைக்கும் என்று நாம் நினைக்கலாம்; ஆனால் அவர்கள் அதிலிருந்து போதை பானங்களையும் தயாரிக்கிறார்கள் (பார்த்தீர்களா?), எனவே நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாதிருப்பீர்கள்.

131 நீங்கள் வளர...உங்களுக்கு ஒரு லீலி புஷ்ப தோட்டம் உள்ளது. லீலி புஷ்பத்தை அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் அதிலிருந்து அபின் தயாரிக்கிறார்கள். கீரையை வைத்து அவர்கள் என்ன செய்வார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அதேதான் செய்கிறார்கள். கீரையிலும் அபின் இருக்கிறது. நீங்கள் எப்போதாவது ஒரு கட்டு கீரையை உண்டுவிட்டு, சிறிது நேரம் எவ்வளவு அமைதியாக உணர்வதைப் பார்த்தீர்களா? அது அதில் உள்ள அபின். அது வெங்காயத்திலும் உள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா? நிச்சயமாக. எனவே, நீங்கள்—நீங்கள் பாருங்கள், நீங்கள் எதற்காக அதைச் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அது உள்ளது.

132 ஆனால் ஒரு கிறிஸ்தவ சகோதரன் என்ற முறையில் ஒரு கிறிஸ்தவ சகோதரனுக்கு நான் இதைக் கூறட்டும்: உங்களிடம் புகையிலை மூலப்பொருள் இருந்தால், அதை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டு, மக்காச்சோளத் தொழிலில் வாய்ப்பைப் பாருங்கள். அது சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன் (புரிகிறதா?), ஏனென்றால் அவர்கள் அதை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை...

**என் கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையும், ஒரு விபச்சாரியுமானவளை விவாகம் செய்து கொண்டார்...**

நான் அதைப் பெற்றுக் கொண்டேன். வந்தது...அது எங்கிருந்து வந்தது என்று நான் உங்களிடம் கூறினேன். அது இங்கிருந்து வெகு தொலைவில் உள்ளது. நான் அந்தக் கேள்வியைப் பெற்றுள்ளேன். இப்பொழுது, நாம் பார்ப்போம்.

**வெளிப்படுத்தின விசேஷம் 12-ல் உள்ள ஸ்திரீ...**

நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன். ஆம், எனக்கு இந்தக் கொத்தான கேள்விகள் உள்ளன. நாம் பார்ப்போம். அதுதான் அதைப் பெற்றுக் கொண்டது; நான் அவற்றைப் பெற்றுக் கொண்டேன். வெளிப்படுத்தின விசேஷம் 12-ம் அதிகாரத்தில், அவள் என்னவாயிருந்தாள் என்பதை பற்றியது. நாம் பார்ப்போம்.

**414. சகோதரன் பிரான்ஹாம், ஒரு பெண் பிரசங்கியாரால் கட்டுப்படுத்தப்படும் சபைக்குச் செல்லும் இரண்டு பிள்ளைகள் எங்களுக்கு உள்ளனர். அவள் வார்த்தையை விட்டு விலகிவிட்டாள் என்பதை நாங்கள் அறிவோம். எங்களுடைய பிள்ளைகள் இந்தப் பலமான செல்வாக்கின் கீழ் உள்ளனர். இதைத் தவறு என்று நாம் எப்படி அவர்களிடம் கூற வேண்டும்?**

133 நான் உங்களுக்கு முன்பே கூறிவிட்டேன். நான் அதற்குப் பதிலளித்தேன். அதை மிருதுவாகக் கையாளுங்கள். இங்கே அமர்ந்திருக்கும் அந்த நபர் எனக்குத் தெரியும் என்று நான்...நான் சொன்னால், நீங்கள் என்ன சொல்வீர்கள். அந்த ஸ்திரீ யாரென்பதை நான் அறிந்திருக்கிறேன் என்றும், அதை உங்களிடம் கூற முடியும் என்று நான் நம்பினால் நீங்கள் என்னக் கூறுவீர்கள்?

**415. ஆயிர வருட அரசாட்சியின் காலம் ஆயிரமாண்டு இருக்குமா அல்லது வெறும் காலக் கணக்காக இருக்குமா?**

134 இன்று காலையும் கூட எனக்கு அந்த ஒன்று கிடைத்தது. பார்த்தீர்களா? அதற்கு ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. சரி.

**சகோதரன் பிரான்ஹாம், என்ன பிரச்சனை...**

ஆம், நான் அதைப் பெற்றுக்கொண்டேன். கோதுமையும், களைகளும், நாம் அதைப் பெற்றுள்ளோம் என்பதை நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள்.

நாம் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். நான் இவற்றின் கட்டை பின்னால் போட்டிருக்கலாம். நாம் பார்ப்போம். அதே காரியம்.

**சகோதரர் பிரன்ஹாம், நான் ஆறு அருமையான பிள்ளைகளின் தாய், பொருளாதார ரீதியாக உதவுவதற்காக, நான் சிறிது காலம் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று என் கணவர் விரும்புகிறார். நான் செல்ல வேண்டுமா? மேலும், ஆபிரகாமைப் போன்ற விசுவாசத்தை...எனக்குத் தரும்படி... ஆபிரகாம்...ஆபிரகாம், தானியேல் மற்றும் எபிரேயப் பிள்ளைகளைப் போன்ற ஒரு விசுவாசத்தை...தேவனிடத்தில் ஜெபிக்க விரும்புகிறேன். ஒரு கிறிஸ்தவன் புகையிலையை பயிரிடுவது சரியா?** நான் இப்பொழுதுதான் அதைக் குறித்துப் பார்த்திருக்கிறேன். மேலும்...

**416. சகோதரன் பிரான்ஹாம், ஒரு பெண் தன்னுடைய கால்களைச் சிரைப்பது தவறா?**

135 நான் கற்பனை செய்கிறேனா? அது அவ்வாறு கூறுகிறதா? என்னால் முடியாது...எனக்குத் தெரியாது. நான் அதை உங்களிடமே விட்டுவிடப் போகிறேன்.

**இந்த நாளில் உங்கள் குடும்பத்தைக் கட்டுப்படுத்துவது தவறா? இதன் பொருள் முழுமையான கருத்தடையைக் கடைப்பிடிப்பதா?**

136 நான் ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும்...உண்மையாகவே, அதற்குப் பதிலளித்தேன். நாம் பார்ப்போம்.

**ஒரு ஸ்திரீ பாவத்தில் இருக்கும்போது விவாகரத்து செய்து, மறுமணம் செய்து கொண்டால்...**

137 நான் அதற்குப் பதிலளித்தேன். “விவாகரத்து வழக்குகளை விட்டுவிடுங்கள்...” என்று நான் கூறியது உங்களுக்கு நினைவிருக்கும்.

**417. நான் மிகவும் நேசிக்கும் ஒரு நண்பர் எனக்கு உண்டு. அவள் சில ஒலிநாடாக்களையும், கடிதங்களையும் வைத்திருந்திருக்கிறாள் என்று நான் நினைக்கிறேன்... அவளுடன் ஒருபோதும் பேசவில்லை. உண்மையாகவே, நான் அவளைப் புண்படுத்தி, அவளுடைய ஒரு நட்பை இழந்துவிடுவேன் என்றும் நான் பயப்படுகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?**

138 அவளிடத்தில் அன்போடு பேசுங்கள். நான்...அதற்கு நான் பதிலளித்தேன் என்று நான் நினைக்கிறேன், ஆனால் நான்—நான்... எந்தக் காரியத்தையும் யார் மீதும் திணிக்க முயற்சிக்காதீர்கள். அப்படியே உப்பாக இருங்கள்; அவர்கள் உங்களைப் போல இருக்க வாஞ்சிப்பார்கள்.

சகோதரனே, சகோதரியே, நான் இவைகளுக்கு பதிலளித்திருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன்.

**சகோதரன் பிரான்ஹாம், ஐந்து புத்தியில்லாத கன்னிகைகளைக் குறித்து தயவு கூர்ந்து விளக்கிக் கூறுங்கள்.**

நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன் என்பதை நான்—நான் அறிவேன். அது எழுதப்பட்டிருக்கிறது, அது சிவப்பு காகிதமாகும். நாங்கள்...நான் அந்த ஒன்றை வைத்துள்ளேன் என்று நான் நினைக்கிறேன். இவை அனைத்திற்கும் நான் பதிலளித்துள்ளேன் என்று நான் நம்புகிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நாம் பார்ப்போம். ஒரு நிமிடம் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

**418. அருமையான தேவனுடைய தீர்க்கதரிசியே, பரிசுத்த மாற்கு 16:18, நான்...சுகவீனமானவர்கள் மேல் கைகளை வைப்பதன் ஒரு பாகம்...நான் பாம்பு கையாளுபவர்களைச் சுற்றிலும் இருக்கிறேன். அதைக் குறித்து என்ன?**

139 பாருங்கள், அது ஒரு நல்ல கேள்வி. நீங்கள் பாம்பு பிடிக்கும் பழக்கமுடையவர்களாயிருந்தால், அவர்கள் மாற்கு 16…நிச்சயமாக! வேதாகமம் என்ன கூறுகிறதோ அதையே அது பொருட்படுத்துகிறது என்று நான் நம்புகிறேன். நாம் கர்த்தரை எதற்காவது சோதிக்க முயன்றால், அதற்குரிய பலனையே நாம் பெறுவோம் என்று நான் நம்புகிறேன். ஆனால், நீங்கள் எனக்கு ஒரு அரிதார நஞ்சு புட்டியைக் கொண்டு வந்து, அதை நான் குடித்து, எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதை உங்களுக்கு நிரூபிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும் எனத் தேவன் கூறியிருக்கிறார் என்று நான் நினைக்கவில்லை; அதுபோலவே, நீங்கள் எனக்கு ஒரு பாம்பைக் கொண்டு வந்து, அதை நான் கையில் எடுத்து, அதன் விஷத்தை என்னால் வெல்ல முடியும் என்ற விசுவாசம் எனக்கு இருக்கிறது என்பதை உங்களுக்குக் காட்டுவதும் சரியானது என்று நான் நம்பவில்லை. அது அப்படியிருக்கும் என்று நான் நம்பவில்லை.

140 நான் தண்ணீரில் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தாலும் அல்லது கர்த்தருடைய ஊழியத்தின் பேரில் செய்து கொண்டிருந்தாலும், அல்லது காட்டில் சென்றால், பாம்பு என்னைக் கடித்துவிட்டால், நான் கர்த்தருடைய நாமத்தில் நடந்து செல்வேன். பார்த்தீர்களா? அது அதைத்தான் பொருட்படுத்துகிறது என்று நான் நினைக்கிறேன்.

141 இப்பொழுது, நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமானால்… அதைக் கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று பாருங்கள், அருமையான நபர், நீங்கள் யாராயிருந்தாலும்—நீங்கள் யாராயிருந்தாலும்…இதை நினைவில் கொள்ளுங்கள். பார்த்தீர்களா? அதைக் குறித்து வேதம் என்ன செய்தது என்பதைக் கவனியுங்கள். நீங்கள் “மகிமை, மகிமை, மகிமை…” என்று சொல்ல முயற்சித்தால் நான் நம்பாததைப்போலத்தான் இதுவும். அந்நிய பாஷைகளில் பேசும்படி தேவனைச் சோதிக்காதீர்கள், ஆவியானவர் உங்கள் மூலமாகப் பேசட்டும். புரிகிறதா?

142 இப்பொழுது, நான் தேவனை சோதிப்பதிலோ அல்லது எதையும் திணிப்பதிலோ நம்பிக்கை இல்லை. சற்று முன்னர் நான் கூறினது போல, ஆவியானவர்…நாம் ஆவியின் பேரில் காத்திருக்கிறோம்; அது அதைச் செய்கிறது.

143 இப்பொழுது கவனியுங்கள், பவுல் கிரேத்தா தீவில் விறகு குச்சிகளை எடுத்துக்கொண்டிருந்தான் என்று நான் நினைக்கிறேன். அவன் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தான், ஒரு நச்சுப் பாம்பு, ஒருகால் ஒரு ஆப்பிரிக்க நச்சுப் பாம்பு…அது ஒரு மரண கடி; அவன் உடனே கீழே விழுந்து மரித்திருக்க வேண்டும். ஒரு ஆப்பிரிக்க நச்சுப் பாம்பைத் தவிர வேறு எந்தப் பாம்பும் உங்களை அவ்வளவு சீக்கிரத்தில் கொல்லும் என்று எனக்குத் தெரியாது.

144 எனவே அவன் இந்த ஆப்பிரிக்க நச்சுப் பாம்பை எடுத்தான்

என்று நாம் வைத்துக் கொள்வோம். அது ஒரு கொடிய கடி; தப்பிப் பிழைப்பதற்கு இன்னும் சில மூச்சுகளே மீதமிருக்கும். ஆப்பிரிக்க நச்சுப் பாம்பு அல்லது நாகப்பாம்பு உங்களைத் தாக்கும்போது, அந்தக் கருநாகத்திடமிருந்து தப்பிப் பிழைக்க, அந்த மருந்துடன் உங்களுக்கு ஐம்பதுக்கு ஐம்பது வாய்ப்பு இருக்கிறது. மஞ்சள் நாகத்தைப் பொறுத்தவரை, இறப்பதற்கு சுமார் எண்பது சதவீதமும், உயிர் பிழைப்பதற்கு சுமார் இருபது சதவீதமும் வாய்ப்புள்ளது; ஒரு ஆப்பிரிக்க நச்சுப் பாம்போ, உயிர் பிழைக்க எந்த வாய்ப்பும் உங்களுக்கு இல்லை. நீங்கள் மரித்துவிடுவீர்கள், அவ்வளவுதான், ஏனென்றால் நீங்கள் சுவாசிப்பதில்லை, ஆனால் ஒரு சில சுவாசங்கள் மட்டுமே. அது நரம்பு மண்டலத்தையும், இரத்த அமைப்பையும், மற்ற ஒவ்வொரு காரியத்தையும் செயலிழக்கச் செய்கிறது, நீங்கள் மரித்து விடுவீர்கள். பார்த்தீர்களா?

145 ஆனால் இந்த ஆப்பிரிக்க நச்சுப் பாம்போ, பவுலின் கரத்தைக் கடித்தபோது, அவர்கள், “சரி, அந்த மனிதன் ஒரு...அவன் ஒரு பொல்லாத மனிதன், ஒருவேளை ஒரு கொலைகாரன். அவன் சமுத்திரத்திலிருந்து தப்பினபோதிலும், அதே சமயத்தில்... அவனால் மரணத்திலிருந்து தப்பிக்க முடியவில்லை. அவன்—ஒரு கொலைகாரனாக இருக்கின்றபடியால்—தெய்வங்கள் அவனைப் பழிவாங்கப் போகின்றன” என்றனர்.

146 பவுல் தன்னுடைய கரத்தில் தொங்கிக் கொண்டிருந்த இந்தப் பாம்பை நோக்கிப் பார்த்தான், உணர்ச்சிவசப்படாமல், அவன் அதைக் உதறிப் போட்டு, “ஓ, கர்த்தாவே, அதைச் செய்ய எனக்கு உதவி செய்யும்” என்றான். இல்லை! அவன் அதை நோக்கிப் பார்த்து, அதை நெருப்பில் உதறிப்போட்டுவிட்டு, ஒன்றுமே நடக்காதது போன்று குச்சிகளை எடுத்துக்கொண்டு சென்றான்.

அவர்கள், “அவன் இன்னும் ஒரு நிமிடத்தில் மரித்துப் போய் விடுவான், ஏனென்றால் அந்தப் பாம்பு உன்னைக் கடிக்கும்பொழுது, நீ மரித்து விடுவாய்” என்றனர். நேரம் கடந்து சென்றபிறகு, பவுல் வீக்கமடையவில்லை, மரிக்கவில்லை அல்லது எந்த விளைவும் ஏற்படவில்லை. அவர்கள் கூறினர்...அவர்கள் மாற்றமடைந்து, “அவர் ஒரு மனித ரூபத்தில் இறங்கி வந்துள்ள ஒரு தேவன்” என்று கூறினர். பார்த்தீர்களா?

147 அவன் ஒருபோதும், “அந்தப் பாம்பை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்” என்று கூறவேயில்லை. ஆனால் பாம்பு அவனைக் கடித்துவிட்டது. அவன் தேவனை ஒருபோதும் சோதிக்கவில்லை, ஆனால் பாம்புக்கடியை ஜெயங்கொள்ளும்படியாகத் தேவனில் விசுவாசம் கொண்டிருந்தான். நான் என்ன கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா?

148 எனவே பாம்புகளைக் கையாளுபவர்களில் நீங்கள் யாராயிருந்தாலும், நான்...இப்பொழுது, அவர்கள் பாம்புகளைக்

கையாள விரும்பினால், அது—அது அவர்களைப் பொறுத்தது. பார்த்தீர்களா? நான் அதை அந்த விதத்தில் பார்க்கவில்லை.

149 இப்பொழுது, நீங்கள், "சரி, அந்த ஜனங்கள் விசுவாசத்தைப் பெற்றுள்ளனர்" என்று கூறலாம். அவர்கள் விசுவாசம் கொண்டிருக்கவில்லையென்று நான் கூறவில்லை, அவர்கள் தங்களை ஒரு எரிபொருள் தீப்பந்தம் போன்ற மற்ற காரியங்களால் எரித்துக் கொள்கின்றனர், ஆனால் (உங்களுக்குப் புரிகிறதா?) அது இன்னமும் தேவனை நிரூபிக்கவில்லை.

150 நான் இந்தியர்கள் ஒரு—ஒரு அக்கினி வரிசையை எடுத்து, மூன்று அடி குறுக்காகவும், சுமார் நாற்பது கெஜம் நீளமுள்ளதாகவும், அதனை இலைகளைக் கொண்டு விசிற, அது வெண்மையான உஷ்ணமாயிருக்கும் (விசேஷித்த மனிதர்கள் அல்ல, விவசாயிகள்), அவர்களுடைய பாதரட்சைகளைக் கழற்றி, கொஞ்சம் எடுத்து (குருமார்கள் வெள்ளாட்டின் இரத்தத்தினால் அவர்களை ஆசீர்வதிக்கிறார்கள்), மீன் கொக்கிகளின் சிறிய கொக்கிகளை எடுத்து, தங்களுடைய வாயின் மேல் தங்கள் தோலில் ஒட்டிக்கொண்டு, அவைகள் தண்ணீரால் நிரம்பி, கிறிஸ்துமஸ் மரப் பந்துகள் போன்ற சிறிய ஆபரணங்களால் நிறைந்து, ஒரு பெரிய அலங்கோலமாக மாறும் வரை, மற்றும் அவர்களின் சதையில் நீண்ட பெரிய மீன் கொக்கிகள் குத்தப்பட்டிருக்கும் (அதை உள்ளே எடுப்பதும் வெளியே எடுப்பதும் எப்படி இருக்கும் என்று நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்), அப்படியே நின்று, அந்தச் சூடான நெருப்பின் குறுக்கே நேராக நடந்து செல்வார்கள் (அது சிவப்பையும் தாண்டி, வெறுமனே—வெறுமனே வெண்மையாகச் சூடாக இருக்கும்)—அந்த நெருப்பின் வழியே நேராக நடந்து சென்று, திரும்பி நடந்து வருவார்கள், அவர்களின் கால்களில் ஒரு சிறு தீக்காயம் கூட இருக்காது. அவர்கள் நம்முடைய தேவனை நம்புவது கூட இல்லை. அவர்கள் ஆராதிக்கிறார்கள், பிசாசை வழிபடுகிறார்கள். பார்த்தீர்களா? எனவே அது எந்தக் காரியத்தையும் பொருட்படுத்துகிறதில்லை. விலகி இருங்கள்…நீங்கள் ஒரு உண்மையான, இனிமையான, தாழ்மையான கிறிஸ்தவராயிருங்கள், வாழ்க்கையை வாழுங்கள், அதன்பின்னர் தேவன் எஞ்சியுள்ளதை பார்த்துக்கொள்வார்.

**419. சகோதரன் பிரான்ஹாம், மணவாட்டியாய் செல்லாதவர்களுக்கு பிரசங்கிமார்கள் எதைக் குறித்து பிரசங்கிக்கப்—பிரசங்கிக்கப் போகிறார்கள்? இப்பொழுது அவர்களுடைய செய்தி, பரிசுத்த ஆவி, தண்ணீர் ஞானஸ்நானம், இரட்சிப்பு, அவர்கள் மணவாட்டிக்குள் செல்லவில்லையென்றால், அவர்கள் எதைக் குறித்து பிரசங்கிப்பார்கள்?**

151 பாருங்கள், அவர்கள்…அநேகமாக என்ன சம்பவிக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா? இப்பொழுது நான் இதைக் கூறுகிறேன். என்னால் இதை நிரூபிக்க முடியாது, ஆனால் நான்…அவர்கள்

இப்பொழுது பிரசங்கிப்பது போலவே தொடர்ந்து பிரசங்கிப்பார்கள், ஜனங்கள் தாங்கள் இரட்சிக்கப்படுவதாக நினைத்துக்கொண்டே இருப்பார்கள்; மணவாட்டி ஏற்கனவே போய்விட்டிருப்பாள்.

**420. வார்த்தையின்படி, கருத்தடை செய்வது சரியா?**

152 நான் தனிப்பட்ட முறையில் அதற்குப் பதிலளிப்பேன் என்று நான் உங்களிடம் கூறினேன். இந்தக் கேள்விகளைப் பெற்றுள்ள நீங்கள் தனிப்பட்ட முறையில் என்னிடம் வாருங்கள்.

**அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், வேதம் கூறுகிறதை நீங்கள் அறிந்துள்ள ஒரு போதகர் எங்களிடம் இருக்கிறார்...**

ஆம், நான் அதைப் பெற்றுக் கொண்டேன். இப்பொழுது ஒரு நிமிடம்.

**சகோதரன் பிரான்ஹாம், ஒரு காலத்தில் நாங்கள் எங்களுடைய பெயரைப் புத்தகத்தில் ஒரு குறிப்பிட்ட...புத்தகத்தில் பதிவு செய்திருந்தோம்.**

ஆம், நான் அதைப் பெற்றுக் கொண்டேன். அவர்கள் அதை எப்படி அகற்றிவிட்டார்கள் என்பதைப் பற்றியதாகும், அவர்கள் தவறு செய்தார்களா?

**421. என்ன...நீங்கள் கருத்தடைக்கு ஆதரவளிப்பீர்களா?**

153 இல்லை, என்னால் அதை ஆதரிக்க முடியாது. இல்லை ஐயா. பார்த்தீர்களா?

**422. அது...வெளிப்படுத்தின விசேஷம் 10-ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளபடி, ஏழாம் தூதன் மல்கியா 4-ல் உள்ள எலியா ஒரே நபர்தானா?**

நான் அதற்குப் பதிலளித்தேனா? நான் அதற்குப் பதில் கூறினது போன்று அது தென்படவில்லை.

154 ஆம், அதே நபர் தான். வெளிப்படுத்தின விசேஷம் 10-ம் அதிகாரம் ஏழாம் தூதனின் செய்தியாகும், அது...ஏழாம் சபைக் காலத்தின் ஏழாவது தூதனான செய்தியாளன், அது மல்கியா 4.

**கருத்தடை என்பது...**

155 நான் அதைக் குறித்து நிறைய வைத்துள்ளேன். நான் இவைகளை திரும்பவும் போட்டுவிட்டேன். நான்—நான் பதில் கூற விரும்பவில்லை; நான் உங்களைத் தனிப்பட்ட முறையில் காண விரும்புகிறேன்.

**423. நோவா நூற்று இருபது ஆண்டுகள் பிரசங்கம் செய்து, நூற்று இருபது ஆண்டுகளில் பேழையைக் கட்டிய இடத்தை நாம் எங்கே காணலாம்?**

நான் அதற்குப் பதிலளித்தேனா?

156 ஒரு தலைமுறை, அல்லது ஒதுக்கப்பட்ட காலம், பூமியில் ஒரு மனிதனுக்கு ஒதுக்கப்பட்ட காலம் நூற்று இருபது ஆண்டுகள்

ஆகும், நோவா பேழையைக் கட்டுவதற்கு அந்தக் கால அளவை எடுத்துக்கொண்டான், இது அக்காலத்தில் ஒரு தலைமுறையாகக் கருதப்பட்டது. நூற்றிருபது ஆண்டுகள் என்பது ஒரு மனிதனுடைய குறிக்கப்பட்ட காலமாயிருந்தது. மேலும் அவன் பிரசங்கம் செய்தான், ஆதியாகமம் 6:3-ன் படி…அவன் அந்தத் தலைமுறைக்குப் பிரசங்கம் செய்தான், அது நூற்று இருபது ஆண்டுகள்; நோவா செய்தான். சரி. இப்பொழுது நாம் பார்ப்போம்.

**424. மல்கியா 4-ல், இந்த எலியா பிதாக்களின் இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், பின்பு பிள்ளைகளின் இருதயங்களைப் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான். இவர் அதே நபர்தானா?**

157 ஆம், அதே நபர்தான். சரி. ஓ, ஒரு நிமிடம் பொறுங்கள். இல்லை! என்னை மன்னிக்கவும், நான் வருந்துகிறேன். சும்மா…அப்போது எனக்காகப் பரிசுத்த ஆவியானவர் அதைப் காண்பித்ததைப் பார்த்தீர்களா? இல்லை! அது…சொன்னதாக நான் நினைத்தேன். பார்த்தீர்களா?

158 மல்கியா 3-ல், அது என்னவாக இருந்தது என்றால், “நான் என் தூதனை எனக்கு முன்பாக அனுப்புகிறேன்” என்று கூறப்பட்டுள்ளது, அது எலியாவாயிருந்தது. மல்கியா 4-ல் அது மீண்டும் திரும்பி, “இதோ, நான் எலியாவை அனுப்புகிறேன்” என்று கூறப்பட்டுள்ளது. மல்கியா 3, கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக அனுப்பப்பட்ட ஒரு செய்தியாளனை அவர் எடுத்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது, அது யோவானாயிருந்தது. எத்தனை பேர் அதைப் புரிந்து கொள்கிறீர்கள்? மல்கியா 4, இந்த எலியா வரும்போது, உடனடியாக அவனுடைய செய்தி மற்றும் மற்ற காரியங்களுக்குப் பிறகு, அதற்குப் பிறகு, கர்த்தருடைய வருகையும், பூமியின் புதுப்பிக்குதலுமாயிருக்கிறது.

159 நீங்கள் கவனியுங்கள், அது அல்ல என்பதை இப்பொழுது நிச்சயப்படுத்திக்கொள்ள…எப்படி பரிசுத்த ஆவியானவர் அதை இந்தத் தீர்க்கதரிசியின் மூலம் எழுதினார், அவர், “முதலாவது பிதாக்களுடைய இருதயங்களை அவர் பிள்ளைகளிடத்திற்குத் திருப்புவார்” என்றார். பார்த்தீர்களா? அதுவே யோவானின் முதலாம் வருகையாயிருந்தது. அவர் பிதாக்களின், வயோதிக, கோத்திரப்பிதா பிதாக்களின் இருதயங்களை பிள்ளைகளின் செய்திக்குத் திருப்பினான், அப்போது புதிய தலைமுறையாக இருந்தவர் இயேசு, அந்தத் தலைமுறையில். அப்பொழுது *மற்றும்,* இணைப்புச் சொல், அது “பிள்ளைகளுடைய இருதயங்களை பிதாக்களிடத்திற்குத் மீண்டும் இணைக்கிறது” அதாவது, இன்றைய செய்தியானது, சபைக் காலத்தில் உள்ள பிள்ளைகளின் இருதயங்களைத் தொடக்கத்திலிருந்த மூல பெந்தேகோஸ்தே விசுவாசத்திற்கு மீண்டும் திருப்பும்.

160 எனவே அது இரண்டு வெவ்வேறானதாக இருக்கும்…ஒரே செய்தியாளன், ஆனால் அது யோவானின்…இல்லை செய்தியாளன்

எலியாவின் முதல் வருகையையும் இரண்டாம் வருகையையும் வேறுபடுத்திக் காட்டுகிறது.

**என்னுடைய கணவரும், என்னுடைய இளைய மகனும் நம்புகிறதில்லை...**

ஆம், நான் அதைப் பெற்றுக் கொண்டேன். நான் அதை அறிந்திருந்தேன் என்பதை நான் அறிவேன், ஏனென்றால் அந்த நபரின் பெயர்கள் அங்கே கையொப்பமிடப்பட்டுள்ளன என்பதை நான் அறிவேன். நான் அதைக் குறித்துப் பிறகு அவர்களிடத்தில் பேசியது எனக்கு நினைவிருக்கிறது.

**425. நாங்கள் எப்படி கர்த்தருடைய சித்தத்தை கண்டறிய முடியும்? எங்களுடைய—எங்களுடைய வீடு...நாங்கள் எங்களுடைய வீட்டை இந்தியானாவிலுள்ள ஜெபர்ஸன்வில்லுக்கு மாற்ற வேண்டுமா? ஒரு நபர் ஒரு கிறிஸ்தவனாயிருந்து, கறுப்பர் இன ஜனங்களை வெறுக்க முடியுமா? அவர்கள் கருமை நிறமாயிருப்பதால், அவர்கள் நம்மைப் போல நடத்தப்படுவதை தேவன் விரும்புகிறதில்லையா? நீங்கள்...? இதில் நீங்கள் என்ன ஆலோசனை கூறுகிறீர்கள்? நீங்கள் ஒருங்கிணைப்பில் அல்லது பிரிவினையில் நம்பிக்கைக் கொண்டிருக்கிறீர்களா?**

161 நான் ஒருங்கிணைப்பில் நம்பிக்கை கொண்டுள்ளேன். ஒரு மனிதன்...அவனுடைய நிறமோ அல்லது யாராயிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அவன் என்னைப் போன்ற ஒரு மனிதனாயிருக்கிறான் என்று நான் நம்புகிறேன். அது சரியாகத்தான் உள்ளது. அவர்கள் அந்தக் கறுப்பர் இன ஜனங்களை அப்படியே விட்டுவிடுவார்கள் என்று, நான் நினைக்கிறேன், கம்யூனிஸ்டுகள் அங்கே வெளியே வந்து அவர்களை ஊக்குவிக்கவில்லை...

162 இப்பொழுது, அவர்கள் விரும்பினர்...இப்பொழுது, உண்மையான அசலான கறுப்பர் இன ஜனங்களில், மீண்டும் பிறந்த ஒரு அசலான தேவபக்தியுள்ள பரிசுத்தவான்கள் அந்த ஜனங்களுக்குள் இருக்கின்றனர். ஆம், உண்மையாகவே. என்னுடைய தோல் வெண்மையாகவும், அவர்களுடைய தோல் கருமையாகவும் இருப்பதால், அது எனக்கு ஒரு காரியத்தையும் பொருட்படுத்துகிறதில்லை. அவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் என்னுடைய சகோதரன்.

163 அதனால்தான் நான் ஆப்பிரிக்கானஸ் செய்தியோடு வேறுபடுகிறேன்; அந்த ஜனங்களுக்கு ஒரு ஆத்துமா உண்டு என்று கூட அவர்கள் நம்பவில்லை. அதுவே என்னை அங்கே விரும்பாதவனாக்கிவிட்டது. நான், “அந்த மனிதன் என்னைப் போன்றே ஒரு மனிதன். நான் பெற்றுள்ள அதே சிலாக்கியத்தை அவரும் பெற்றிருக்கிறார். அவனுடைய தோல் எனக்கு எந்த வித்தியாசத்தையும் பொருட்படுத்துகிறதில்லை, அல்லது

தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்த எந்த மனிதனுக்கும் ஒரு வித்தியாசத்தையும் பொருட்படுத்துகிறதில்லை” என்று கூறினேன்.

164 ஆனால் நான், “அந்தக் கறுப்பர் இன ஜனங்களை அவர்கள் தனியே அனுமதித்திருந்தால், அவர்கள் ஒருபோதும் இந்தவிதமாக ஏவப்பட்டிருந்திருக்க முடியாது” என்றேன். நான் அதை இந்தப் பிரசங்க பீடத்திலிருந்து கூறுவேன்…இங்கே வந்துள்ள ஏராளமான கறுப்பர் இன ஜனங்கள் நம்மிடையே உள்ளனர். (இன்றிரவு இங்கு எவருமே இல்லை என்று நான் நினைக்கிறேன்.) ஆனால் இந்தச் சபைக்கு இங்கு வந்துள்ள ஏராளமான கறுப்பர் இன ஜனங்கள் நம்மிடையே உள்ளனர். சகோதரனே, மற்றவர்களைப் போலவே இவர்களும் வரவேற்கப்படுகின்றனர். அவர்கள் என்னுடைய சகோதரனும் சகோதரியும்.

165 என்னுடைய வாழ்க்கையில் நான் சந்தித்த மிகச் சிறந்த ஜனங்களில் சிலர் கறுப்பர் இன மக்களாய் இருக்கிறார்கள். பிறகு அவர்களில் சிலர் துரோகிகள், சரியாக வெள்ளையர்களை, அல்லது மஞ்சள் நிற இன மக்கள் அல்லது பழுப்பு நிற இன ஜனங்களைப் போன்றே. ஆம், உண்மையாகவே.

166 இப்பொழுது, நான் கலப்பு விவாகங்களில் நம்பிக்கை கொள்வதில்லை. ஒரு வெள்ளையர் ஒரு கறுப்பினப் பெண்ணை மணக்கக் கூடாது, அல்லது ஒரு கறுப்பினப் பெண் ஒரு வெள்ளையரை மணக்கக் கூடாது, அல்லது ஒரு மஞ்சள் நிற இனத்தவர் ஒரு கறுப்பினத்தவரையோ, அல்லது ஒரு வெள்ளையரையோ, அல்லது…மணக்கக் கூடாது என்று நான் நம்புகிறேன். பழுப்பு, கறுப்பு, வெள்ளை மற்றும் இனத்தவர் தேவனுடைய மலர் தோட்டத்தைப் போன்றவர்கள் என்று நான் நினைக்கிறேன், அவர்கள் கலப்பினமாக்கப்பட வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. அந்தவிதமாகத்தான் தேவன் அவர்களை உண்டாக்கினார் என்று நான் விசுவாசிக்கிறேன், அந்தவிதமாகவே அவர்கள் நிலைத்திருக்க வேண்டும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

167 என்ன…நான் ஒரு உண்மையான அழகான, கறுப்பர் இன, புத்திசாலியான, பார்க்க அழகான ஒரு பிள்ளையைப் பார்த்தது என்னை ஏமாற்றுகிறது, நீங்கள் பார்க்க விரும்பும் எந்தப் பெண்ணைப் போலவே அழகாக இருக்கிறாள்…அவள் ஏன் ஒரு வெள்ளையனைத் திருமணம் செய்து, கலப்பினக் குழந்தைகளைப் பெற விரும்புகிறாளா? அப்படிப்பட்ட ஒரு காரியத்தோடு ஒரு அறிவாற்றல் கொண்ட கறுப்பர் இன பெண் ஏன் விரும்புவாள்? ஏனென்றால் அந்தக் ஏதோ ஒரு காரியமா…அந்தக் கம்யூனிஸ்ட்… ஒரு—ஒரு அருமையான…ஒரு—ஒரு—ஒரு கறுப்பர் இன மனிதன் எப்படியொரு வெள்ளைக்காரப் பெண்ணை மணந்து, கலப்பினக் குழந்தைகளைப் பெற விரும்புவான்?

168 நான்...நாம் என்னவாக இருக்கிறோமோ, அவ்வாறே நீங்கள் இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். நாம்—நாம் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள். தேவன் என்னைச் சிருஷ்டித்தார்... அவர் என்னை உண்டாக்கினால், என் நிறம் கருப்பாயிருந்தால் நான் தேவனுக்காக ஒரு கறுப்பு மனிதனாயிருக்க மகிழ்ச்சியாயிருப்பேன். அவர் என்னை மஞ்சள் நிறமாக்கியிருந்தால், நான் கிறிஸ்துவுக்காக ஒரு மகிழ்ச்சியான மஞ்சள் நிற மனிதனாயிருப்பேன். அவர் என்னை வெள்ளையனாகப் படைத்திருந்தால், நான்...?...கிறிஸ்துவுக்காக மகிழ்ச்சியான வெள்ளையனாக இருப்பேன். அவர் என்னைப் பழுப்பு நிறமாகவோ, அல்லது சிகப்பாகவோ, ஒரு இந்தியனாக ஆக்கியிருந்தால், அது என்னவாயிருந்தாலும், நான் அதே நிறத்தில் இருப்பேன். அது நானாகத்தான் இருக்கும். என்னுடைய சிருஷ்டிகர் என்னை உண்டாக்கினது போன்று நான் இருக்க விரும்புகிறேன்.

169 அந்த நாளில் ஷ்ரீவ்போர்ட்டில் அந்த எழுச்சி உண்டானபோது, அவர்கள்....அங்கே அந்த இளம் கருப்பினத்தவர்கள், ஏவப்பட்டு, கம்யூனிசக் கொள்கையை உடையவர்களாயிருந்தனர்...

170 நான் இங்கே இந்தப் பிரசங்க பீடத்தில் உங்களிடம் கூறியுள்ளேன், மார்டின் லூதர் கிங் கறுப்பின மக்கள் இதுவரை கொண்டிருந்த மிகப்பெரிய நன்றிக்கடன். சரிதானே. அந்த மனிதன் கம்யூனிசத்தால் ஏவப்பட்ட ஆயிரக்கணக்கானோரை ஒரு படுகொலைக்கு வழிநடத்தப் போகிறான் (அது உண்மை).

171 என்னுடைய கருத்தை நான் நிரூபிக்கட்டும். நான் அதை ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கூறினேன். இப்பொழுது என்ன சம்பவித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். அவர்கள் ஒருங்கிணைக்கப்படுவதற்காகப் போராடிக் கொண்டிருந்ததாகக் கூறினர். சட்டம் அவர்களுக்கு ஒருங்கிணைப்பைக் கொடுத்தபோது...ஒருங்கிணைப்பில் நம்பிக்கைக் கொள்ளாத ஜனங்களாகிய உங்களைக் குறித்து வெட்கப்படுங்கள். நம்முடைய தேசம் ஒருங்கிணைக்க அனுமதிக்கின்றது, பெரு முதலாளி கூறுவதையே நாம் செய்ய வேண்டும். அது முற்றிலும் உண்மை.

இப்பொழுது, நீங்கள் கூறுவது...அந்தவிதமான இடங்களுக்கு வர வேண்டாம், அதுபோல, அல்லது கடைக்குச் செல்வதற்கு அல்ல, அல்லது பேருந்தின் பின்னால் அமர்வது அல்ல, மற்றவைகளை, இல்லை, ஐயா! அவர்கள் நம்மைப் போலவே இருக்கிறார்கள் என்று சட்டம் கூறுகிறது, எனவே நாமும் அவர்களைப் போலவே இருக்கிறோம்; எனவே நாம் அந்தவிதமாகச் செயல்படுவோமாக. நாம் அந்த விதமாகவே இருப்போம். அதைத்தான் உண்மையாகவே மீண்டும் பிறந்த ஜனங்கள் விசுவாசிக்கின்றனர். இப்பொழுது, அது அவர்களுடைய இருதயத்தில் உள்ளது என்று நான் நம்புகிறேன்.

172 ஆப்பிரிக்காவில் உள்ள ஏழை மக்கள், அவர்கள் நடத்தப்பட்ட

விதத்தைப் பார்த்தபோது, அவர்களுக்காக நான் இதற்கு முன் ஒருபோதும் இப்படி ஒரு உணர்வை அடைந்ததில்லை. எனக்கு அந்தக் காரியத்தில் நம்பிக்கையில்லை. நான் ஒரு தென்பகுதிக்காரன்; நான் ஆற்றின் கரையில் பிறந்தேன், ஆனால் நான் ஆபிரகாம் லிங்கனைப் போன்றவன்; நான் இங்கு வந்துள்ளேன், ஏனென்றால் மனிதர் சமமாகப் பிறக்கிறார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அது உண்மை. ஜனங்களைப் பிரிப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை அது போன்ற காரியங்கள், அந்த ஜனங்கள்...பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டபோது மற்றும் அதுபோன்றவை.

173 ஆனால் கவனியுங்கள், இந்த எல்லா தொல்லைக்கும் காரணமாயிருக்கிற அவர்கள் உண்மையான மறுபடியும் பிறந்த கிறிஸ்தவ கறுப்பின ஜனங்கள் அல்ல. அதற்காக நீங்கள் அவர்களைக் கண்டிக்க விரும்புகிறீர்கள், ஆனால் நம்முடைய சில முரட்டு வெள்ளைப் பிள்ளைகளைப் பற்றி என்ன? பார்த்தீர்களா? இப்பொழுது, ஒருவருக்குப் பொருந்தும் அதே கஷாயம் மற்றவருக்கும் பொருந்தும். பாருங்கள், நம்முடைய வெள்ளைக்கார பிள்ளைகள் அவர்களுக்குள்ளதைக் காட்டிலும் இருமடங்கு தொல்லையை உண்டாக்குகின்றனர். அது முற்றிலும் உண்மை. அது எங்கே உள்ளது? நம்முடைய கல்லூரிகளிலும் அதைப் போன்ற காரியங்களிலுமே. நம்முடைய உயர்கல்வி கற்றவர்களில் சிலர் அந்தக் காரியங்களுக்குக் காரணமாயிருக்கிறார்கள். பார்த்தீர்களா?

174 சரி, அது என்ன? இப்போது, அது கம்யூனிசம்தான், அந்தக் கறுப்பின மக்கள் அல்ல என்பதை உங்களுக்குக் காட்டுவதற்காக, அந்தவிதமாகவே கம்யூனிசம் எப்பொழுதுமே ஆதிக்கம் செலுத்த வந்துள்ளது. அவர்கள் ஒவ்வொரு தேசத்திலும் அதையே செய்கின்றனர். அந்தவிதமாகத்தான் அவர்கள் அதைச் செய்கிறார்கள், நீங்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடச் செய்து, ஒரு புரட்சியை உண்டாக்கி, அதன்பின்னர் அவர்கள் எந்த விதமான தடையுமின்றி உள்ளே நுழைகின்றனர். அவர்கள் இந்த நாட்டை வெடிக்கச் செய்ய விரும்பவில்லை; அவர்கள் அதை விரும்புகின்றனர். அவர்களால் அதை உள்ளே புகுத்த முடியும். இப்போது, அப்படிச் செய்வதற்கான ஒரு நிகழ்வை அவர்கள் பார்த்திருக்கிறார்கள், பழைய புரட்சி என்னவென்றும் அவர்களுக்குத் தெரியும், அதனால் அவர்கள் இன்னொரு புரட்சியைத் தொடங்கலாம் என்று நினைத்தார்கள்.

175 என்னுடைய கருத்து தெளிவாக உள்ளது என்பதை நிரூபிக்க வேண்டுமானால், அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பிறகு, (அவர்கள் இப்பொழுது அதைச் சட்டப்பூர்வமாக, சட்டப்பூர்வமாகவே வைத்துள்ளனர்), அவர்கள் முன்பிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிக தொல்லையை உண்டுபண்ணுகின்றனர். பார்த்தீர்களா? அது கம்யூனிஸமேயன்றி, தேவனுடைய ஆவியினால் பிறந்த விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் அல்ல என்பதையே அது

காண்பிக்கிறது.

**426. நாம் இன்னமும் அனல் மூண்டிருந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போமா அல்லது காலம் முடிந்துவிட்டதா?**

176 இல்லை, உங்களால் பிரசங்கிக்க முடிந்த அளவு கடினமாகத் தொடர்ந்து பிரசங்கியுங்கள். சகோதரனே, அதனோடு தரித்திருங்கள்; நான் உங்களுக்குப் பின்னால் இருக்கிறேன்.

**427. சகோதரர் பிரான்ஹாம், முட்டை சாப்பிட மாட்டார்கள், பள்ளத்தாக்கில் வசிக்கமாட்டார்கள் என்று நீங்கள் தீர்க்கதரிசனம் உரைத்தபோது: அந்தத் தீர்க்கதரிசனம் உங்களுக்காக மட்டுமானதா அல்லது சபைக்காகவா?** சரி.

177 அநேக ஆண்டுகளுக்கு முன்பு, சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, மிருகங்கள் மத்தியிலும், கால்நடைகளுக்கு மத்தியிலும், முட்டைகளுக்கும், முட்டைகளுக்கும் கூட நோய்கள் உண்டாயிருக்கும் என்றும், கடைசி நாட்களில் அது நிறைவேறும் என்றும் நான் ஒரு தீர்க்கதரிசனத்தைக் கூறினேன். புசிக்கத் தகுதியற்ற முட்டைகள் உண்டாயிருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. மேலும், அதுவும் நிகழும், பள்ளத்தாக்குகளில் வாழும் ஜனங்கள்… இப்பொழுது நினைவிருக்கட்டும், அது நிறைவேறும் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நான் அந்தவிதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்தேன், பள்ளத்தாக்குகளில் வாழும் ஜனங்கள், கிறிஸ்தவர்களை அந்தப் பள்ளத்தாக்கிலிருந்து இடம் பெயர்ந்து வரும்படி நான் கேட்டுக் கொள்வேன் என்றும், அவர்கள் சாப்பிடக் கூடாது என்றும்…பல்வேறு வகையான இறைச்சிகள் மற்றும் அது போன்ற காரியங்கள் விஷமாயிருக்கும். (நான் கொண்டிருந்த கருத்தின்படி) மக்கள் பள்ளத்தாக்குகளில் வாழ்வது ஆபத்தானது என்று நான் நம்புகிறேன்.

178 இப்பொழுது, அவர்களுக்கு அணுக்கதிர் வீச்சு ஏற்படுவதற்கு முன்போ அல்லது அதைப் பற்றி எதுவும் தெரிவதற்கு முன்போ நடந்த காரியம். ஆனால் அது பரிசுத்த ஆவியானவர் என்னை எச்சரித்ததாயிருந்தது. இப்பொழுது, நம்முடைய கால்நடைகளும் கூட (நீங்கள் அவைகளை சந்தையிலிருந்து பார்க்கிறீர்கள்) **டிடிடி** என்ற மருந்து தெளிக்கப்பட்டதால் பசுக்களில் ஏதோ பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

179 மீண்டும் கவனியுங்கள், இந்தக் கலப்பினமான காரியங்கள் மற்றும் அவர்கள் செய்து கொண்டிருக்கிற காரியங்கள் முற்றிலுமாக மானிட வர்க்கத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றன. “முப்பது சதவீதம்,” இருபது அல்லது முப்பது சதவீதம் என்று *ரீடர்ஸ் டைஜஸ்ட்* கூறியுள்ளது, “மருத்துவமனையில் உள்ள நோயாளிகள் வைத்தியர்களாலேயே அங்கே சேர்க்கப்படுகின்றனர்.” இதை உங்களிடத்திலிருந்து அகற்ற அவர்கள் உங்களுக்கு ஒரு மருந்தைக் கொடுப்பார்கள், அது இங்கே வேறொன்றை உருவாக்குகிறது.

180 முட்டைகளை நீங்கள் கவனித்தீர்களா? கடந்த வருடம் லூயிவில்லில் மற்றும் ஜெபர்ஸன்வில்லில் உள்ள நூற்றுக்கணக்கான நோயாளிகள் சுகவீனமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர், இங்கே பள்ளத்தாக்கில் உள்ள கோழி முட்டைகளைப் புசித்ததிலிருந்து வாந்தியெடுத்தல்…அந்தப் பள்ளத்தாக்கிலிருந்து வெளியே வந்த முட்டைகள் கதிர்வீச்சுப் பொருட்களை ஈர்த்துகொண்டன. களைகளுக்கு விஷம் வைப்பது, போன்றவற்றால், எல்லாம் மாசுபட்டுள்ளன.

181 ஆனால் என் சகோதரனே, இங்கேதான் நீங்கள் அதைப் புரிந்து கொள்கிறீர்கள். அது வேதத்தில் எழுதப்பட்டுள்ளது என்று நான் என் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறேன், அதாவது—எந்தவொரு ஆகாரமும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படாமல் பெறப்படக் கூடாது என்பதே, ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது. பார்த்தீர்களா? நீங்கள் அதைப் புசித்தால், “கர்த்தராகிய இயேசுவே, நீர் எனக்காக ஆகாரத்தை ஆயத்தம் செய்தீர். இப்பொழுது, நான் விசுவாசத்தினால் எங்கள் சரீரங்களின் பெலனுக்காக இந்த ஆகாரத்தைப் பரிசுத்தப்படுத்துகிறேன்” என்று கூறுங்கள். அதன் பின்னர் அதைப் புசியுங்கள், ஏனென்றால் நாம் செய்கிற யாவும் விசுவாசத்தினாலே.

**அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், ஒரு குடிகார கணவனிடமிருந்து விவாகரத்து பெறுவதற்கான காரணங்கள்?**

182 நான்—நான் அந்த விவாகரத்தைக் குறித்து பேச விரும்பவில்லை. அது—அது…அதைக் குறித்து நான்—நான்—நான் சிறிது நேரம் கழித்து பேசுவேன்.

**428. சகோதரன் பிரான்ஹாம், சகோதரன்** (ஒரு நிமிடம். இது இங்குள்ள ஊழியக்காரர்களில் ஒருவருடையது. முதலில் நான் அதைப் படிக்கட்டும். [சகோதரன் பிரான்ஹாம் நிறுத்திக் கேள்வியைத் தனக்குள்ளே வாசிக்கிறார்—ஆசி.] ஹூம்! ஒரு நிமிடம். சரி, நான் உங்களுக்குக் கூறுகிறேன். நான் அதை எப்படியும் படிக்கப் போகிறேன்.)—**சகோதரன் பிரான்ஹாம், சகோதரன் நெவில் தீர்க்கதரிசனத்தின் மூலம், கர்த்தர் உரைக்கிறதாவது, நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வேன் என்று என்னிடம் கூறினார். நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வேன் என்ற இந்த உறுதியோடு என்னிடம் கூறினார், நான் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை. நான் தொடர வேண்டுமா…?**

183 ஆம், நிச்சயமாக! அதைச் செய்யுங்கள். தொடர்ந்து விசுவாசியுங்கள்.

கவனியுங்கள், நான்…நேற்று சகோதரன் வுட்டின் இடத்தில் நின்றுகொண்டிருந்தபோது, சக்கர நாற்காலியில் இருந்த

ஒருவரிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது, அவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, அதிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான அமைப்பிலிருந்து, ஊசிகளைப் போட்டுக்கொண்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இப்படியெல்லாம் இருக்கும், தனது சகோதரருக்காகவோ அல்லது வேறு ஒருவருக்காகவோ பாரத்துடன் இங்கு வந்திருந்தார்; சகோதரர் நெவில், அந்நிய பாஷைகளில் பேசியோ அல்லது ஏதோ ஒரு— ஒரு விதத்திலோ அந்த நபரைப் பற்றி ஒரு தீர்க்கதரிசனத்தை உரைத்தார், அடுத்த சில நாட்களுக்குள் அந்த மனிதருக்கு நன்மையாக ஏதோ ஒன்று நடக்கும் என்றோ அல்லது அது போன்ற ஏதோவொன்றையோ அவர் உரைத்தார். அப்பொழுது அந்த மனிதன் தொலைபேசியில் அழைத்து, இந்த மனிதன், இப்பொழுது அறுபத்தியெட்டு நாட்கள் ஆகிறது, மருத்துவமனையிலிருந்து வந்திருக்கிறவர், ஒருமுறை கூட மது அருந்தாமல், அல்லது மது அருந்துவதைத் தடுக்க ஒரு மருந்தையாவது உட்கொள்ளாமலும், அல்லது வேறெதையுமே எடுத்துக் கொள்ளாமலும் இருந்து வருகிறார். தீர்க்கதரிசனத்தில் சகோதரன் நெவில் கூறின காரியம் நிறைவேறியது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! எங்களுடைய சகோதரன் ஒரு தேவனுடைய மனிதர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

**அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், அவர்கள்…?**

184 இப்பொழுது பொறுங்கள், ஒரு நிமிடம் நான் நிறுத்தட்டும். இப்பொழுது, அதைத்தான் நான் ஜனங்களுக்குக் கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். நான் விசுவாசிக்கின்ற அதே செய்தியைச் சகோதரன் நெவில் விசுவாசிக்கிறார். சகோதரன் கேப்ஸ், சகோதரன் பீலர், சகோதரன் ரடல், நான் விசுவாசிக்கும் அதே செய்தியை இங்குச் சுற்றிலுமுள்ள இந்தச் சகோதரர்கள் அனைவரும் விசுவாசிக்கிறார்கள்; என்னைப் போலவே அவர்களும் பிரசங்கிக்கிறார்கள்.

185 உங்களுக்கு உண்மையிலேயே விருப்பமிருந்தால், நீங்கள் வீட்டை விட்டு வெளியேறி, ஓய்வு பெறவோ அல்லது அது போன்ற வேறு ஏதேனும் ஒரு செயலில் ஈடுபடவோ போகிறீர்கள் என்றால், தேவனுடைய வார்த்தைக்காக இங்கே வர விரும்பினால், வாருங்கள். கூடாரத்திற்கு வாருங்கள், அங்குதான் நீங்கள் அதைக் கேட்பீர்கள்.

186 இவர்கள் தேவபக்தியுள்ள மனிதர்கள். அவர்கள் என்னிடம் இருக்கும் அதே பரிசுத்த ஆவியையும், உங்களிடம் இருப்பது போன்ற பரிசுத்த ஆவியையும் கொண்டிருக்கிறார்கள், அதே வேதாகமத்திலிருந்தும், அதே செய்தியிலிருந்தும் போதிக்கிறார்கள்.

**அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம், அந்நிய பாஷைகளில் பேசுகிறவர்கள் மீதியானவர்கள்…?**

ஆம், நான் அதைப் பெற்றுக் கொண்டேன். ஹூ, ஹூ, நான் அந்நிய பாஷையின் பேரில் பேசினபோது, அதைப்

பெற்றுக்கொண்டேன்.

**சகோதரன் பிரான்ஹாம், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்த உங்களுடைய பிரசங்கம் இயேசுவின் நாமத்தில் கொடுக்கப்படுகிற ஞானஸ்நானமா…?**

ஆம், நான் அதைப் பெற்றுக் கொண்டேன். நாம் பார்ப்போம்.

**429. சகோதரன் பிரான்ஹாமே, ஒரு—ஒரு மனைவி தன்னுடைய கணவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வேதம் நமக்குக் கூறுகிறது. நான் ஒரு கிறிஸ்தவன், என்னுடைய கணவன் ஒரு பாவி. நான் சபைக்குச் செல்வதையும், என்னுடைய வேதாகமத்தை வாசிப்பதையும் தடுப்பதற்காக, அவர் தன்னால் முடிந்த ஒவ்வொரு வழியிலும் என்னைத் துன்புறுத்துகிறார், மேலும்—மேலும் வார்த்தையை மறுதலிக்கிறார். நான் என்ன செய்ய வேண்டும்?**

187 நீங்கள் என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது, கவனியுங்கள், நீங்கள் உங்களுடைய கணவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்; அதுதான் வார்த்தை. இப்பொழுது, அவர் உங்களிடம் கூறி, நீங்கள் வேதாகமத்தை வாசிப்பதையும் சபைக்குச் செல்வதையும் தடுத்தால், அல்லது அதைப் போன்ற ஒரு காரியம், நீங்கள் அதற்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை, ஏனெனில், "தன் தகப்பனையாவது, தாயையாவது, கணவனையாவது, மனைவியையாவது, அல்லது அது வேறென்னவாயிருந்தாலும் வெறுத்துவிட்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல." அது சரியா?

188 இல்லை, வேண்டாம்…புருஷர்கள் நினைக்கிறார்கள்… நீங்கள் இல்லை…ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயை ஆளுகை செய்பவன் என்ற காரணத்தினால் அவள்மேல் அந்த அதிகாரத்தை உபயோகிக்கக் கூடாது. சகோதரனே, தேவன் உங்களுக்கு மேலாக அவளுடைய ஆளுகை செய்கிறார். பார்த்தீர்களா? உங்களுடைய மனைவி ஏதேனும் தவறு செய்தால், அப்படியென்றால் நீங்கள் செய்யாதீர்கள்…அப்பொழுது நீங்கள் அவளிடம் கூற உரிமை உண்டு, அவள் உங்களுக்குச் செவிகொடுக்க வேண்டும். ஆனால் அவளை அடிக்கவோ அல்லது அவளைச் சுற்றி இழுக்கவோ அல்லது—அல்லது அந்தக் காரியங்களைச் செய்யவோ உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. இல்லை! அவள்…

189 தேவன் மனிதருக்கு ஒரு துணையாக உண்டாக்கினார், ஒரு மிதியடியாக அல்ல. நினைவிருக்கட்டும், அவள்…அவள் உன்னுடைய இனிய இருதயமாயிருந்தாள்; அவள் எப்பொழுதும் அவ்விதமாக இருக்க வேண்டும்.

**430. எப்பொழுது, எங்கே தேவனுடைய ஜனங்கள் கடைசி வார்த்தைக்காக ஒன்று கூடுவார்கள்?**

190 கிறிஸ்துவில். ஆம்! கடைசி நாளுக்காக அவர்கள் கிறிஸ்துவுக்குள் கூடுவார்கள். இப்பொழுது அதை

மறந்துவிடாதீர்கள். நாம் ஒன்று கூடும் இடம் உண்டு; நாம் அதைச் சரியாகப் பெற்றுள்ளோம்.

**431. நாங்கள் அழைக்கப்பட்டிருக்கிறோம்...**(இப்பொழுது, அன்றொரு நாள் இங்கே அந்தக் கேள்வி.) **நாங்கள் அசுத்தமான பறவைகள் என்று அழைக்கப்படுகிறோம், ஏனென்றால் நாங்கள் ஜூனியர் ஜாக்ஸனின் சபைக்குச் செல்கிறோம். சில சமயங்களில் நாங்கள் அந்த—அந்த...அவர் இங்கே சபையில் உள்ள புதிய சபை விதிகளுக்கு இணங்குவதில்லை. சில சமயங்களில் அங்கே கலந்துகொள்ளும்படியான பரிபூரண தேவனுடைய சித்தத்தை நாங்கள் இழந்துவிட்டோமா?**

191 இல்லை, ஐயா! ஜூனியர் ஜாக்சன் ஒரு தேவனுடைய மனிதன் என்று நான் நினைக்கிறேன். நான் அதை ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். நான் நம்புகிறேன்...

192 இப்பொழுது, நாம் சபையின் ஒழுங்கின் பேரில் இணங்குகிறதில்லை. இப்பொழுது, ஜூனியரின்—ஜூனியர்... ஏன் அவர்...ஜூனியர் ஜாக்ஸனை எத்தனை பேருக்குத் தெரியும்? ஏன், அந்த மனிதன் ஒரு தேவபக்தியுள்ள மனிதன் என்பதை நாம் அறிவோம். நான் விசுவாசிப்பது போலவே அவரும் இந்தச் செய்தியை விசுவாசிக்கிறார், அவரும் இந்தக் காரியங்களை விசுவாசிக்கிறார். வெளிப்படையாகக் கூறினால், ஜூனியரும் நானும் இங்குள்ள மற்ற மனிதர், ஜே.டி. அவர்களைப் போன்றே, வெறும் நண்பர்களே, மற்றும்—மற்றும் சகோதரன் ரடல், சகோதரன் ஜாக்சன், சகோதரன் பீலர், மற்றும் இங்குள்ள இந்தச் சகோதரர்கள் யாவரும்; நாம் யாவரும் ஒன்றாக இருக்கிறோம். இப்பொழுது, நாம்...ஒருகால் ஒரே கருத்தைக் கொண்டிருக்க மாட்டோம் (புரிந்ததா?), ஆனால் நாம் இந்த அதே செய்தியை விசுவாசிக்கிறோம் (புரிகிறதா?), நாம் ஒற்றுமையாகச் சேர்ந்திருக்கிறோம். அங்கே சகோதரன் ஹியூம்ஸும் கூட இருக்கிறார், ஒரு மிஷனரி, ஓ, பல வித்தியாசமானவர்கள், நான்...சில சமயங்களில் நான் அவர்களுடைய பெயர்களைக் கூடக் கூற முடியாது, ஆனால் சகோதரனே, நான் உங்களை எப்படியும் கூறுகிறேன் என்பதை நீங்கள்—நீங்கள் அறிவீர்கள். நிச்சயமாக.

**நீங்கள் செவிலியர் பணியிலிருந்து விலகிச் செல்ல விரும்புகிறீர்கள்...**

193 நான் தான் அதைக் கேட்டேன். நினைவிருக்கிறதா? செவிலியர் படிப்புபற்றித் தெரிந்துகொள்ள விரும்பியது ஒரு அருமையான இனிமையான சகோதரி.

**நான் சிறுவனாயிருந்தபோது, நான்...நான் ஒரு பிரசங்கியாக வேண்டும் என்று விரும்புவதாக எல்லோரிடத்திலும் கூறப்பட்டேன்.** (நான் அதைப் பெற்றுக்கொண்டேன். நான் அதையும் கூடப் பெற்றுள்ளேன்.) **அப்படியானால் இன்றைக்கு அவர் என்ன செய்ய வேண்டும்?**

194 பாருங்கள், இது கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்கிற ஒரு—ஒருவரிடமிருந்து வந்த ஒரு கடிதம், அதுவல்ல...இது எனக்கு ஒரு தனிப்பட்ட கடிதம். அது இங்கே சபையில் உள்ள நம்முடைய சகோதரர்களில் ஒருவரான, சகோதரன் பேட் டைலரிடமிருந்து வந்தது.

அவ்வளவுதான். கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள். ஜனங்களாகிய உங்களுக்கு நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். நான் இப்பொழுது...[ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.]

...ஒன்றாயிருக்கிறோம்,
நம்முடைய ஆறுதல்கள் மற்றும் நம்முடைய அக்கறை.

195 சகோதரி வில்சன் இன்னமும் கட்டிடத்தில் இருக்கிறாரா என்று யோசிக்கிறேன்? நான் அவளை இங்கே கண்டேன். சகோதரி வில்சன், சற்று முன்பு நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா? நாங்கள் மூலைக்கல்லை நாட்டினபோது எடுத்த, புகைப்படங்களை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் அந்தப் புகைப்படத்தைப் பார்த்தபோது, ஹோப்பும் நானும் நாங்கள் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே இருந்ததைக் கண்டேன். நான் அதைக் கூட அறிந்திருக்கவில்லை...நான் என்னுடைய சண்டைகளில் ஒன்றிலிருந்து வெளியே வந்தபோது, நான் ஒரு வீர வாகைப் போட்டியில் வென்றபோது, ஒரு புகைப்படத்தைப் பார்த்தது எனக்கு நினைவிருக்கிறது. அன்றொரு இரவு நான் இங்கே இந்தியானாவில் மாநில விளையாட்டு கண்காணிப்பாளராக இருந்தபோது என்னுடைய புகைப்படத்தைப் பார்த்தேன். நான் சபையைக் குறித்து நினைத்துப் பார்க்கிறேன். உங்களுக்குத் தெரியும், மீதமிருக்கும் அந்தக் குழுவில், இன்று இரவு இங்கே அமர்ந்திருக்கும் ஒரே நபர் ஒருவர்தான் என்று நான் நினைக்கிறேன். துவக்கத்தில் நாம் மூலைக்கல்லை நாட்டினது முதற்கொண்டு எத்தனைபேர் இங்கிருக்கிறீர்கள்? உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள்.

196 என் சகோதரன், சகோதரி வில்சன், நான் உங்களிடம்—உங்கள் இருவரிடமும் ஒரு காரியம் கேட்க விரும்புகிறேன். நாம் யாவரும் எப்படி துவங்கினோம் என்பது நினைவிருக்கிறதா? பழைய தரை முழுவதும் சேற்றினால் நிறைந்திருந்தது நினைவிருக்கிறதா? பழைய ஜன்னல்கள் அசைந்து கொண்டிருந்தன. அதைத் தொடங்குவதற்கு எங்களிடம் எண்பது சென்ட்கள் இருந்தன. ஒரு பெரிய களைகளின் குவியல், நாங்கள் கூடாரத்தைக் கட்டும்போது, இவையனைத்தும் இங்கே எங்களுக்குப் பின்னால் உள்ள காடுகளைப் போன்றே இருந்தது.

197 நம்முடைய உறுதிமொழிகளை எடுத்து, பீடத்தைச் சுற்றி அணிவகுத்துச் சென்ற நம் எல்லோரையும் பாருங்கள். அவைகள் ஒன்றிலிருந்து மற்றொன்று வந்து போவதை நாம் கண்டோம்.

செய்தியோடு தரித்திருந்தவர்கள், அவர்கள் எப்படி சென்றனர் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? இப்பொழுது, செய்தியிலிருந்து விலகிச் சென்றவர்களைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், அவர்கள் எப்படி சென்றனர். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

198 இப்போது நம்மிடம் இருப்பதை விட மூன்று மடங்கு அதிகமானோர் கலந்துகொண்ட நமது முழுமையான கூட்டங்களுக்குப் பிறகு, இதோ இன்று இரவு நாம் இங்கே இருக்கிறோம். அதைக் குறித்து யோசித்துப் பாருங்கள், நாடு முழுவதிலுமிருந்து பள்ளிப் பேருந்துகள் இந்த இடத்தில் மேலும் கீழும் நிறுத்தப்பட்டிருக்கும். கூடவே, இடத்தைச் சமாளிப்பதற்காகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருக்கும், அப்படியிருந்தும், மக்கள் ஒன்றாகக் கூடுவதை எங்கும் ஒழுங்குபடுத்தக்கூட முடியாது. நான் அப்போது ஒரு வாலிபப் பிரசங்கியாராயிருந்தேன். பார்த்தீர்களா? எங்களிடம் இருந்த அந்த ஆயிரக் கணக்கானவர்களில், இன்றிரவு இங்கே நாங்கள் மூன்று பேர் விடப்பட்டிருக்கிறோம்.

199 காசநோயால் மரணப் படுக்கையில் இருந்த சகோதரி வில்சனுக்கு நான் அழைக்கப்பட்டபோது, அவர் அங்கே இருந்தது எனக்கு நினைவிருக்கிறது, அவளுக்குப் பெரும் இரத்தப்போக்கு ஏற்பட்டு, படுக்கை விரிப்புகளும் தலையணை உறைகளும் இரத்தக் கறையுடன் மூலையில் கிடந்தன. பரிசுத்த ஆவியானவர் அந்த இரத்தப்போக்கை நிறுத்தியதும் எனக்கு நினைவிருக்கிறது. ஒரு சில நாட்கள் கழித்து நான் அவளுக்கு ஒஹையோ நதியில் பனிக்கட்டி தண்ணீரில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தேன், அவளை என்னுடைய திறந்திருந்த காரின் பின்னால், ஒரு சிறிய பழைய ரோட்ஸ்டரில் அமரச் செய்து, அவளை ஊடிகாவிலிருந்து கொண்டு சென்றேன்...அது சரிதானே? இதிலிருந்து...[சகோதரி வில்சன் சகோதரன் பிரான்ஹாமிடம் பேசுகிறார்—ஆசி.] ஆம்! சகோதரி ஹோப், என்னுடைய மனைவி, அங்கே சகோதரி, ஒரு சிறிய ரோட்ஸ்டரின் முன் இருக்கையில் இருந்தாள், பின்னால் என்னுடைய தாயாரும், சகோதரி ஸ்நெல்லிங் அவர்களும் இருந்தனர். நான் அவர்களுடைய புகைப்படத்தை எடுத்தேன், சகோதரி ஸ்நெல்லிங், அம்மா, மற்றும் எல்லோரும், திருமதி வெபர், திருமதி...என் மாமியார், அங்கே கீழே இருந்த நாங்கள் எல்லோரும், மற்றும் மேடா, அங்கே வெளியே நின்று கொண்டிருந்த ஒரு சின்னஞ்சிறு சிறுமி, இப்போது, நரைத்த தலையுடைய அந்தப் பெண்மணி. [ஒரு சகோதரி சகோதரன் பிரான்ஹாமிடம் பேசுகிறார்]

200 அவர்கள் எங்களுடைய முதல் பணத்தைப் பெற்றுக்கொள்ள ஒரு சிறு குறியிடப்பட்ட நாளை வைத்திருந்தது எனக்கு நினைவிருக்கிறது. ஹோப் மூலையில் நின்று கொண்டிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. அவள் வெறும் பதினாறு வயதுப் பெண்ணாக இருந்தாள்; இந்த அடையாள அட்டையை நீட்டியபடி இப்படி விற்றுக்கொண்டிருந்தாள். அவர்களுக்கு ஒரு அடையாள

அட்டை கொடுத்தாள். நீங்கள் உள்ளே வைக்கலாம்…

ஒரு குடிகாரன் தெருவில் வருகிறான்; அவன், “திருமதி, என்னை மன்னியுங்கள்!” என்றான். “நீ என்ன விற்கிறாய்?” என்று கேட்டான்.

“ஒன்றுமில்லை. எனவே நான் இந்த அடையாள அட்டையை உனக்கு அளிக்கிறேன்” என்றாள். மேலும், “அது சபைக்கான ஒரு நன்கொடை. நீங்கள் இங்கே நன்கொடைக்காக எதையாகிலும் வைக்க விரும்பினால், நாங்கள் இந்த நகரத்தில்…ஒரு கூடாரத்தைக் கட்டுவதற்குப் போதுமான பணத்தை சேகரிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்” என்றாள். “நீங்கள் எதையாகிலும் கொடுக்க விரும்பினால், நீங்கள் கொடுக்கலாம், ஆனால்…”

அதற்கு அவன், “என்னிடம் ஒன்றுமே இல்லை” என்றான்.

“எப்படியும் ஒரு அடையாள அட்டையை எடுத்துக்கொள்ளுங்கள்” என்று சொன்னாள். அவன் அதை எடுத்துப் பார்த்தான். ஒரு பக்கம், “நீங்கள் நித்தியத்தை எங்கே கழிப்பீர்கள்?” என்று கேட்கப்பட்டிருந்தது—கேட்கப்பட்டிருந்தது—கேட்கப்பட்டிருந்தது. அடுத்த பக்கத்தில் ஒரு கேள்விக்குறி இருந்தது. “நீங்கள் நித்தியத்தை எங்கே கழிப்பீர்கள்?” ஒரு கேள்வி.

அவன் பின்னால் தடுமாறி, அதைப் பார்த்தான்; அவன், “திருமதி, நீங்கள் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறீர்களே!” என்றான்.

அவள், “ஆனால் அது தீர்க்கப்பட வேண்டும்!” என்றாள். அது உண்மை. அவள் இன்றிரவு திரைக்கு அப்பால் சென்றுவிட்டாள். அவள் கடைசியாகக் கூறின வார்த்தைகள் எனக்கு நினைவிருக்கிறது. நான் அவளிடம் கூறியது எனக்கு நினைவிருக்கிறது; எனக்கு அது நினைவிருக்கிறது. ஆம், ஐயா!

201 ஏராளமான காலங்கள் உருண்டோடிவிட்டன. நாங்கள் வழக்கமாகக் கீழே நிற்பது…எங்களுக்கு ஒரு சபை உண்டாவதற்கு முன்பே, நாங்கள் இங்கே நின்று கொண்டு கரங்களைப் பற்றிப் பிடித்து இந்தப் பாடலைப் பாடுவது வழக்கம். என்னால் அதைக் கேட்க முடிகிறது. அப்பொழுது மிர்ட்டல் ஒரு சிறு பிள்ளையாயிருந்தாள். நான் சின்ன லெராயின் படத்தை அங்க நிற்கும்போது எடுத்தேன், ஒரு சின்னஞ்சிறு குட்டிப் பையனைப் போல.

கட்டுகிற இணைப்பு ஆசீர்வதிக்கப்படுவதாக
நம்முடைய இருதயங்கள் கிறிஸ்தவ அன்பில்;
ஒரே சிந்தையுள்ளவர்களின் ஐக்கியம்
அது மேலே உள்ளதைப் போன்றது.

202 அவர்களில் அநேகர் அவருடைய வருகைக்காக அப்பால் காத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் பாடும்போது.

…நாம் பிரிந்து செல்லும்போது,

அது நமக்கு உள்ளான வேதனையை அளிக்கிறது;
(நீங்கள் அந்தவிதமாக ஒருவரிலொருவர் நேசிக்கிறீர்களா?)
ஆனால் நாம் இன்னமும் இருதயத்தில் இணைந்திருப்போம்,
மீண்டும் சந்திப்போமென நம்புகிறோம்.

203 சகோதரன் ஃப்ளீமன், நீங்கள் அங்கே நெருக்கமாக இருக்கிறீர்கள், இல்லையா? நான் சும்மா யோசித்துக் கொண்டிருந்தேன், நாம் சகோதரன் ராயிடம் சென்றபோது உங்களை எனக்குத் தெரியும். உங்களுக்கு ஆட்காக்ஸ் நினைவிருக்கிறதா? எனக்குக் கென்னத் நினைவிருக்கிறார். அவருடைய சகோதரியின் பெயர் என்ன? [சகோதரன் பிளீமேன் சகோதரன் பிரான்ஹாமிடம் பேசுகிறார்—ஆசி.] நான் அவர்களுடைய புகைப்படத்தை வைத்துள்ளேன்; நாங்கள் எல்லோரும் எங்களுடைய கரங்களை ஒருவரையொருவர் கோர்த்துக் கொண்டு, அந்த இடத்திற்கு முன்னால் நின்று கொண்டிருந்தோம், வேதபண்டிதர் ராய் ஈ. டேவிஸ், போதகர். நான் சற்று முன்னர் அவைகளை பார்த்துக் கொண்டிருந்தேன். டாக் பழைய புகைப்படங்களைக் கொண்டு வந்தார். ஒருவிதமாக என்னை இங்கே மிகவும் வேடிக்கையாக உணரச் செய்தது. இப்பொழுது அந்த…அவர்களில் அநேகர் போய்விட்டனர். (புரிகிறதா?)—மரித்துவிட்டார்கள். நாமும் மரித்துப் போக இன்னும் அதிக காலம் ஆகாது. புரிகிறதா? ஆனால்…

ஆனால் நாம் பிரிந்து செல்லும்போது,
அது நமக்கு உள்ளான வேதனையை அளிக்கிறது;
ஆனால் நாம் இன்னமும் இருதயத்தில் இணைந்திருப்போம்,
மீண்டும் சந்திப்போமென நம்புகிறோம்.

204 சகோதரன் பாஸ்வர்த் உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர் கடந்து செல்வதற்குச் சற்று முன்பு, அவர் அறையில் எழுந்து, தரையினூடாக நடந்து சென்று, தன்னுடைய தகப்பனாருடனும், தாயாருடனும், கிறிஸ்துவண்டை மனமாற்றமடைந்த அவருடையவர்களுடனும் கரங்களைக் குலுக்கினார். நாற்பது வருடங்கள், அவர்கள் மரித்து நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகள் ஆகியிருந்தன. அவர்கள் அந்த அறையில் நின்று கொண்டிருப்பதை அவர் கண்டார், அவர்களை எல்லோரும் பார்க்கும்படி அவர் முயற்சி செய்துகொண்டிருந்தார். அது என்னவாயிருந்தது? அந்தக் காலையில் நான் தரிசனத்தில் இருந்த அந்தத் தேசத்திற்கு அந்த வயோதிகர் சென்றுகொண்டிருந்தார். அது உண்மை.

205 நான் அவர்களை அங்கே கண்டேன்; அவர்கள் மீண்டும் வாலிபமாயிருந்தனர். நாம் இன்னமும் இருதயத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம்; நாம் மீண்டும் சந்திப்போம் என்று நம்புகிறோம். அது உண்மை. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

206 நான் கட்டிடத்தைத் திரும்பிப் பார்க்க நேர்ந்தது, என்னுடைய கறுப்பர் இன நண்பர்களைக் குறித்துப் பேசினேன், சகோதரன் மற்றும் சகோதரி நாஷ் அங்கே பின்னால் அமர்ந்திருப்பதை நான் காண்கிறேன். நீங்கள் அங்கிருந்ததை நான் அறிந்திருக்கவில்லை. தற்செயலாகத் திரும்பிப் பார்த்தேன்; அவர்கள் வெகுதூரம் பின்னால் இருக்கிறார்கள். மேலும், இங்கே அமர்ந்திருக்கும் இந்த மற்ற சகோதரர்…எப்பொழுதாவது ஒருமுறை அங்கே பின்னால் எனக்குப் உரத்த பெரும் சத்தத்தில் பதில் கொடுக்கும் அந்தச் சகோதரன் தான் இங்கே உட்கார்ந்திருக்கிறாரா? அவருடைய பெயரை என்னால் ஞாபகப்படுத்த முடியவில்லை. சகோதரன் உட் அவரிடம் பேசிக்கொண்டிருக்கிறார் என்று கூறினார். அவர், “உங்களுக்குத் தெரியுமா? ஆவியானவர் என்னைத் தொடும்போது, நான் ‘ஏய்!’ என்று கூச்சலிட வேண்டும்” என்றார். மேலும், “என்னால் எந்தத் தொந்தரவும் இல்லை என்று நான் நம்புகிறேன்” என்றார். நீங்கள் “ஏய்!” என்று கூச்சலிடாதபோது தான், அது என்னைத் தொந்தரவு செய்கிறது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, சகோதரியே நான் உங்களை நேசிக்கிறேன். அது உண்மை.

207 சகோதரன் நாஷ், சகோதரி நாஷ், நான் உங்களை நேசிக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆம், ஐயா! நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் என் சகோதரனும் சகோதரியுமாயிருக்கிறீர்கள்.

208 அருமையான இனிய நண்பர்களே, மற்ற யாரேனும், அவர்களில் சிலரை நான் தவறவிட்டிருந்தால், உங்களுக்காக இங்கே அந்தக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. பரலோகத்தின் கதவுகளும் கூடத் திறக்கப்படும்.

ஆனால் நாம் இன்னமும் இருதயத்தில் இணைந்திருப்போம்,
மீண்டும் சந்திப்போமென நம்புகிறோம்.

என்…

இப்பொழுது, *என் விசுவாசம் உம்மையே நோக்கிப் பார்க்கிறது* என்று நாம் பாடுகையில். இப்பொழுது இன்னும் ஒரு முறை நாம் பாடுவோம். இப்பொழுது வீட்டிற்குச் செல்ல வேண்டிய நேரமாயுள்ளது.

என் விசுவாசம் உம்மையே நோக்கிப் பார்க்கிறது,
கல்வாரியின் ஆட்டுக்குட்டியே,
ஓ தெய்வீக இரட்சகரே!
நான் ஜெபிக்கும்போது இப்பொழுதே எனக்குச் செவிகொடும்,
என்னுடைய எல்லா பாவங்களையும் போக்கிவிடும்,
ஓ இந்நாள் முதற்கொண்டு நான்
முழுவதுமாக உம்முடையவனாய் இருப்பேனாக!

நாம் அந்தப் *பரிசுத்த, பரிசுத்த* மீண்டும் முயற்சிப்போமாக, நீங்கள் செய்வீர்களா? சகோதரியே, எங்களுக்கு ஒரு சுருதியைக் கொடுங்கள். "ஓ…" அது உங்களுக்குத் தெரியுமா? சகோதரி கெர்ட்டியும் மற்றவர்களும் இதைப் பாடியது உங்களுக்கு நினைவிருக்கிறதா?

209 "மேற்கிலே பகல் மரித்துக் கொண்டிருக்கிறது; பரலோகம் பூமியை ஆசீர்வதித்துள்ளது. பூமி ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது." எப்படியாய், சாயங்கால சூரியன் அஸ்தமிக்கும்போது, பறவைகள் தங்களுடைய கடைசி அழைப்பை விடுக்கின்றன, அப்படியானால் அது நம் ஒவ்வொருவரிடமும் வர வேண்டும். சாயங்கால நேரத்தில் என்று நான் நினைக்கிறேன், நீங்கள் எப்போதாவது கவனித்தீர்களா? காற்று அடிப்பதை நிறுத்திவிடும், பறவைகள் அமைதியடையும். பார்த்தீர்களா? அது உலகம் மரித்துக் கொண்டிருக்கிறது, நாளைக் காலையில் மறுபடியும் பிறக்க இந்த நாள் மரித்துக் கொண்டிருக்கிறது. சரி, நம்மால் முடிந்தால் இப்பொழுது நாம் அதை முயற்சிப்போமாக:

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், மகா
வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்.

லீ, ஒரு நிமிடம் இங்கே வாருங்கள். நான்—நான்—நான் அதை அந்தத் தாளத்தில் அறிந்திருக்கவில்லை என்று நான்—நான் நினைக்கிறேன். இசையின்றி நான் இதைப் பாட முயற்சிக்கட்டும். பார்த்தீர்களா? நாம் அதைப் பாட முடியுமா என்று பார்ப்போம். இப்பொழுது, எனக்குத் தெரியும்…நான் அதைத் தவறாகக் கொண்டிருக்கலாம். பார்த்தீர்களா? நீங்கள் ஒவ்வொருவரும் இப்பொழுது, எனக்கு இப்பொழுது, உதவி செய்யுங்கள்.

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், சேனைகளின்
மகத்தான…தேவன்.
வானமும் பூமியும் உம்மால் நிறைந்துள்ளது,
வானமும் பூமியும் உம்மைத் துதிக்கின்றன,
ஓ உன்னதமான கர்த்தாவே!

நீங்கள் அதை விரும்புகிறீர்களா? அது உங்களுக்கு ஏதோ ஒரு காரியத்தைச் செய்கிறதல்லவா? நாம் அதை மீண்டும் முயற்சிப்போமாக:

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், உன்னதமான
தேவனாகிய கர்த்தர்!
வானமும் பூமியும் உம்மால் நிறைந்துள்ளது,
வானமும் பூமியும் உம்மைத் துதிக்கின்றன,
ஓ உன்னதமான கர்த்தாவே!

210 நான் அதை விரும்புகிறேன், உங்களுக்குப் பிடிக்கவில்லையா? ஓ, நான் அந்த நல்ல பழைய பாடல்களை விரும்புகிறேன். நான் விரும்புகிற அந்தப் பாடல்களைக் குறித்து ஏதோ ஒரு காரியம் உண்டு. நீங்கள் விரும்பும் உங்களுடைய சிறு துண்டிக்கப்பட்ட

பாடல்கள் அனைத்தையும் நீங்கள் கேட்கலாம். அதை எனக்குத் தாரும்; நான் அதை விரும்புகிறேன். *கிழிக்கப்பட்ட திரையைக் கடந்து செல்*, அதைப் போன்ற இந்த மற்ற அழகான பாடல்கள்; எனக்கு அந்தப் பாடல்கள் பிடிக்கும். பாடுவது ஆராதனையின் ஒரு பாகம் என்று நான் நினைக்கிறேன் (ஆம், ஐயா!), கர்த்தருக்குத் துதிகளைப் பாடுதல்.

211 சரி, நம்முடைய கலைந்து செல்லுதலுக்காக, இப்பொழுது, *இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்* என்ற பாடல். இப்பொழுது நாங்கள் நிற்கையில் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

> இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்,
> துன்பமும் துயரமுமான பிள்ளையே;
> அது உங்களுக்குச் சந்தோஷத்தையும் ஆறுதலையும் அளிக்கும்,
> ஓ, நீங்கள் எங்குச் சென்றாலும் அதைக் கொண்டு செல்லுங்கள்.
>
> விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமையானது!
> பூமியின் நம்பிக்கையும் பரலோகத்தின் மகிழ்ச்சியுமாம்;
> விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமையானது!
> பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின் மகிழ்ச்சியுமாம்.

இப்பொழுது இந்தச் சரணத்தை நான் விரும்புகிறேன், அது இப்பொழுது உங்கள் எல்லோருக்குமான ஒரு எச்சரிக்கையாயுள்ளது. என்ன செய்வது?

> இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்,
> ஒவ்வொரு கண்ணிக்கும் கேடயமாக; (கவனியுங்கள்!)
> சோதனைகள் உங்களைச் சுற்றி சூழும்போது, (நீங்கள் என்ன செய்ய வேண்டும்?)
> ஜெபத்தில் அந்தப் பரிசுத்த நாமத்தை அப்படியே உச்சரியுங்கள்.
>
> விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமையானது!
> பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின் சந்தோஷமும்;
> விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமையானது!

பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின் சந்தோஷமுமாம்.

நாம் இப்பொழுது நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!
நாம் இயேசுவின் பாதத்தில் சந்திக்கும் வரை; (நாம் சந்திக்கும் வரை)
நாம் சந்திக்கும் வரை!

[யாரோ ஒருவர், "நீங்கள் "ஜெபத்தில் என்னை நினைவு கூருவீர்களா?" என்று கேட்கிறார்.—ஆசி.]

கர்த்தராகிய இயேசுவே, என் அருமை சகோதரனை ஆசீர்வதியும், இப்பொழுது இயேசுவின் நாமத்தில் அவரைச் சுகப்படுத்தும். கர்த்தாவே, அதை அருளும்.

64-0830E கேள்விகளும் பதில்களும் #4
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Voice Of God Recordings, India Office
19 (New No: 28) Shenoy Road, Nungambakkam
Chennai 600 034, India
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org